வாரப் பதிப்பு விலை சதம் 25

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்

SUTANTIRAN

194 A, BANDARANAIKE STREET, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.




புத்தகம் 19 | திருவள்ளுவர் ஆண்டு 1996 ஆனித் திங்கள் 6-ம் நாள் (20—6—1965) ஞாயிற்றுக்கிழமை ஸபர் 19 | இதழ் 4

# சிங்கள முன்னுரையுடன் தமிழ் பாட நூல்கள்

## மொழித் திணைக்களத்தில் தீவிரவாதிகளின் விஷமம்

அரசகரும மொழித் திணைக்களம் வெளியிடும் தமிழ்ப்பாட நூல்களுக்கு இதுவரையும் இல்லாத முறையில் நூன்முகம், பதிப்புரை முதலான வற்றை சிங்களத்தில் எழுதிப் புகுத்தும் முயற்சிகள் நடைபெறுவதாக அறியப்படுகிறது. இம்முயற்சிக்கு மொழித்திணைக்களத்தின் முக்கிய பதவிகளில் உள்ள சுதந்திரக்கட்சித் தீவிரவாதிகளே காரணம் என்று நம்பப்படுகிறது. தேசிய அரசாங்கத்திற்கு இக்கட்டான நிலையை உருவாக்க வேண்டுமென்ற நோக்கத்துடனேயே இம்முயற்சியில் இவர்கள் இரகசியமாக இறங்கியிருப்பதாக இத்திணைக்கள வட்டாரங்களில் பேசப்படுகிறது.

அரசகரும மொழித் திணைக்களத்தில் நடைபெற்ற தமிழ் ஒழிப்பு நடவடிக்கைகளையும், இத்திணைக்களம் தீவிர சிங்களவாதிகளின் வேட்டைக்களமாய் சுதந்திரக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் இருந்துவந்ததும் தமிழ்பேசும் மக்கள் அறிந்ததே.

தேசிய அரசாங்கம் உருவாகிய பின்னர் தமிழரசுக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் எடுத்த நடவடிக்கைகளின் பயனாக இத்திணைக்களத் தமிழ்நூல் வெளியீட்டுப் பகுதியில தமிழுக்கு உரிய இடம் கொடுக்கப்பட்டது.

கிளிநொச்சித் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. கா. பொ. இரத்தினம் இத் திணைக்களத்தில் பல மாற்றங்கள் செய்யவேண்டுமென்றும் குறிப்பாக தமிழ் நூல் வெளியீட்டுப் பகுதிக்கு புதிய உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்படவேண்டுமென்றும், கடந்த அரசாங்க காலத்தில் வேண்டுமென்று தமிழில் மொழிபெயர்க்கப்படாத ஆங்கில நூல்களை உடன் மொழிபெயர்க்க நடவடிக்கை எடுக்கும்படியும் நிதி அமைச்சரிடம் வற்புறுத்தியிருந்தார்.

திரு. இரத்தினத்தின் ஆலோசனைகளை அமுல் நடாத்தப்படுவதற்கான சில ஆரம்ப முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்ற அதே நேரத்தில், மறுபுறத்தில் அம் முயற்சிகளை மட்டம் தட்டும் வேலைகள் மறைமுகமாக நடைபெற்று வருகின்றதாம்.

மொழித் திணைக்களத்தைச் சேர்ந்த தீவிர சிங்களவாதிகளான மேலதிகாரிகள் இப்பொழுது தமிழ் மொழியையும், தமிழ் இனத்தையும் அவமானப்படுத்தும் முறையில் செயற்படத் தொடங்கியுள்ளார்கள் என அறியப்படுகிறது. தமிழ்ப் பாட நூல்களுக்கு இதுவரையும் இல்லாத முறையில் நூன்முகம், பதிப்புரை முதலியன சிங்களத்தில் எழுதிப் புகுத்தும் முயற்சிகள் நடக்கின்றனவாம்.

### மொழிநடை

இந்த திணைக்களம் ஆரம்ப காலத்தில் வெளியிட்ட நூல்களின் உரைநடை நல்ல செந்தமிழ்நடையாக அமைந்துள்ளது என ஈழத்தும், தமிழ் நாட்டும் அறிஞர்கள் பாராட்டியுள்ளார்கள். இத் திணைக்களத் தமிழ்ப் பகுதி முன்னர் வெளியிட்ட தனித் தமிழ் ஆட்சிச் சொற்களையும், கலைச் சொற்களையும் தமிழ் நாடு, மலேசியா போன்ற நாடுகள் பின்பற்றியுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். ஆனால் இப்பொழுது வெளிகுயாம் நூல்கள் பழைய மதிப்பையும், புகழையும் கெடுத்து தமிழ் மொழியின் தனித் தன்மையையும், சிறப்பியல்புகளையும் சிதைக்கும் முறையில் வேண்டுமென்றே அளவின்றி சமஸ்கிருதச் சொற்கள் புகுத்தப்படுகின்றன. இந்த உண்மையைப் பல தமிழறிஞர்கள் சுட்டிக்காட்டிக் குறைப்பட்டுள்ளார்கள்.

சிங்களத்தில் மொழி பெயர்க்கப்பட்ட நூல்களிலும் பார்க்க தமிழ் நூல்களின் விலை ஒன்றரைப் பங்கு மேலாக இருப்பதாகவும் பல மாணவர்கள் குறைப்பட்டுள்ளார்கள். மொழித் திணைக் களத்தில் உள்ள குறைபாடுகளை ஆராய்ந்து சீர்திருத்தும் முயற்சியிலும், தமிழ்நூல் வெளியீட்டுப் பகுதியைக் காக்கும் பணியிலும் தமிழரசுப் பாராளுமன்ற உறுப்பினர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இத் திணைக்கள தமிழ் மொழி பெயர்ப்பாளர் ஒருவர் கருத்துத்தெரிவித்துள்ளார்.

### இரத்தினம் கருத்து

தமிழ்ப் பாட நூல்களுக்கு சிங்களத்தில் முகவுரைப்பதிப்புரை எழுதித் திணிக்கும் முயற்சி பற்றிய செய்தியை திரு. கா. பொ. இரத்தினத்

(9-ம் பக்கம் பார்க்க)

## சிங்களம் படிக்காதவர் பதவி உயர்வு பெற்றார்

தற்காலிக ஆடிட்டர் ஜெனரலாக வட்டுக்கோட்டையைச் சேர்ந்த திரு. அம்பலவாணர் பொன்னையா நியமிக்கப்பட்டுள்ளார். ஆடிட்டர் ஜெனரல் திணைக்களத்தில் சிங்களத்தகைமைபெறுவும் பெறுத நாலு உயர்தர தமிழ் அதிகாரிகளில் திரு. பொன்னையாவும் ஒருவர். இவரின் நியமனத்திற்கு எதிராக இருந்த தடைகளை அரசாங்க நிர்வாக சேவையாளர் சங்கம் எடுத்த துணிச்சலான நடவடிக்கைகள் முறியடித்துள்ளன.

ஆடிட்டர்-ஜெனரல் திரு. பி.எல்.டபிள்யூ. பெர்னாண்டோ வெளிநாடு சென்றுள்ளதன் காரணமாக திரு. பொன்னையா தற்காலிக ஆடிட்டர்-ஜெனரலாக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் சாதாரண ஒரு எழுதுவினைஞராக அரசசேவையில் சேர்ந்து முப்பத்தியெட்டு வருடகாலம் சேவைபுரிந்து படிப்படியாக முன்னேறியுள்ளார்.

தமிழ் அரசாங்க ஊழியர்கள் சிங்களம் படிக்கவேண்டுமென்ற நியதியிருந்த போதும் இவர் அதையேற்க மறுத்து வந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. சிங்களத் தகைமை பெறுத காரணத்தினால் கடந்த ஆண்டு இவர்ஆடிட்டர்-ஜெனரலாக நியமிக்கப்பட்டிருக்கவேண்டிய பதவி உயர்வை இழந்தார்.

தற்காலிக ஆடிட்டர்ஜெனரலாக இவர் நியமிக்கப்படுவதை சில வட்டாரங்கள் விரும்பவில்லையாம். ஆனால் அரசாங்க நிர்வாக சேவையாளர்கள் தற்காலிகமாக ஒருவரை நியமிக்காது விடுவது சம்பிரதாயத்திற்கு முரணானது என்று சுட்டிக்காட்டிய பின்னரே திரு. பொன்னையா நியமிக்கப்பட்டாராம்.

## பண்டிதரின் சாதனை

கிளிநொச்சித் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு.கா,பொ. இரத்தினம் அவர்கள் இத்திங்கள் 16ம் நாள் புதன்கிழமை நடைபெற்ற பாராளுமன்ற அரசாங்கக் கட்சிக் குழுக் கூட்டத்தில் மூன்று தீர்மானங்களையும், பாராளுமன்றத்தில் நான்கு தீர்மானங்களையும் முன்மொழிந்து இலங்கைப் பாராளுமன்றத்தின் வரலாற்றில் ஒரு புதிய சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

அரசாங்க இலகாக்களின் மொழிக்கொள்கை சம்பந்தமாகவும், தொகுதி இணைப்புக் குழுபற்றியும் திரு. இரத்தினம் அரசாங்கக் கட்சிக் குழுக் கூட்டத்தில் சமர்ப்பித்த தீர்மானங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. அன்று பிற்பகல் நடைபெற்ற பாராளுமன்றத்தில் கிளிநொச்சித் தொகுதியின் தேவைகள் சம்பந்தமாக திரு. இரத்தினம் கொண்டுவந்த நாலு தீர்மானமும் ஏற்றுக்கொள்ளப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்,

## சம்பள உயர்வுக்கு சிங்களம் வேண்டாம்

### துறைமுக தொழிலாளருக்கு அமைச்சர் கடிதம்

துறைமுக நாவாய் இயக்குனர் கழகத்திற்கு அமைச்சர் திரு. வி. ஏ. சுகததாசா எழுதிய கடிதம் ஒன்றில் சிருங்குகள் சிங்களத் தகைமை பெறுத போதிலும் அவர்களுக்குச் சம்பள உயர்வு வழங்கப்படுமென்று தெரிவித்துள்ளார்.

கொழும்புத் துறைமுகத்தில் கடமையாற்றும் சிருங்குகள் சிங்களத் தகைமையின்றிப் பதவி உயர்வு பெற்று வந்தபோதிலும் அவர்களின் சம்பள உயர்வு நிறுத்தப்பட்டிருந்தது. இதுபற்றி தேசியமய சேவைகள் அமைச்சர் திரு. வி. ஏ. சுகததாசாவுக்குத் துறைமுக நாவாய்இயக்குனர் கழகம் கடிதம் ஒன்று அனுப்பியிருந்தது.

அமைச்சருக்கு துறைமுக நாவாய் இயக்குனர் கழகம் எழுதிய கடிதத்தில் சிருங்குகளுக்கு சிங்கள அறிவு வேண்டியதில்லையென்றும், அதிலும் 1956-ம் ஆண்டிற்கு முன்னர் பதவியில் சேர்ந்தவர்களுக்கு சம்பள உயர்வு நிறுத்தப்பட்டிருப்பதாகவும் அவர்களின் சம்பள உயர்வைக் கொடுக்க ஆவன செய்யுமாறும் கேட்டிருந்தார்கள்.

துறைமுக நாவாய் இயக்குனர் கழகத்திற்கு அமைச்சர் எழுதிய கடிதத்தில் பழைய சேவையாளர்களான சிருங்குகள் சிங்களத் தகுதி பெறுமலே சம்பள உயர்வைப் பெறத்தகுதியுடையவர்கள் என்று குறிப்பிட்டுள்ளாராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்



# அங்கமெல்லாம் நெருஞ்ச மச்சான்

ஏ.பி.வி. கோமஸ்

அந்தப் பக்கமாக யாரோ வரும் அரவம் கேட்டது. தயங்கினான் அவன். அங்கு வந்தது யார். ஓ...ஓ 'நம்ம வெள்ளையம்மாவா. வா. வா. வா. என்ன வெள்ளையம்மா, ஒங்கிட்ட கொஞ்சம் சுண்ணம்பு இருக்குமா? இந்த பொடிச்சி லச்சுமி கிட்ட இல்லியாங். இருந்தா கொஞ்சம் தாவேன்' என்றான் ஒன்றும் தெரியாதவன் போல் கறுப்பண்ணன். ஓ, ஓ... சுண்ணம்புதான் கேட்டுக்கிட்டிருக்கியா...உம்... இந்தா சுண்ணம்பு' என்று தன் வெற்றிலைப் 'பக்கறையை' எடுத்து அதில் ஒரு டப்பியிலிருந்த சுண்ணாம்பை எடுத்துக் கொடுத்தாள் வெள்ளையம்மா. அவளும் குளிக்கவிட்டுத் தன் லயம் நோக்கித்தான் போய்க் கொண்டிருந்தாள். அவள் இருந்ததும் நம் லச்சுமியிருந்த அதே லயத்தில்தான் கடைசி காம்பாராவில், அவள் போய்விட்டாள். லச்சுமிக்கு ஏதோபோல் இருந்தது. 'இந்த வெள்ளையம்மா பெரிய வாயாடியாயிற்றே, குதுக்கார வெள்ளையம்மாயில்லியா அவள். அவள் போய் என்னென்ன சொல்லி வைக்கப் போகிறாளோ' என்று பயந்தாள், அவளும் கண்ணாலே குறிசொல்லிவிட்டு ஒரே ஓட்டமும் நடையுமாகப் போய்விட்டாள், தன் லயம் நோக்கி; கறுப்பண்ணனும் பயந்தானெனினும் அவனது புது அனுபவம் அவனை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியது. ஆனால்...

அடுத்த நாள் காலையில் வேலைக்கு வந்தவுடன் லச்சுமி வெள்ளையம்மாளைப் பார்த்துக் கேட்ட கேள்வியைப் பாருங்கள்...

'சுத்து கம்பி சேலைக்காரி
குதுகார வெள்ளையம்மா
சுண்ணம்பு கேட்டதுக்கு
தூத்திட்டியே
தோட்டமெல்லாம்.'

அடேயப்பா. அந்தத் தோட்டமெல்லாம் பரவி விட்டது இந்தநேற்றுநடந்த சங்கதி. பெண்கள் வாய்க்கு அவல் கிடைத்தால் போதாதா என்ன! அதுவும் இப்படிப்பட்ட விடயம் என்றால் சும்மா விட்டு வைப்பார்களா என்ன? அதுவும் லச்சுமி 'தான் குற்றவாளி அல்ல, சும்மா சுண்ணம்பு தான் கேட்டான்' என்று சொன்னாள். நம்புவார்களா பெண்கள்-தோட்டத்து மக்கள். இந்த விடயம் தோட்டம் பூராவும் பரவிவிட்டது காட்டுத் தீபோல் அன்றைய தினத்திலேயே. அன்று...

பீலிக்கரையில் சேர்ந்தது பெண்கள் கூட்டம். இன்று லச்சுமி இன்னும் வரவில்லை. வரும் நேரமும் ஆகிவிட்டது. பெண்கள் கூட்டம் தங்களுக்குள்ளே அன்றையத்தினத்தின் முக்கிய செய்தியாகிய கறுப்பண்ணன்—லச்சுமி பற்றிய விடயத்தை ஆராயத் தொடங்கியது. அந்நேரம் நம் லச்சுமி சாயச் சேலையுடுத்தி அங்கு வருகிறாள் சாயந்திர வேளையில். பீலிக் கரையில் தன் குளிப்பை நடத்துவதற்கு வந்தாள், அந்த வேளையில் வெள்ளையம்மாள் லச்சுமிக்குப் படும்படியாகத் தொடங்கினாள். அவள் வெளிப்படையாகச் சொல்லாமல் சொல்கிறாள் இப்படி. ஆம். கைக்கெட்டியது வாய்க்கெட்டவில்லையாம் லச்சுமிக்கு. வெள்ளையம்மாள் சொன்னாள்...

'சாயச் சவரச் சேல
சாத்த ஞாரு கம்பிச் சேல
சுத்துக்கு எட்டலேனு
சிந்துறளே கண்ணீர...'

எவ்வளவு லாவகமாகச் சொல்லிவிட்டாள் பாருங்கள். சுத்துக்கு எட்டவில்லை என்று கண்ணீரைச் சிந்துகிறாளாம் லச்சுமி. ஆமாம். கண்ட பொருள் கையில் வந்து அகப்படாத போது அழாமல் என்ன செய்வாள். இதற்கு இன்னும் பக்க தாளம் பாடுவதுபோல இன்னொருத்தி தொடங்கினாள். அவளும் என்ன, வெந்த புண்ணில் வேல் நுழைக்கத் தான் பார்த்தாள். நம் லச்சுமிக்காக, முட்டையிட்டு சுட்ட பணியாரம், நல்ல அருமையான கோமிகூட்டு வாழைப்பழம், தேனால்செய்யப்பட்ட தீனி இவையெல்லாம் கிடைத்திட இருந்தன. ஆனால், இவைகளை கையில் எடுத்து வாயில் இட்டுச் சாப்பிடாமலேயே அவள் திருடிச் சாப்பிட்டாள் என்று கெட்ட பெயர் எடுக்கவேண்டியதாயிற்று. என்ன செய்வாள்! பாவம்! இந்த கருத்துப்பட இன்னொருத்தி மிக அழகாகச் சொல்வதைப் பாருங்கள்.

'முட்டபோட்டு
சுட்ட ரொட்டி
மொத நம்பா
கோமிக்கூட்டு
தேனால செய்த தீனி
திங்காம பேரெடுத்தேன்.'

இது சரியாக லச்சுமி முதலில் சொன்ன அந்த 'சுண்ணம்பு கேட்டதற்கு தூத்திட்டியே தோட்டமெல்லாம்' என்று சொன்னதற்குப் பதில் சொல்வதுபோல் இருந்தது. 'அடேயப்பா. அள பாரு அள. கன்னிப் பொண்ணு. இவளுக்கு ஒன்னுந் தெரியாது. இந்தப் பூனையும் பால் குடிக்குமா என்ற தோரணையில் பேசுவதைப்பாருஎன்று தொடங்கினாள் ஒருத்தி. அவளும் தன்னின் சுடு சொற்களால் லச்சுமியைச் சுட்டுப் பொசுக்கத் தொடங்கினாள். அவள் சொன்னது லச்சுமியின் மனதைப் பெரிதும் வருத்தியது. இதுவரையும் பீலிக்கரையில் நின்று குளித்துக் கொண்டு இருந்த லச்சுமி தன் ஈர உடையை மாற்றிக் கட்டிக்கொண்டாள். ஒற்றைப் பட்டையாகக் கட்டிக்கொண்டு முந்தானையை எடுத்துப் போர்த்திக்கொண்டாள். அவளின் வாளிப்பான உடல் அந்த ஈர உடையின் ஊடாக அழகைக் கொட்டிக்கொண்டிருந்தது. செதுக்கப்பட்ட சிலைபோல் காட்சி தந்தன சிலவளைவுகளும் நெளிவுகளும். ஆம். அந்தக் கடைசிப் பெண் சொன்னது இதுதான். லச்சுமியின் மனதை சுட்டெரித்தது இது தான்...

'ரோட்டோர வீட்டுக்காரி
ரோசாப்பு சேலக்காரி
காதோரக்
கொண்டைக்காரி
காரியத்தில்
கெட்டிக்காரி...'

இந்த 'காரியத்தில் கெட்டிக்காரி' என்று சொல்லப்பட்டதுதான் அவளைப் பெரிதும் வருத்தியது. 'காரியத்தில்' என்று சொன்னது மிக மிக மனதை வருத்தியது. 'காரியம்' என்பது மிகவும் மோசமானதல்லவா என்று எண்ணினாள். எண்ணிக் கொண்டே நடக்கத் தொடங்கினாள். ஆம். இன்றுபொட்டு கூட இட்டுக்கொள்ளவில்லை. காலையில் கோபத்தோடு வந்த அவசரத்தில் பொட்டு எடுத்துக்கொண்டு வரக்கூட மறந்துவிட்டாள். கோபமும் மனவருத்தமும் அன்றுட வேலையை முற்றாக மாற்றி விடும்தானே? தன் செய்கையில் தடுமாற்றத்தைக் கொணரும்தானே! செய்வதே இன்னதென்று தெரியாதுதானே! அவசர அவசரமாக நடக்கத் தொடங்கினாள் தன் வீட்டை நோக்கி. ஆனால், ஈரப் புடவை அவள் நடையைத் தடுத்தது. சேலை முழங்காலுக்குச் சற்றேற கீழேயிருந்தாலும்கூட அதிலிருந்த நீர்ப்பசை அவள் நடையைக் கட்டுப்படுத்தியது.

அவள் சற்று தயங்கித் தயங்கியே நடந்தாள். ஏன் அப்படி? ஆம். இன்றாம் அவன் வழியில் அகப்பட்டுக்கொள்ளக்கூடாது என்று எண்ணினாளோ என்னவோ. அவள் நினைத்தது நடக்கத்தான் செய்தது. ஆம். அவன் அதே 'லெக்கில்' இருந்தான். வருமீன் வருவரையும் காத்திருந்தான். வந்தது மீன். நீரில் விளையாடித்தான் வந்தது. ஆனால் அந்தக் கயல்விழியில் சோகம் கப்பிக் கிடந்தது. அவனோ, அதைப்பற்றிக் [illegible] அவளைக் கண்டவுடனே பின்னாலே வந்து தன் கையில் வைத்திருந்த மலர்க்கொத்தைக் காட்டி, 'லச்சுமி. நீ தேத்து வச்சிருந்த அரளிப் பூவு நல்லா இருக்கல்ல. அதனாலே இதோ பாரு...

'கொத்தமல்லித்
தோட்டத்திலே
கொழுந்து கிள்ள
போறப் பெண்ணே
கொண்டு வந்தேன்
மல்லிகைப் பூ
கொண்டையிலே
சூட்டிவிட.'

இதைக் கேட்டவுடன் அவளுக்கு ஆச்சரியமாயிருந்தது. சோகம் இருந்தாலும் சிந்திக்கத் தொடங்கினாள். 'இவன் ஏன் நாம் இந்தப் பன்வத்தைத் தோட்டத்திலிருக்க 'கொத்தமல்லித் தோட்டம்' என்று சொல்கிறான். அங்கே கொழுந்து கிள்ளப் போறேனாமே' என்று ஆச்சரியப்பட்டாள். அவள் தயங்கி நிற்பதைக் கண்ட கறுப்பண்ணன் 'லச்சுமி. ஒன்னு சொல்றன். இன்னைக்கி காலையிலே உன்ட அப்பாவ கண்டன். எல்லா விடயமும் கேட்டாரு. நானும் உண்மைய சொன்னன். ஆனா அவரு இந்தத் தோட்டத்து ஆள்களுக்குப் பயந்து நாளைக்கே கொத்தமல்லித் தோட்டத்துக்குப் போகப் போறேன்னு சொன்னாரு. உன்னையும் கூட்டிக்கொண்டுதானே போறாரு. அதுதான் அப்படிச் சொன்னேன்' என்றான். உடனே அவளுக்கு விளங்கி விட்டது. மனம் வருந்தினாள். ஏதோ தன்னைக் கொஞ்சம்தேற்றிக்கொண்டு அவளும் சொல்லத் தொடங்கினாள்...

'கண்நிறைஞ்சமச்சானுக்கு
கழுத்து நீட்டக்
காத்திருக்கன்
குங்குமமும் மல்லிகையும்,
எனக்கு
குறையாமல்
கெடச்சிடுமா...?'

என்று கேட்டாள். இது அவனை சாந்தப்படுத்துவதற்காகவே கேட்டாள். சும்மா கேட்டு வைத்தாள். அவள் மனதில் அந்நேரம் சோகம் கப்பிக்கிடந்தது உண்மைதான். அவனின் நிலையும் அப்படித்தான் இருந்தது என்பதையறிந்தே அவனைத் தேற்றுவதற்காகக் கூறினாள் இப்படி. அவன் மனம்சந்தோசப்பட்டதாகத் தெரியவில்லை. அதற்கு மாறாகஅவளைஏதோ ஒரு மாதிரிப் பார்க்கத் தொடங்கினான். பார்த்தான், மனதில் எதையோ மிக சிந்திப்பதுபோல் காட்சியளித்தான். அவள், அவன் சோகத்தால் பீடிக்கப்பட்டிருக்கிறான் என்பதை அறிந்துகொண்டாள். கேட்ட கேள்விக்குப் பதில் பெறுவதைப் பற்றியே மறந்துவிட்டாள். அவனே மீண்டும் தொடங்கினான்.

'நேசக் கிளியே எந்தன்
நெடும் இதழ்த்
தாளம் பூவே
சொன்னால் பொறுக்குமா
உன்
அப்பன் சொன்ன
வார்த்தைகளை'

இப்படி அவன் கேட்டான். இது அவளுக்கு இன்னும் வருத்தத்தைக் கொடுத்தது. ஏதோ பெரிய பேச்சுவார்த்தைகள் எல்லாம் நடந்திருக்கிறது என்று நினைத்தாள். என்ன நடந்திருக்க வேண்டும் என்று எண்ணிப்பார்த்தாள். அவளால் யூகித்துக் கொள்ளமுடியவில்லை. என்ன நடந்தது என்று அறிய அவல் கொண்டாள். ஆதலால் தனக்கிருந்த வெட்கம், அச்சம் இவை எல்லாவற்றையுமே மறந்து அவனுடன் சரளமாகப் பேசத் தொடங்கினாள். மெல்ல அவள் பாவித்தசொற்களும் மாறத் தொடங்கின. ஆம். அவனை நல்ல அந்தத் தமிழ்ச் சொல்லாமல் அத்தான் என்பதின் கொச்சைத் தமிழாம் 'மச்சான்' என்று அழைக்கத் தொடங்கினாள். ஆம். அவள் கேட்டாள் இப்படி.

'கண்ணில் நெறஞ்ச
மச்சான்
கருத்தை கவர்ந்தமச்சான்
என் அப்பன் தரும்
தொல்லைகளை
என்ன வென்று
எடுத்துரைப்பாய்.'

கண்ணில் நிறைந்து கருத்தைக் கவர்ந்தவன் அவன் என்று ஒப்புக்கொண்டாள் அந்தக் கன்னிப் பெண்மயிலாளும். அவன் அவளின் கருத்தைக் கவர்ந்து அவளின் அங்கமெல்லாம் நிறைந்திருந்தான். உனக்கு என் அப்பன் என்ன சொன்னான். 'உனக்காக என் அப்பனைக் கூட எதிர்க்கத்தயாராயிருக்கிறேன்' என்பதுபோல்இருந்தது அவள் கேட்டதொனி. 'நீ என்ன சொல்கிறாயோ அப்படியே நானும் செய்கிறேன்' என்று அவள் வாய் திறந்தே சொல்லிவிட்டாள் என்றால் நாம் வேறு என்னத்தைக் கூறுவது. அவனுடன் வேறு எங்காவது ஓடிப்போவதற்குக்கூட தயாராயிருந்தாள் அவள். அவ்வளவு தூரம் அவள் அன்புகொண்டு விட்டாள்.

கறுப்பண்ணன் லட்சுமியிடம் அவள் தந்தை சொன்னவைகளைச் சொல்ல முற்பட்டான். அதாவது அவன் சொன்னது என்னவென்றால்...'லச்சுமி, ஒன் அப்பா ஒன்னையுங் கூட்டிக்கிட்டு

(14-ம் பக்கம் பார்க்க)

## 'எழில் நிலவே'!

— நாவலர்க்கேசரி —

அமுதம் உனது அழகொளியாம்-அந்த
அழகில் தவழ்வேன் நினைவலையால்
குமுதம் நினது காதலியோ-இன்பக்
குளிர்மை செய்த கொடுநிலையோ
உனது வரவு நெஞ்சிடையே-நல்
உறவை வளர்க்கும் தவறிலையே!
எமது நினைவு மலர்ந்திடவே-எங்கும்
இனிமை தவழ ஒளிதருவாய்.

அல்லி அணைக்கக் காத்திருந்தாள்-அவள்
அங்கம் இனிக்க அணைத்துவிடு
ஒல்லி உருவம் அவளமைப்பு-உந்தன்
ஒளியை உண்டு பெருத்திடுவாள்
எல்லை யற்ற நின்னெழிலில்-இந்த
உலகை மறந்து இருந்திடுவேன்
சொல்லில் எழுத முடிந்திடுமா-இன்பச்
சுவையை உண்டு நெஞ்சினிக்கும்

இன்பம் தருவாய் இளங்காதல்-இரு
உள்ளம் பிணைக்க வழிசெய்வாய்
துன்பம் சுமந்த இதயமடா-கொடுந்
துயரை மறந்து வாழ்ந்திடுமே!
அன்பும் அருளும் அலர்ந்திடுமே-அந்த
அலர்வில் உயிர்கள் வாழ்ந்திடுமே!
என்பும் உருகும் உன்குளிரால்-இன்ப
உலகந் தருவாய் எழில்நிலவே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆர். கே. திருகோண
சுந்தரம்,
புதுவட்டக்கொடை.

கே: வட-கிழக்கு மாகாணங்களில் மொழி மாற்றம் ஏற்பட்டு எல்லாம் தமிழிலே செய்யப் படுமாயின, மலைநாட்டில் எல்லாம் சிங்களத்திலா நடைபெறும்?

ப: மலையகத் தமிழ் மக்கள் தங்களின் அலுவல்களைத் தமிழிலே செய்ய அனுமதிக்கப்படுவார்கள்.

கே: நான் இல்லையேல் தமிழுக்கு தனி அந்தஸ்து பெற முடியாது என்று கூறிய தனிப்பெருந் தலைவர் அவர்கள், தமிழரசுக் கட்சியின் முயற்சியால் தமிழுக்குத் தனி அந்தஸ்து கிடைத்து விட்டால், என்ன கூறலாமென நினைத்துக் கொண்டிருக்கிறார்?

ப: அந்தஸ்து கிடைக்காமற் செய்து விட்டால், சமாதானம் கூறவேண்டிய அவசியமே ஏற்படாதல்லவா? அதற்காகவே கட்சியின் முயற்சிகளை முறியடிக்கப் பிராயத்தனம் செய்கிறார்.

கே: இலங்கை இந்திய பிரச்சினையின் முடிவு எப்படியிருக்கிறதென்று கூற முடியுமா?

ப: இதுவரையுள்ள நிலைமை சிறிமா-சாத்திரி ஒப்பந்தத்தை அமுல் நடத்துவதுதான். பழைய நிலையில் மாறுதலில்லை.

ஃ

பி. எம். கருப்பண்ணன்,
புதுவட்டகொடை.

கே: தாலி கட்டிய மனைவி இறந்த பின் ஒருவர் திரும்பவும் வேறொருத்திக்குத் தாலி கட்டுவது சரியா?

ப: சரிதான்! ஏனெனில் மனைவி இறந்தாலும் அவர் இன்னும் உயிருடன் தானே இருக்கிறார்.

கே: தாழ்த்தப்படுபவனும் யார்? உயர்த்தப்படுபவனும் யார்?

ப: இருவரும் மனிதரே! உயர்த்தப்படுபவனால் தாழ்த்தப் படுகிறவனே தாழ்ந்தவன்! தாழ்த்தப்படுகிறவனால் உயர்த்தப்படுகிறவனே உயர்ந்தவன்!

ஃ

சுந்த. ஞானமுத்தன்,
கைதடி தெற்கு.

கே: சிறிமாவோ பண்டார நாயக்கா நான்கு மாதங்களின் பின் பிரதமராக வருவேன் என்று கூறுகிறாரே. அவரின் எண்ணம் பலிக்குமா?

ப: அவர் அப்படிக் கூறவில்லையென பின்னர் மறுத்துவிட்டார். இந்த அரசாங்கம் இன்னும் சிறிது காலம் ஆட்சிபுரிய வேண்டுமென்பதே தனது அவா என இப்பொழுது கூறத் தொடங்கியுள்ளார்.

ஃ

ஆர். பி, கண்ணன்,
புதுவட்டக்கொடை

கே: சிங்கள வெறி பிடித்த சிலர் வடை, தோசை எனக் கிண்டல் செய்கிறார்களே?

ப: வடையும், தோசையும் போஷாக்குள்ள உணவு என்பது அவர்களுக்குத் தெரியாது. இல்லையேல் வெறும் மாவுச் சத்து மட்டுமுள்ள இடியப்பத்தை இரவு பகலாகச் சாப்பிட்டுக் கொண்டு 'விட்டமின்' சத்து நிறைந்துள்ள வடை, தோசையை இழித்துரைப்பார்களா?

ஃ

'கன்னல் தமிழன்',
பலாங்கொடை.

கே: கல்விக் கூடங்கள் காமக் கூடங்களாகத் திகளாதிருக்க, மாணவர்களோ, மாணவிகளோ தங்கள் அங்கங்களை அடுத்தவர் ரசிக்கும் வண்ணம், ஆபாசமான ஆடைகளை எந்த சந்தர்ப்பத்திலும் அணியக் கூடாது; என்று கல்வி மந்திரி கட்டளை இடுவாரா?

ப: அதற்காகவே கலவன் பாடசாலையை ஒழித்துவிடலாமென மந்திரி திட்டமிட்டிருக்கிறார். அதற்கு முன்பு ஆசிரியர்கள் விசயத்தை ஒழித்துக்கட்ட முயற்சி செய்துகொண்டிருக்கிறார்.

ஃ

'தமிழ் நேசன்',
முல்லைத் தீவு.

கே: எனது நண்பர் ஒருவர் எப்பொழுது கதைத்தாலும ஆங்கிலச் சொற்களை அதிகமாக உபயோகிக்கின்றார். காரணம் என்ன?

ப: ஆயினும் இடையிடையே தமிழ் சொற்களையும் உபயோகிக்கிறாரல்லவா? அந்த அளவில் தமிழ் பிழைத்தது.

ஃ

கே. ஆர். விஸ்வய்யா,
எப்பாமை தோட்டம்

கே: சிறிமாவோபண்டாரநாயக்கா எங்கள் தொகுதிக்கு வந்து தேர்தற் பிரச்சாரம் செய்த பொழுது அவருடைய தாய் மொழியான சிங்களத்திலேயே பேசினார். அப்படியானல் ஏன் திரு. பொன்னம்பலம் மட்டும்தமிழில் பேசமாட்டேன் என்கிறார்?

ப: தொகுதியில் மட்டுமென்ன, பாராளுமன்றத்திலும் அவர்தம் தாய்மொழியிலேயே பேசுகிறார். திரு. பொன்னம்பலம் மக்களிடம் வந்து ஆங்கிலம் கலந்த தமிழில் பேசுகிறார். பாராளுமன்றத்திலோ அசல் ஆங்கிலத்திலேயே பேசி விடுகிறார்.

கனகலிங்கம், புங்குடுதீவு.

கே: நான் நன்றாகக் கற்றுவிட்டு ஒரு சிறிய கடையில் இழிவான வேலையிலிருக்கிறேன். இது எனக்கு அழகா?

ப: ஆகா! அழகு தான்! வேலையில் இழிவானதென ஒன்று கிடையாதே! நன்றாக எதைக் கற்றீர் என்றுதெரியவில்லையே!

ஃ

க. திராவிடத்தம்பி,
உந்துகொடை.

கே: ஜனநாயகம் என்று பெருமையாகப் பேசும் ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் ஏன் தேர்தலில் மார்க்சியவாதிகளை ஆதரித்தது?

ப: அவர்களும் ஜனநாயகம் பேசியதால்.

ஃ

சு. கைலநாதன்,
அளவெட்டி.

கே: 'மந்திரிமார் வந்தது பற்றி தங்களுக்கு அறிவிக்கவில்லையெனக் குறை கூறுகிறார்களே! இது கலியாண வீடா செத்த வீடா?' என்று கேட்கிறார் சிறீதரன் என்பவர்.

ப: கலியாண வீடுமல்ல, செத்த வீடுமல்ல—இது அரசியல் ஐயா, அரசியல்! அந்த நபருக்கு அரசியல் தெரியாது, பாவம்! அவருக்குத் தெரிந்ததெல்லாம் அந்த இரு வீடுகள் மட்டுத் தான். மந்திரிகள் வந்தது செத்த வீட்டுக்குமல்ல — கலியாண வீட்டுக்குமல்ல என்பதை அவருக்குப் புரியும்படியாகச் சொல்லி வையுங்கள்.

ஃ

எல். ஆர். எஸ். தீன்,
காலி.

கே: தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டதற்காக ஆசி

திருவாளர்
குயுக்தியார்
மே/பா சுதந்திரன்
த. பெ. இல. 1183
கொழும்பு-12.

இம் முகவரியைக் குறித்து தபால் அட்டையில் ஒட்டியனுப்பப்படும் வினாக்கள் மட்டுமே கவனத்திற்கு எடுக்கப்படும்.

ரியர்களைத் தற்காலிக வேலை நீக்கம் செய்வது பழிவாங்கும் செயலல்லவா?

ப: இல்லை! அவர்கள்செய்த குற்றத்தை அலட்சியம்செய்தல் பழிவாங்குவதின் ஆரம்பம். அவர்கள் செய்த குற்றத்தை மன்னித்தல் பழிவாங்குதலின் உச்சக் கட்டம். இவ்விரண்டையும் செய்யாமல் வேலை நீக்கம் செய்திருப்பதால் அது எப்படி பழிவாங்கும் செயலாக முடியும்?

ஃ

சி. மு. ஆறுமுகம்,
பதுளை.

கே: கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தில் ஊழல்களும் ஒழுங்கீனங்களும் மலிந்துவிட்டனவாம். இதைச் சுத்தம் செய்து பரிசுத்தமான ஸ்தாபனமாக்க என்ன செய்யலாம்?

ப: இதோ இரு அம்சத் திட்டமொன்று? 1. கூட்டு மொத்த விற்பன ஸ்தாபனத்தால் செய்யப்படும் இறக்குமதிகள் அனைத்தும் தனிப்பட்ட இறக்குமதியாளர்களிடம் கொடுத்துவிட வேண்டும். 2. கூ. மொ. வி. ஸ்தாபனத்தால் செய்யப்படும் பொருள் விநியோகம் முழுவதையும் தனிப்பட்ட வர்த்தகர்கள் வசம் ஒப்படைத்து விட வேண்டும்.

## செக்கு மாட்டு யோசனை

மொழிப்பிரச்சினையைத் தீர்க்க வட்டமேசை மாநாடு கூட்டப்பட வேண்டும் என்ற என்னுடைய ஆலோசனையைக் கேட்டு திரு. செல்வநாயகம் நடுங்குவதேன்?

—பொன்னம்பலம்

முதல் எங்கே முடிவு எங்கே என்று தெரியாத ரீதியில் வட்டமேசை வட்டவடிவமாகஅமைந்து விடும் அல்லவா? தொடங்கவும் முடியாமல், முடிக்கவும் தெரியாமல் தொல்லை கொடுக்கும் வட்டமேசையையிட்டு பயப்படுவதில் ஆச்சரியமில்லையே என்று செக்கு ஒன்றைச் சுற்றிச் சுற்றிப் பழக்கப்பட்ட மாடுகளின் சொந்தக் காரர் ஒருவர் ஒரு தினசரியின் நிருபரிடம் கருத்து வெளியிட்டார்.

## உரிமைப் பிரச்சினை

அரசாங்கத்துக்குச்சொந்தமான கட்டிடங்களில் குடியிருப்போருக்கு அக்கட்டிடங்களைச் சொந்தமாக்கிக் கொள்ளுவதற்கான ஓர் திட்டத்தை வீடமைப்பு மந்திரி ஜனப் எம். எச். முகம்மது ஆராய்ந்து வருகிறார்.

—செய்தி

இச்செய்தி வெளியாகியவுடன் அரசாங்கக் காரியாலயங்களின் ஓரங்களின் நிழலில் ஒதுங்கி



வாழும் சில கொழும்பு வாசிகள் தங்கள் தகுதியினையும் எடுத்துக் காட்டி அக்கட்டிடங்களுக்கு உரிமை கொண்டாடத் தலைப்பட்டுள்ளனராம்

## மலிவு விலை?

யாழ்ப்பாணத்தில் 45 இ. போ. ச. பஸ்கள் ரூ. 47000க்கு விற்கப்பட்டன.

—செய்தி

பூ...!இவ்வளவு மலிவு விலையில் பஸ் கிடைப்பதனால் பழையபடி பஸ் கம்பெனிகளை ஆரம்பித்து சேவையை நடத்த வழி கிடைக்காதா என்று பழைய பஸ் முதலாளி ஒருவர் அங்கலாய்த்தாராம்.

## யாருக்கு அதிஷ்டம்

அமைச்சர்களுக்கெனவாங்கப்பட்ட பென்ஸ் மோட்டார்கள் லொத்தர் விடப்படும்.

—செய்தி

முன்னாள் அமைச்சர்களே இந்த அதிஷ்டத்தில் ஒரு கைபார்த்து விடுவதெனத் தீர்மானித்துள்ளனராம்.

## பண்ணை விவகாரம்

பாற் சபைக்குச் சொந்தமான மோட்டார் வண்டிகள் பல ஒழுங்காகப் பாவிக்கப்படாமையினால் பழுதடைந்து விட்டன.

—செய்தி

மோட்டார் வண்டிகள் தானே! விட்டுத் தள்ளுங்கள். கிடைக்கும் பாலையே ஒழுங்காகப்பயன் படுத்த முடியாமல் சபை தடுமாறும் போது வண்டிகள் எம்மாத்திரம்? என்று ஒரு பாற்பண்ணையாளர் குறைப் படுகிறார்.

## த(ப்)பால் வண்டிகள்

தபால் இலாகாவுக்குச் சொந்தமான தபால் பட்டுவாடா செய்யும் மோட்டார் வண்டிகள் பிரயாணிகளையும் மரக்கறி, முதலிய பிரத்தியேகப் பொதிகளையும் சுமந்து செல்லுகின்றன.

—செய்தி

தந்திகள்எல்லாம்தபால் மூலம் அனுப்பப்படுவது சகசமாகி விட்டபடியால் தபால் ஏற்றும் வண்டிகளின் பொறுப்பும் மாறத்தானே வேண்டும். தந்தியே தபாலான பின்னர், [illegible] [illegible] வேண்டுமா?

# ஆசை அலைகள்

ஆயிரம் மோதும் உங்களது இதயங்களில்

**உதாரணமாக:**

பரீட்சையில் தேறவேண்டும்—பட்டம் பெற வேண்டும்—பதவி உயர வேண்டும்—பணம் சேரவேண்டும்—படும் துன்பங்கள், துயரங்கள் பனிபோல் மறைய வேண்டும்—பண்பிலா எதிரியை முறியடிக்க வேண்டும்-பழிவாங்கும் கண், வாய் திருஷ்டிக்குப் பரிகாரம் காண வேண்டும்—பாசமிக்க வாழ்க்கைத் துணை அமைய வேண்டும்—பலநாள் குடும்பத் தகராறு சுமுகமாகத் தீரவேண்டும்—

**அத்துடன்**

பல்நூறு பயனும் பலனும் பல்கிப் பெருக வேண்டுமென்ற

**ஆசை**

உங்களது இதயக் கடலங்களில்

**அலைகள்**

போல் மோதுண்டு நிற்கும்!

இவையனைத்தையும் தேவ அருளினாலும்-மந்திர பலத்தினாலும், ஞான சக்தியினாலும் நிறைவேற்றித்தர-

என்னை நேரில் சந்தியுங்கள்?

செவ்வாய் முதல் சனிவரை இருக்கும் விலாசம்:

## பி. எம். திசாநாயக்க

—மாந்திரிக கலாநிதி—

103, ஸ்ரீசங்கராஜ மாவத்த,
மருதானை — கொழும்பு.

ஞாயிறும், திங்களும் இருக்கும் விலாசம்:

**அருத எண்ணெய் தொழிலகம்,**
கண்டி ரோட், கம்பளை. போன்: 454.

குறிப்பு: கடிதங்கள் கம்பளை விலாசத்திற்கே எழுதப்பட வேண்டும்.
உங்களது அந்தரங்க விஷயங்கள் எக்காரணங்கொண்டும் வெளியிடப்படமாட்டாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருபதாம் நூற்றாண்டின் சாக்கிரத்தீசு

# ஈழத்துப் பெரியார் கந்தமுருகேசனார்

கந்தமுருகேசனார் ஒரு கல்விக்கடல். நல்ல செந்தமிழ் அறிஞர், பகுத்தறிவுவாதி, புரட்சிச்சிந்தனையாளர் என்றெல்லாம் அவர் புகழைப் பலர் பேசக்கேட்டபோதெல்லாம் எப்படியும் அவரைக் காணவேண்டும் கண்டு உரையாடவேண்டும் என்ற ஆவல் என் உள்ளத்தில் எழுந்தது. அந்த ஆவல் சென்ற பெப்ரவரி மூன்றும் நாள் முற்றும் எதிர்பாராத முறையில் நிறைவேறியது. உடுப்பிட்டி தமிழ் அரசு வேட்பாளரை ஆதரித்துபிரச்சாரம் செய்ய யாம் அங்கு சென்றபோது இவ்வாய்ப்பு எமக்குக் கிட்டியது.

### கல்விக் கடலை கண்ட காட்சி

முற்பகல் பதினொரு மணியளவில் நண்பர்கள் சிலருடன் கந்தமுருகேசனார் இல்லம் நோக்கி காரில் சென்றோம். யாம் அங்கு சென்றவுடன் கண்டது ஒரு சிறு குடிசைதான். அக் குடிசையின் திண்ணையில் ஒரு வெள்ளை நிற உருவம் வீற்றிருந்ததைக் கண்டோம். யார் அந்த உருவம் என்பதை அறியாது தொடர்ந்து அக்குடிசை நோக்கி நடந்தோம். அப்பொழுதுதான் எம்முடன் வந்த உடுப்பிட்டித் தொகுதி நண்பர்கள் அந்த உருவம்தான் தமிழ்க் கடல் கந்தமுருகேசனார் என்றனர். எம்மையறியாமலே எம் கைகள் குவித்து அவருக்கு வணக்கம் செலுத்தின. பதிலுக்கு புன்முறுவலுடன் அவர் எம்மை வரவேற்று அவர் வீற்றிருந்த திண்ணையின் பக்கத்துத் திண்ணையில் அமரும்படி வேண்டினர்.

நாமும் அமர்ந்தவுடன் நம் நண்பர்கள் என்னையும் ஏனைய நண்பர்களையும் அறிமுகம் செய்துவைத்தனர், உரையாடல் தொடங்கியது. உரையாடல் தமிழ்இனத்தை வழிநடத்திய-வழி நடாத்தும் தி. க., தி. மு. க. இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி முதலிய அரசியல் இயக்கங்கள் பற்றி நிகழ்ந்தது.

### உரையாடல்

தனக்கும் பெரியார் ஈ. வே. ரா.விற்கும் ஏனைய தி. மு. க. தலைவர்களுக்கும் உள்ள உறவை மிக உருக்கமாக எடுத்துரைத்தார். தமிழர் தமது தனித்தன்மையைப் பேணி வாழவேண்டின் தமக்கென ஒரு தனியரசு நிறுவவேண்டும்என்றகருத்து அவர் உரையாடலில் தலைதூக்கி மிளிர்ந்தது.

தமிழ், தமிழினம் பற்றி அவர் கருத்துக்களை தெரிவிக்கும்போது அவரிடம் காணப்பட்ட உணர்ச்சி எம்மை இன்பத்தில் ஆழ்த்தியது. தமிழ்பற்றி அவர் உச்சரிக்கையில் அவரின் தளாத முதுமைகூட துடிக்கும் இளமையாக மாறுவதைக் கண்டோம். அவருக்கும் எமக்கும் இடையில் நடந்த உரையாடலில் பெருமளவு ஒற்றுமை நிலவியது, சிறிதளவு வேற்றுமையும் இருந்தது என்பதை யாம் மறுக்கவில்லை, ஆனல் அவரின் உரையாடல் முழுவதிலும் அவரின் கூர்ந்த மதியினை உணருகின்ற வாய்ப்பு எமக்கு கிடைத்தது. அவர் கையாண்ட ஒவ்வொரு சொற்றொடரிலும் அவரின நுண் அறிவு புலப்பட்டது. சொற்கள்சுருங்கியும்ஆழ்ந்த பொருள் உணர்த்துபவையாகவும் விளங்கின.

யாம் கேட்ட கேள்விகளுக்கு அவரே எம்மிடம் கேள்வி கேட்டு பதில் கூறச் செய்த பாங்கினை எண்ணி வியந்தோம். சாக்கிரத்தீசை யாம் கண்டதில்லை.

## ஈழவேந்தன்

ஆனல் அவரின் உருவச்சிலையினைப் படங்களில் கண்டுள்ளோம். கந்தமுருகேசனரின் தோற்றத்தைக் காணும்போது எம்மையறியாமலே சாக்கிரத்திசின் எண்ணம்தான் எம் உள்ளத்தில் எழுந்தது.

### உள்ளக்குழைவு

உரையாடலின் இடையில் எமக்கு அவரின் மாணவர்களால் தேநீர் வழங்கப்பட்டது. 'இப்போதான் அருந்தி



விட்டு வருகிறோம்' என்று கூறி தேநீரை எடுக்கத் தயங்கிய போது அந்த அன்புருவம் "வந்தவரை வரவேற்பது எம்கடன் எடுங்கள்! எடுங்கள்!" என்றார். அப்பொழுது அவரின் அன்பின் குழைவு எம்மை உருக்கியது.

### அறிவொளி அணைந்து விட்டது

கால் முடங்கி கைமுடங்கி இருந்தஇடத்தைவிட்டுஅகல முடியாத நிலையில் வீற்றிருந்த அப்பெருமகன் தன் உடல் நிலையைப்பற்றி கவலையுறாது பால் மணமாறா பச்சிளம் குழந்தைகள் தொட்டு பட்டதாரிகள் ஈறாக உள்ள அனைவருக்கும் அறிவொளி பரப்பிவந்த பாங்கினை எண்ணும்போது இன்றும் எம் உள்ளம் வியப்பில்மூழ்கிறது. ஒரு மணித்தியாலம் வரையில் அவரோடு யாம் உரையாடியபோதும் அது ஒரு சில விஞடிகள் போற்தான் எமக்குத் தோன்றியது.

அத்தகைய அறிவுக்கடலோடு நெருங்கிப் பழகியவர்கள் இந்த உணர்ச்சியைப் பெறுவது உறுதி. அப்பெருமகனைப்பிரியமனம்இல்லாது பிரிந்து வந்தோம். தலை தாழ்த்தி வணக்கம் செலுத்தி விடைபெற்றோம். ஆனல் அப்பெருமகனை இவ்வளவு விரைவில் இழப்போம் என்று யாம் கனவிலும் கருதியதில்லை. அவரிடம் உடல்வலிவு இல்லையெனினும் அவரின் உள்ள வலிவு அவரின் உடலுக்கு உரம்ஊட்டி அவரை நெடுங்காலம் வாழச் செய்யும் என்று எதிர்பார்த்தோம். எம் நம்பிக்கையில்இடிவிழுந்ததிற்கமைய எம்மையெல்லாம் கண்ணீரில் ஆழ்த்தி விட்டு பிரிந்து சென்றுவிட்டார்.

### கண்களில் நீர் பெருகுகிறது

அவர் எம்மை விட்டுப் பிரியும்போது அவருக்கு அகவை அறுபத்திரண்டு என்று அறியப்படுகிறது. நோயினல் நொந்து வருந்திய அப்பெருமகன் இறப்பினில் இன்பமும் அமைதியும் கண்டிருக்கக் கூடும். அவரைப்பொறுத்தவரை தன் வாழ்வின் பணி முடிந்துவிட்டது என்று கூடக் கருதியிருக்கக் கூடும், ஆனல் தமிழ்! தமிழ்நாடு தமிழர் வாழ்வு! என்பதுபற்றியே அடிக்கடி சிந்தித்து செப்பிவந்த அச் செம்மலை 'தமிழகம்' என அவரின் சிறுகுடிசையில் இனிக்காண முடியாதே என்னும்போது எம் கண்களில் நீர் பெருகுவதைத் தடுக்க முடியாது தத்தளிக்கிறோம்.

### எம்கடன்

இறப்பது என்பது தோற்றத்தின் ஒடுக்கம் என்ற பேருண்மையை உணர்ந்து பிறந்தோர் இறந்தே திரவேண்டும் என்ற இயற்கைக் கட்டளையை ஏற்று ஆறுதல்அடைவோமாக. எனினும் தமிழராகிய எமக்கு குறிப்பாக கந்த முருகேசனரின் மாணவர்களுக்கு ஒருபெரும் பொறுப்புண்டு என்பதையாம் உணரவேண்டும். அதுதான் அப்பெருமகன் வெளியிட்ட "நாவலர் கோவை" "திருப்பளையந்தாதி" முதலிய நூல்

(13-ம் பக்கம் பார்க்க)

## நானிலம் போற்றும் கந்தன்* மறைந்திட்டார் ஐயோ!

ந. பொ. இராசதுரை

சிந்தையின் அணு ஒவ்வொன்றும்
திடுக்கிடச் சித்தம் சோர
எந்தையே எம்மை விட்டு
எங்கு நீ சென்று விட்டாய்?
தந்தையே, தலைவ, வீர
தமிழர் தம் குல விளக்கே
சிந்தனைக் கரியாய் எங்கள்
சோகத்தைத் தீர்ப்பார் யாரோ?

காலற்ற போதும் கதியற்ற மட்கட்குக்
காலாய் நின்றுப்
மாலுற்ற வஞ்சம் மடைத்தனம்-
மூடக் கொள்கை தமை
தூவென்றுதைத்தாய் துயரத்தை இன்று
விளைத்துவிட்டாய்!
சூலுற்ற மேகம் பொழிகின்ற மாரி போல்
கருத்துத் தந்தாய்; நெஞ்சில்
வேலொன்றைப் பாய்ச்சி வேறெங்கோ
சென்ற விந்தை என்னே!

அறிவியற் கொள்கை பேசி
அனைவர்க்கும் துணையாய் நின்றோன்
அறிஞருக் கறிஞர் அண்ணு
அடிவழி யொற்றி நின்றோன்
நெறிதனில், நீர்மை தன்னில்
நீணெடுங் கடலை யொப்பான்
பிறிதொரு கொள்கை தேரான்
பகுத்தறிவான்; ஐயன்!

இயற்கையின் கொடிய தாக்கத் (துக்கு)
திலக்கதாய் ஆள போதும்
பெயர்க்கரும் கொள்கை பேரா
புதுவழி கண்ட நெஞ்சன்
தயக்க மொன்றிலாதான், தன் சொல்
தவறிடான், தரத்தில் மிக்கோன்
நயத்தகு பண்பன்; இந்த
நானிலம் போற்றும் கந்தன்*

தன்மானத் தமிழர்களின் குரல்கள் இந்த
தரணியிலே ஒலித்திடவே
வேண்டு மென்ற
பொன்னன ஆசையினல் பெரியார் தன்னைப்
பொது வாழ்வுக் கர்ப்பணித்தார்;
புதுமை தன்னைக்
கண்ணுகத் தான் கொண்டார்,
கருத்தில் அந்த
கூராயிருந்த மக்களுக்கு அறிவு தந்தார்
மண்ணகத்தில் தம் கடமை
முடித்துக்கொண்டு
மாப் பெரியார் மறைந்திட்டார்,
ஐயோ! ஐயோ!

* கந்த முருகேசனார்.

## 'இருள்தீர எண்ணும் இளைஞருக்கு கந்த முருகேசனார் வழிகாட்டி.'

## பண்டிதர் இரத்தினம் விடுத்த இரங்கற் செய்தி

'அரும் பெரும் தமிழறிஞரும் அஞ்சாத கொள்கை வீரருமான கந்த முருகேசனருடைய மறைவு ஈடுசெய்ய முடியாத ஒரு பேரிழப்பாகும்' என்று கிளிநொச்சித் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் கா. பொ. இரத்தினம் பகுத்தறிவுப் பெரியார் கந்த முருகேசனரின்மறைவையொட்டி விடுத்துள்ள இரங்கல் அறிக்கை ஒன்றில்குறிப்பிட்டுள்ளார்.

அந்த இரங்கல் அறிக்கையில் மேலும் திரு. இரத்தினம் தெரிவித்துள்ளதாவது:

'தம் பரந்த தமிழறிவாலும், சீரிய நுண்ணறிவாலும் தாம் உண்மையெனக்கண்டவற்றை, காலத்துக்கும் சூழ்நிலைக்கும் பிறர் கருத்துக்கும் கட்டுப்படாமல், அசையாத உறுதியோடு எடுத்துக் கூறிச் செயற்படுத்தி வந்த ஒருபெருந்தகையாளரை இழந்துவிட்டோம்.

'உயிர்ப் பலியிடுதல்-சாதி வேற்றுமைபோற்றுதல்-தீண்டாமை பாராட்டுதல் முதலிய சாபக்கேடுகளை சமயத்தின் பெயரால் வைதிகக் குடுக்கைகளும் சுயநலவாதிகளும் ஆதரித்து வந்த காலத்தில் அஞ்சாமலும் அசையாமலும், பகுத்தறிவு வழியில் எதிர்க்குரல் எழுப்பிய பெருமக்களில் முதல்வராக அவர் விளங்கினர்.

(5-ம் பக்கம் பார்க்க)

'சுதந்திரன்'
புதிய சந்தா விபரம்
ஒரு வருடம் ரூபா 14-00
ஆறு மாதம் ரூபா 7-50
நிர்வாகி
சுதந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களக் கடிதங்களை நாசமாக்கின்றனராம்

“பொதுமக்களால் அரசாங்க அலுவலகங்களுக்குச் சிங்களத்தில் அனுப்பப்படும் கடிதங்களை நாசமாக்கும் இயக்கமொன்றினை அரசாங்க எழுதுவினைஞர்கள் ஆரம்பித்துள்ளனர். தமிழரசுத் தலைவர்களின் கட்டளையின்மிதே தமிழ் அரசாங்க ஊழியர்கள் இந்த இயக்கத்தை நடத்துகின்றனர் என்று நம்பகமான வட்டாரங்களிலிருந்து அறியப்படுகிறது.” என இவ்வாரம் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட “ஜனதின”என்னும் இடதுசாரித் தினசரிப் பத்திரிகை 14-4-65ந் திகதி ஒரு செய்தி வெளியிட்டுள்ளது.

அச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:-

“அண்மையில் நடைபெற்ற தமிழரசுக் கட்சி நிர்வாகக் குழுவின் கூட்டத்தில் சிங்கள மொழிக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதெனவும், தமிழ் மொழிக்கு அந்தஸ்து பெற்றுக் கொள்வதற்காக நாடு முழுவதும் நடவடிக்கை எடுப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது. இந்த முடிவை அமுல் நடத்துவதற்காகத் தமிழ் அரசாங்க ஊழியர்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்வதென்றும் முடிவு செய்யப்பட்டது.

## தமிழ் ஊழியர் மீது சிங்கள ஏடு பாய்ச்சல்

இதற்கேற்ப சிங்கள மொழிக் கெதிரான நடவடிக்கையைத் தொடங்குமாறு எல்லா தமிழ் எழுதுவினைஞர்களுக்கும் அதிகாரிகளுக்கும் இரகசிய சுற்றறிக்கையொன்று தமிழரக் கட்சியால் மிக இரகசியமாக அனுப்பப்பட்டுள்ளது.

தமிழ் அரசாங்க ஊழியர் ஆரம்பித்துள்ள சிங்கள எதிர்ப்பு நடவடிக்கை பற்றி சிங்கள மொழிப்பற்றுள்ள சிங்கள ஊழியர்கள் அரசாங்க இலாகாக்களில் உயர்தர அதிகாரிகளுக்கும் மந்திரிகளுக்கும் அறிவித்துள்ளனர்.

## காலகண்டன் குறிப்பு

### கடலுள் கள்ளக்காசு

பாடுபட்டுத் தேடிய பணத்தைப் பாதுகாக்க புதைத்துவைப்பவர்கள் கேடு கெட்டவர்கள் என்று பண்டைப் பெரியோர்கள் கூறியுள்ளார்கள். கேடுகெட்டவர்கள் என்ற பட்டப்பெயர் வாங்க அஞ்சும் மக்களுக்கு இக்காலத்தில் இரும்புப் பெட்டிகள் பாதுகாப்பு அளித்துவந்தது. ஆனால் இன்று இந்த இரும்புப் பெட்டிகளுக்கே மதிப்பு இல்லாது போய்விட்டது. கள்ளப் பணவேட்டையில் மும்முரமாக ஈடுபடும் சர்க்கார் ஊழியர்கள் கள்வர்களைவிட மிகமோசமானவர்கள். கள்ளத் திறப்புகளையாவது உபயோகித்து பணத்தைக் கறந்துவிடுகிறார்கள்.

பம்பாயிலுள்ள பணக்காரர்கள் தங்கள் பணத்தைப் பாதுகாக்க புதுவழியொன்றைக் கைப்பிடித்தார்கள். ஆனால் அந்த வழியினையும் சர்க்கார் கண்டுபிடித்துவிட்டது.

ஐம்பது சத நாணயங்களை மூடைகளாகக் கட்டி கடலுள் அமிழ்த்தியிருந்தார்களாம். கடந்த வாரம் மதுவிலக்கு பிரிவைச் சேர்ந்த அதிகாரிகள் கடலுக்கடியில் சுழியோடி காசுகளை மீட்டுக் கொண்டனராம். நான்கு மூடைகளில் மொத்தம் ரூ. 17000 பெறுமதியான நாணயங்கள் சிக்கினவாம்.

இப்பணம் பதுக்கல் பணமா, அல்லது அராபிய நாடுகளுக்குக் கள்ளத்தனமாகக் கொண்டு செல்லப் படவிருந்த பணமா என்பதனை ஆராய்ந்து வருகின்றனர்.

### கல்வி இலாகாவுள் கடமை வீரர்?

ஆண்டவன்வரம்கொடுத்தாலும் பூசாரிவரம் கொடுக்கமாட்டார் என்று கூறப்படுவதுண்டு. கல்வித் திணைக்களத்திலும் இப்படி ஒரு தமிழ் பூசாரி இருக்கிறாராம். மொழிச் சிக்கல்கள் எல்லாம் மறைந்துசுமுகமான சூழ்நிலை உருவாகிவரும் இவ்வேளையில் இந்தப் பச்சைத் தமிழரே இப்படி பாரதூரமாக நடக்க ஆரம்பித்துவிட்டால் யார்தான் சகிக்க முடியும்.

சிங்கள மொழித் திணிப்பில் அரசாங்கம் ஓரளவு தாமதமான நிலையை அனுசரித்தபோதிலும் திரு. தங்கராசா என்ற பெயருடைய இவ்வூழியர் ‘உத்தியோக மொழி’விடயத்தில், கடுமையான ‘கடமை உணர்ச்சி’ யைவெளிப்படுத்துகிறாராம்.

அனலைதிவைச் சேர்ந்த திரு. வே. சு. சபாரத்தினம் என்பவர் மொழிச் சட்டத்தின்கீழ் ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் ஒய்வுபெற்றார். அவர் தமது ஒய்வுகாலப் பணத்துக்காகத் தமிழில் விண்ணப்பித்து வருகிறாராம். ஆனால், அவருடைய கோரிக்கைகள் எவையும் உடனுக்குடன் கவனிக்கப்படுவதில்லை எனக் கூறுகிறார். தமிழ்க் கனவானான திரு. தங்கராசா போன்றவர்கள் இதே திணைக்களத்தில் ‘உத்தியோக மொழி’ வெறியில் ஊறித் திழைத்துக்கொண்டிருந்தால் தமிழ் பேசும் மக்கள் தலைவர்கள் தமிழ்மொழியைச் சரியாசனமேற்ற எதைச் செய்தும் என்ன பிரயோசனம் கிடைக்கப்போகிறது?

## சிங்கள இதழ்களில்...

# சிங்களவருக்கு தமிழ் கட்டாய பாடமாகும்

தமிழ் மொழியைக் கட்டாயப் படுத்திப் போதிப்பார்களா? என்ற தலைப்பின் கீழ் “ஜனதின” (14-6-65) கீழ்க்காணும் செய்தியை வெளியிட்டுள்ளது.

“சிங்களப் பிரதேசங்களில் தமிழ் மொழியை ஒரு பாடமாகப் படிப்பிக்கவேண்டுமென்ற தமிழ் எம். பி.க்களின் கோரிக்கையைப் பற்றி கல்வி அமைச்சு பரிசிலனை செய்கிறது.

தமிழ்ப்பிள்ளைகளுக்குச்சிங்களம் போதிக்கும் போது சிங்களப் பிள்ளைகளுக்கும் தமிழைப்போதித்தாற்தான் தேசிய ஐக்கியத்தை ஏற்படுத்த முடியுமென அந்தத் தமிழ் எம். பிக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தமிழ் பேசும் மாணவர்கள் பெரும்பாலோர் படிக்கும் பாடசாலைகளில் சிங்களம் போதிக்க சிங்கள ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருப்பதால் சிங்களப் பாடசாலைகளில் தமிழைப் போதிக்கவேண்டுமெனக் கூறும் அவர்கள் அப்படிச் செய்ய முடியாவிட்டால் தமிழ்ப் பாடசாலைகளுக்குச் சிங்கள ஆசிரியர்கள் நியமனம் செய்வதைத் தாங்கள் வன்மையாகக்கண்டிப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

இந்த யோசனையைக் கல்வி இலாகா ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில் தமிழ்ப் பிள்ளைகளுக்குச்சிங்களம் கட்டாய பாடமாவதுடன், சிங்களப் பிள்ளைகளுக்குத் தமிழ் கட்டாயப் பாடமாகிவிடுமென கல்வி அமைச்சு கூறுகிறது.

இதற்கிடையே இலங்கையிலுள்ள எல்லாப் பாடசாலைகளிலும் ஆங்கிலத்தைக் கட்டாய பாடமாக்கவேண்டுமென கல்விமந்திரி திரு. இரியகொல்ல கருதுகிறார். இத்தகைய ஒரு யோசனை சுதந்திரக் கட்சி ஆட்சியின்போதும் கூறப்பட்டதெனினும் பெற்றோரும் ஆசிரியர்களும் எதிர்ப்புத்தெரிவித்ததால், அந்த யோசனை அப்பொழுது கைவிடப்பட்டது.”

“புதிய அரசாங்கம் ஏற்பட்டதோடு குற்றுயிராக்கப்பட்ட பனகொடை இராணுவ முகாமிலுள்ள பௌத்த சங்கங்களுக்கு மீண்டும் புத்துயிரளிப்பதென பௌத்த ராணுவ அதிகாரிகளும் ஊழியர்களும் முடிவுசெய்துள்ளனர்.

தமிழ், கத்தோலிக்க அதிகாரிகளின் நிர்ப்பந்தத்தின் காரணமாக இராணுவத்தில் பௌத்த ஊழியர்களுக்கு ஏற்பட்டுள்ள கஷ்டத்துக்கு சரியான பதில் கொடுப்பதற்காக பௌத்த சங்கங்களைத் திருத்தி அமைக்க வேண்டுமென ஒரு பௌத்த அதிகாரி தெரிவித்தார்.

இதுவரை இராணுவத்தில் சிங்களத்தில் நடைபெற்ற அலுவல்கள் இப்பொழுது ஆங்கிலத்துக்கு மாறிவருவதால், அதனை எதிர்த்து நடவடிக்கை எடுக்கவும் இந்த பௌத்த சங்கங்கள் கருதியுள்ளன.”

—ஜனசத்திய (13-6-65)

## மன்னருக்கு மேலும் இருபட்டாளங்கள்!

“வடபகுதியில் கள்ளக்குடியேற்றக்காரர் களின் வருகை அதிகரித்திருப்பதால், நேற்றிலிருந்து வடபகுதியில் நிறுத்தப்பட்டுள்ள இராணுவம் பலப்படுத்தப்பட்டுள்ளது. மன்னர் பகுதிக்கு மேலும் இரு இராணுவ கோஷ்டிகள் நேற்று அனுப்பப்பட்டுள்ளனர். அத்துடன் வடபகுதி கரையோரங்களின் காவல் இராணுவத்தினரின் எண்ணிக்கை இருமடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளது.” இவ்வாறு ஒருசெய்தியை ‘சவச’ பத்திரிகை 15-6-65ந் திகதி வெளியிட்டுள்ளது.

இதற்கிடையே ஆங்கிலத்தை இலங்கையின் உத்தியோக மொழியாக்குவதற்காக பிரபல தமிழரசு-யு. என். பி, கோஷ்டியொன்று இப்பொழுது நடவடிக்கை எடுத்துவருகிறது.

பேராதனை பல்கலைக் கழகத்தில் 1968 முதல் சிங்களத்தில் விஞ்ஞானம் போதிப்பதற்காகச் செய்யப்பட்டிருந்த முடிவை இப்பொழுது ரத்துச் செய்துவிட்டனர். அதற்குப் பதிலாக ஆங்கிலத்தில் விஞ்ஞானம் போதிப்பதற்கான ஒரு கட்டளையை வெளியிடுவதற்காக ஒரு கும்பல் இரகசியமாக நடவடிக்கை எடுத்து வருகிறது.

பல்கலைக் கழகப் புகுமுகப் பரீட்சைக்கும் ஆங்கிலத்தைக் கட்டாய பாடமாக்க வேண்டுமென்று அவர்கள் கூறுகின்றனர்.”

## 21 மந்திரிகள்

“தமிழரசு-யு. என். பி. அரசாங்கத்தின் மந்திரிகளின் தொகையை 21 வரை அதிகரிப்பதற்குப் பிரதம மந்திரி முடிவு செய்திருப்பதாக அறியப்படுகிறது.

வட, கிழக்குப் பகுதிகளிலிருந்து போதுமான அளவு தமிழ் மந்திரிகள் நியமிக்கப்படவில்லையென்று புகார் செய்யப்பட்டிருப்பதால் மந்திரிகளின் எண்ணிக்கையைக் கூட்டப்போவதாகக் கூறப்படுகிறது.

குறிப்பாக மீன்பிடி விவகாரம், இ. போ. ச., மின்சாரம் ஆகியவை புதிதாக நியமனம் செய்யப்படும் தமிழ் அமைச்சர்கட்குக் கொடுக்கப்படுமெனத் தெரிகிறது.”

—சிங்கலே (13-6.65)

## ஜே. ஆர். சபைத் தலைவராவாரா?

“சபைத்தலைவர் திரு.சி.பி. டி.சில்வாவுக்குப் பதில் திரு. ஜே. ஆர்.ஜயவர்தன சபைத் தலைவராக நியமிக்கப்படுவார் என்ற வதந்தி நேற்று தலைநகரில் பரவியது.

இதுபற்றி எமது நிருபர் திரு. சி. பி. டி. சில்வாவிடம் கேட்டபொழுது தனக்கு [illegible] கூறினார். கடந்த டிசம்பர் 3ந் திகதிதான் கூட்டு[illegible] சாங்கத்தைக் கைவிட்டு எதிர்க்கட்சிக்குச் சென்றது கொள்கைக்காகவே தவிர பதவி எதிர்பார்த்தல்ல என்று திரு. சில்வா மேலும் கூறினார்.”

—ஜனதின (16-6-65)

## போராட்டத்துக்கு ஏற்பாடுகள்

உத்தியோக மொழிச்சட்டத்தை அமுல் நடத்துவதைப் பின்னல்தள்ளிப்போட யு. என். பி.—தமிழரசுக் கூட்டரசாங்கம் செய்யும் முயற்சிக்கெதிராக நாடுபூராவுமுள்ள சிங்கள மொழிப்பற்றுள்ள அரசாங்க ஊழியர்கள் எழுச்சிபெற்றுள்ளனர்.

போராட்டம் ஆரம்பிப்பதற்கு உறுப்பினர்களைத் தயாராக்கும்படி சமஸ்த லங்கா ரஜயேலிப்பிகரு சங்கமய எல்லாக் கிளைக்காரியதரிசிகளுக்கும் சுற்றக்கைஅனுப்பியுள்ளது.”

—ஜனதின (16-6-65)

## “எழுத்தாளர் பொறுப்பு”

பிரபல இந்திய எழுத்தாளரும் உலகச் சமாதான பரிசு பெற்றவருமான திரு. முல்க் ராஜ் ஆனந்த் பெர்லினில் நடைபெற்ற சர்வதேச எழுத்தாளர் மாநாட்டில் கலந்து கொண்ட பின்னர், எழுத்தாளர் பொறுப்புப்பற்றி அபிப்பிராயம் தெரிவிக்கையில் “எழுத்தாளர்கள் இலக்கியத்துக்கு மட்டும் பொறுப்பேற்றல் போதாது, மிருகத்தனத்தை எதிர்த்து நடைபெறும் போராட்டத்துக்கும் பொறுப்பேற்க வேண்டும்” என்று கூறினார். நேருஜெயந்தி தினமான நவம்பர் 3ந் திகதி இந்தியாவில்நடைபெறவிருக்கும் சர்வதேசிய எழுத்தாளர் மாநாட்டுக்கு விஜயம் செய்யும்படி பெர்லின் மாநாட்டில் கலந்துகொண்ட எழுத்தாளர்களுக்கு அவர் அழைப்பு விடுத்தார்.

## மீண்டும் ஆங்கிலம்

தமிழரசு-யு. என், பி. அரசாங்கத்தின் கீழ் தமிழ் மொழிக்கு நாடு முழுவதும் உத்தியோக மொழி அந்தஸ்து கிடைப்பதுடன், ஆங்கிலமும் புதைகுழியிலிருந்து எழுந்து தலைவிரித்தாடத் தொடங்கியுள்ளது என்று “சிங்கலே” (சுதந்திரக் கட்சிப் பத்திரிகை) 13-6-65ந் திகதி எழுதியுள்ளது.

இப் பத்திரிகை மேலும் கூறுவதாவது:-

‘தபால் இலாகா, ரயில்வே இலாகா வேறு சில முக்கிய அரசாங்க அலுவலகங்களிலும் ஆங்கிலத்தில் பகிரங்கமாகவே வேலை செய்யத் தொடங்கியுள்ளனர்.

## இருள் தீர...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

‘தமிழ்ப் பண்புக்கு மாறாகவும், தமிழ் இனத்தைத் தாழ்வுறுத்தும்முறையிலும், தமிழ் மக்கள் அறியாமையாலும், சுயநலத்தாலும் கைக்கொண்டு வந்த கண்மூடிப் பழக்கவழக்கங்களை ஈவு இரக்கமின்றித் தாக்கிப்பொடியாக்கிய சீர்திருத்தச் செம்மல்களுள் அவர் முன்னணியில் நின்று பணியாற்றினார்.

“‘தமிழ்ப்பேரறிஞர்’ என்று தம்மைக் கூறிக் கொண்டு தமிழ் நாகரீகத்தை மாசுபடுத்தி வடக்கிலிருந்தும் மேற்கிலிருந்தும் புகுந்து தமிழரை அடிமைப் படுத்தியவர்களின் பழக்க வழக்கங்களைப் போற்றி வந்த போலித் தமிழறிஞர்களை மடடந்தட்டித் தமிழ் நெறியை உணர வைத்த உண்மைத் தமிழர் அவர்.

‘அவர் செய்த தொண்டுகள் இருள்தீர எண்ணும் இளைஞர்கள் பலரை இன்று உருவாக்கி வளப்படுத்தியுள்ளது.’

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேதுக் கால்வாயும் இலங்கையும்

## வருமானத்தைக் காக்க

## துறைமுக அபிவிருத்தி அவசியம்

**இந்திய அரசு பாக்கு நீரிணையில் சேதுக்கால்வாயினை வெட்டுவதற்கு ஒழுங்குகள் செய்துள்ளது. இத்திட்டம் அமுலுக்கு வருமானால் இலங்கையையும் பெரிதும் பாதிக்கும். இலங்கையைப் பாதிக்கும் என்பதற்காக, தங்களுக்கு ஏற்படப்போகும் நன்மையினை இந்திய அரசு விட்டுக் கொடுத்து விடுமா? இல்லவே இல்லை! ஆகவே, சேதுக்கால்வாய்த் திட்டத்துடன் ஒத்து வடக்குமாகாணத்துறை முகம் ஒன்றினையும் நாம் அபிவிருத்தி செய்தால் தான் நமது நிலை சீராகும்.**

சேது சமுத்திரம் என்றும், பாக்கு நீரிணை என்றும் பலவாறுக வழங்கப்படும், இலங்கையை இந்தியாவுடனிருந்து பிரித்து வைக்கும் கடலை ஆழப்படுத்த இந்திய அரசாங்கம் திட்டமிட்டு விட்டது. இந்தியக் கரையை ஒட்டியே, ஆக 150 அடி அகலத்தில் ஒரு கால்வாய் தோண்டப்படவிருக்கிறது. இத்திட்டம் பூர்த்தியாகும் பட்சத்தில் கொழும்புத் துறைமுகத்துக்கு வருவாய் குறையக் கூடிய நிலைமை உருவாகலாம் என்று அஞ்சப்படுகிறது.

மேற்கத்தை நாடுகளிலிருந்து கிழக்கு நாடுகளுக்கும், தூர கிழக்கிலிருந்து மேற்கு நாடுகளுக்கும் செல்லும கப்பல்களுக்கெல்லாம் இதுவரை காலமும் கொழும்புத் துறைமுகம் ஒரு கேந்திர நிலையமாக விருந்து வந்தது. சேதுக் கால்வாய் திட்டம் உருவாகி விட்டால் கொழும்பின் முக்கியத்துவம் தென் இந்தியாவின் துறைமுகங்களான தூத்துக்குடி, சென்னை போன்ற பட்டினங்களுக்கு ஏற்பட்டுவிடும்.

தூத்துக்குடித்துறைமுகத்திலிருநது சென்னைக்கு ஒரு கப்பல் செல்லுவதானுல் இலங்கையைச் சுற்றிக் கொண்டு தான் செல்ல வேண்டும். இலங்கையைச் சுற்றிச் செல்லும் தூரம் ஏறத்தாழ 750 மைலாகிறது. சேதுக் கால்வாய் வெட்டப்பட்டால் இத்தூரம் ஆக 316 மைலாகும். இதனுல் கப்பல் கட்டணங்களும் குறைவதுடன் கப்பல் செலுத்தும் செலவும் மீதிப்படும். பிரயாண காலத்தில் இரு நாட்கள்மீ தப்பட்டும் விடும்.

ஆங்கிலேய ஆட்சி இரு நாடுகளிலும் செல்வாக்குப் பெற்றிருந்த காலத்திலிருந்து சேதுக் கால்வாயைத் தோண்டும் திட்டம் பற்றிப் பேசப்பட்டு வந்தது. ஆனல் கொழும்புக்கு இருந்த செல்வாக்குப் பாதிககப்படலாம் என்ற காரணத்திஞலேயே இத்திட்டம் கைவிடப் பட்டிருககலாம் என்று கருத இடமுண்டு. சுதந்திரமடைந்த பின்னர் இந்தியாவில் இத்திட்டம் பற்றி அடிக்கடி பிரச்சினைகள் தோன்றி வந்தாலும் ஏதோ ஒரு வகையில் பின்போடப்பட்டு வந்தது.

### ரூபா 30 கோடி செலவாகும்

இப்பொழுது, ரூ. 30 கோடி செலவில் இத்திட்டத்தை அமுல் நடாத்துவதென டில்லி அரசாங்கம் தீர்மானித்துவிட்டது. ஆகவே, இனிமேல் எந்தவித மான தங்குதடையுமன்றி சேதுக்கால்வாய் தோண்டப்பட்டுவிடும்.

சேதுக்கால்வாய் இந்தியக் கரை ஓரமாகவே வெட்டப்படுவதனுல், இலங்கையை இத்திட்டம் பாதிக்காது என்று கூறப்படலாம். ஆனுல் நாளாவட்டத்தில் இலங்கையை இத்திட்டம் வெகுவாகப் பாதிக்கும் என்ற சொல்லுவதற்குஇடமுண்டு. ஏடன், பம்பாய், கொச்சி முதலிய துறைமுகங்களிலிருந்து, சென்னை, கல்கத்தா, ரங்கூன் முதலிய இடங்களுக்குச் செல்லும் எந்தக்கப்பலும் இனிமேல் கொழும்புத் துறைமுகத் துக்குள் பிரவேசிக்கவேண்டியதேயில்லை. காலத்தையும் பொருளையும் விரயமாககாமல் சேதுக்கால்வாயினூடாகச் சென்றுவிட முடியும்.

கடந்த காலங்களில் இலங்கையில் தலையெடுத்த அரசியல் சூழ் நிலைகளினுல் கொழும்புத் துறைமுகத்தை பல கப்பல் கம்பெனிகள் பகிஷ்கரிக்க வேண்டிய நிலை உருவானது. பொதுவாக அடிக்கடி கொழும்புத் துறைமுகத்தில் தலைகாட்டி வந்த வேலை நிறுத்தங்கள், கடமை செய்யாது தாமதப்படுத்துதல் போன்ற இன்னேரன்ன வற்ருல் கப்பல்கள் பல கொழும்பை வெறுக்க ஆரம்பித்தன. துறைமுகத்துக்கு வெளியே பல கப்பல்கள் காத்துக்கிடந்து அலுப்படைந்ததன் நிமித்தம் மேற்கொண்டு இங்கு வருவதில்லை என தீர்மானித்தன. இதே சூழ் நிலைகள் மேற்கொண்டு உருவாகுமானுல், நிச்சயமாக அவை சேதுக் கால்வாய் வழியாகச் சென்றுவிடும். இலங்கையில் இறக்குமதியாக விருக்கும் பொருட்களையும் இந்தியக் கரையிலேயே இறக்கி விடவும் கூடும்.

### அந்நிய செலாவணி அமுங்கிவிடும்

எப்படிப் பார்த்தாலும், நிச்சயமாக, இலங்கையை பொருளாதார ரீதியில் சேதுக்கால்வாய் பாதிக்கவைத்தேவிடும். இப்பொழுது தலையெடுக்கும் பொருளாதார நெருக்கடியும் வெளிநாட்டு நாணயவரட்சியும் வெகு சுலபத்தில் தீர்ந்துவிடும் என்றும் கூறுவதற்கில்லை. இதே வேளையில் அயல் நாட்டுக் கப்பல்களின் வருகையும் குறையுமானல் இலங்கையின் வீழ்ச்சியையிட்டு வர்ணிக்க வார்த்தை இல்லை.

வரப்போகும் வெள்ளத்தை தீர்க்கதரிசனதுடன் தடுக்கவும் மார்க்கங்கள் உண்டல்லவா? ஆகவே இலங்கை அரசும் எதிர்காலத்தையிட்டு சற்றுச் சிந்தித்துச் செயல் பட்டால் நிச்சயமாக இடர்பாடுகளை மேற்கொள்ள வழிகிடைக்கும்.

சேதுக்கால்வாய்த் திட்டம் அமுலுக்கு வரும் அதே காலத்தில் இலங்கையின் வடபகுதித் துறைமுகங்களில் ஒன்றையாவது நவீன வசதிகளுடன் கூடியதாக அமைக்க வேண்டும். அபிவிருத்திகள் பலவற்றைச் செய்து அத்துறைமுகத்தை உலக நாடுகளின் கண்களுக்குக் காண்பிக்க வேண்டும். சேதுக்கால்வாயுடன் இத்துறைமுகத்தையும் இணைக்கும் புதிய கால்வாய் ஒன்றினையும் ஏற்படுத்த வேண்டும். இதனுல் பல கப்பல்கள் இலங்கையுடன் தொடர்புறும்.

### பாரபட்சம் காட்டினுல் அதோ கதிதான்

கோடிக் கணக்கான ரூபாய் செலவு ஏற்படத்தான் செய்யும் இந்தத் திட்டத்துக்கு. இதற்குச் செலவிடப்பணத்துக்கு எங்கே போவது என்றே, உதவாக்கரைத்திட்டம் என்றே, அல்லது தமிழ் பிரதேசமான வடக்குக்கு அபிவிருத்தியா என்ற ரீதியில் பாகுபாடு காட்டியோ, இவ்வாலோசனை கைவிடப்படுமேயானுல் நிச்சயமாக இலங்கையின் அயல் நாட்டுச் செலாவணியில் எதிர்காலத்தில் பாரிய துண்டு விழுந்து விடும்.

பாகுபாடுகளை மறந்து, இலங்கை அனைத்துக்குமே பயனளிக்கவல்ல இப்பெரிய திட்டத்தையிட்டு இப்பொழுதே இவ்வரசு தீர்மானம் செய்யுமா?

---

# முருங்கைக்காய்!

—நீலாவணன்—

கனநாள் கழிந்தொரு கவிதை சுரந்தது!
கோப்பியொன் றடித்தேன்;
கோப்பியை விரித்தேன்.
கூப்பிட்டாள் இவள்?
ஏனே? என்றேன்:
கறிக்குப்..
புளியம் பழம் போல் ருல்,'
வாங்கியிருக்கிறேன்!
அதற்குள் வைத்துக் குழம்பு வைக்க
முருங்கைக் காய்தான் ருசியாயிருக்கும்!
ஆதலால்,
அதோ நம் வாசல் முருங்கையின்
உச்சிக் கந்தில்...
ஒன்று...இரண்டு...மூன்று,
நீண்டு முற்றிய காய்கள்!
ஒருக்கால்...ஏறி
உலுப்பி விடுங்கள்; என்ருள்!
மறுக்கலாம்...
மீண்டும் இரவுகள் வராவேல்!
அதற்காய் இசைந்தேன்;
அவள் விருப் பின்படி
முருங்கையில் ஏறி, முறிந்து
விழுந்தேன்!
அந்தோ! வந்த அருங்கவி,
இந்த அமளிகண் டெங்கோ மறைம்மே!

---

# தப்பி விட்டேன்

நிமிடக் கதை

பெரிய கடிகாரம் டாண், டாண் என்று பத்து முறை அடித்து ஓய்ந்தது. மேலநாட்டுப் பாணியிலே அமைந்திருந்த அந்த அழகான பெரிய பங்களாவின் இரண்டாவது அடுக்கு மாடியில் ஒரு அறைக் கதவு மெதுவாகத் திறக்கப்படும் ஓசை சேர்ந்தே வளையல்கள் உராயும் ஒலியும் கேட்டது! மல்லிகைப் பூவின் நறுமணம் சேர்ந்தே வருகிறது.

நான் மெதுவாக மறைந்து கொண்டேன். சின்ன இடைதுவள அன்ன நடை நடந்து வந்து அவள் அறையினுள் நுழைந்துவிட்டாள். அறைக் கதவு தாளிடப்படும் சப்தம். அந்த அறையினுள் 'விடிவிளக்கு' கண் சிமிட்டிக் கொண்டிருந்தது. நான் சப்தம் செய்யாமல் திரைச் சீலையின் பின்பக்கம் ஓடி ஒளிந்து கொண்டேன்! மறைவில் இருந்து எட்டிப் பார்த்தேன். பால் வடியும் அவள முகம் எழில் கொழிக்கும் இளமை என்னை அப்படியே மெய்மறக்கச் செய்தது. பீரோவைத் திறந்தாள், ஒரு நாவல் புத்தகத்தைக்கையில் எடுத்தாள்.

அதற்குள் நான் ஓடிவந்து கட்டிலின் அடியில் பக்குவமாகப் பதுங்கிக்கொண்டேன். 'தொப்'பென்று அவள் கட்டிலில் வந்துவிழுந்தாள். அமைதியாக நாவலை புரட்டிக்கொண்டு இலேசாகப் புரண்டு படுத்தாள்.

'இன்று அவளை எப்படியும்...!' என்று என் கண்களைத் துரு துருவென விழித்துப் பார்த்துக் கொண்டிருந்தேன். சில நிமிடங்கள் சென்றன.

அதுதான் சரியான சமயம்! மெதுவாக எழுந்து எட்டிப்பார்த்தேன்.

ஐய்யய்யோ, புரண்டு படுத்துவிட்டாளே. சிக்கிரம் தூங்க மாட்டாளோ! இன்றும் நம் திட்டம் நிறைவேருமல் போய்விடுமோ?' பல நிமிடங்கள் பறந்தன. எட்டிப் பார்த்தேன். அவள் எழில் உருவம் என் இதயத்தைக் கிள்ளியது! நாவலை வீசிவிட்டு கண்ணயர ஆரம்பித்தாள். தைரியமாக வெளியே வந்தேன்.

இதோ அவளை நெருங்கியும் விட்டேன்! மெதுவாக அவளது வலதுகையை வருடினேன். அவள் ஒன்றும் பேசவில்லை. தூக்கவெறிபோலும்! மீண்டும் வருடினேன். அதற்குள் அவள் துள்ளி எழுந்தாள். முழுமதி போனற அவள் முகம் பத்திரகாளியின் முகம்போல மாறிவிட்டதே!

'சீச்சீ இந்தப் பாழாய்ப் போன மூட்டைப் பூச்சியின் உபத்திரவம் வேறு' என்று வசைமொழி பாடியவாறே அந்த வனிதை என்னைப் பிடித்து விட்டாள். அந்தமங்கையின் விரல்களுக்கிடையில் மாட்டிக்கொண்டு நான் மரண அவஸ்தைப் பட்டுக் கொண்டிருந்தேன்.

ஆனல் அவள் என்னைக் கீழே தள்ளிவிட்டாள். தன் மலர்க் கால்களினுல், என்னை நசுக்கிவிட எத்தனித்தாள். நல்லவேளை நான் ஒளிந்து கொண்டேன்.

—பனி அந்தனி

---

வேல் படை மருந்து

வண்டுகடி, தேமல், ஊறல், படர்தாமரை தழுவணி, பித்த வெடிப்பு, நாட்பட்ட கக்கூஸ்பத்து, தண்ணீர்கடி, கரப்பான் முதலிய சர்ம வியாதிகளைக் குணப்படுத்தும் ஓர் சிறந்த களிம்பு.

விலை ரூ. 1-50 தபால் செலவு வேறு

தயாரிப்பவர்கள்:

S. P. S. ஜெயம் அண் கோ.,
மதுரை.

இலங்கையில் சோல் ஏஜண்ட்:

எம். ஏ. ஆர். எஸ். மனுவேல் நாடார் அன் கோ.,
34, செட்டியார் தெரு, கொழும்பு-11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வ. வே. சு. ஐயரின் விடுதலை வேட்கை

—என். நாகசாமி

திருச்சி நகரில் ஒரு பகுதியான வரகனேரியில் ஓர் எளிய பிராமண குடும்பத்தில் 1881ம் வருடம் ஏப்ரல் 2ந் தேதி பிறந்தார் வ. வே. சு. அய்யர். ஐயரது தகப்பனார் ஏழையாயினும், அவர் தமது புத்திரருக்கு ஆங்கிலக் கல்வி பயிலுவித்தார். ஐயரும் ஊக்கத்துடன் படித்தார். தாம் ஏழை என்பதை உணர்ந்து, தம் குடும்பத்தை எப்படியேனும் மேம்பாட்டுக்குக் கொண்டுவர வேண்டும் என்ற உறுதி இளம் அய்யர் மனதில் இருந்தது. ஒவ்வொரு வகுப்பிலும் முதலாவதாகத் தேறி பல பரிசுகள் பெற்றார்.

இவருடைய படிப்புத் திறமையை அறிந்த உறவினர் ஒருவர் தம் குமாரத்தியை அய்யருக்கு மணமுடிக்க வலுவில் முன் வந்தார். வந்ததை விடவேண்டாமென்று ஐய்யரது தகப்பனாரும், தம் மகனுக்குக் கல்யாணம் நடத்தி வைத்தார். திருச்சியில் முதல் கிரேடு காலேசில் படித்து முதல் வகுப்பில் தேறி பி. ஏ. பட்டமும் பெற்று விட்டார் அய்யர். மேற்கொண்டு எந்த வழியில் பிரவேசிக்கலாம் என்று அவர் யோசித்துக் கொண்டிருந்த சமயம், அவரது மனைவியின் நெருங்கிய உறவினரும் ரங்கூனில் பெரிய தனவந்தருமான பசுபதி அய்யர் என்பவர், அய்யரை ரங்கூனுக்கு அழைத்தார். அவரை பாரிஸ்டர் படிப்புக்கு இங்கிலாந்துக்கு அனுப்புவதாகவும் வாக்களித்தார். ஐயரும் சரி யென்று ஒப்புக்கொண்டார்.

## இங்கிலாந்து நோக்கி...

பாரிஸ்டர் பட்டம் பெற்றால் நிறைய சம்பாதிக்கலாம் என்ற ஆசை அய்யருக்கு இருந்தது. இங்கிலாந்து போய்ப் படிக்கத் துவங்குவதற்கான முஸ்தீபுகளைச் செய்து வந்தார். பசுபதி ஐயரும், பிரயாணத்திற்கும், இங்கிலாந்தில் செலவுக்கும் வேண்டிய பணம் தயாரித்துக் கொடுத்து விட்டார். ஐயர் தமது இளம் மனைவியையும் ஒரு சிறு பெண் குழந்தையையும் இந்த அடிமை நாட்டில் விட்டுவிட்டு, பாரிஸ்டர் பட்டப் படிப்புக்காக சுதந்திர நாடான இங்கிலாந்துக்குப் புறப்பட்டு விட்டார்.

கப்பலில் ஏறியவுடன் ஐயர் சுதந்திரப் புருசர்களைப் பார்த்தார். அவர்கள் எவ்வளவு சுதந்திரமாய் தங்கள் தாய் நாட்டுக்கும் குடும்பங்களுக்கும் எவ்வித கவலையுமில்லாமல் உழைக்கிறார்கள் என்பதை கண் குளிரப் பார்த்தார். தம் தாய் நாட்டுக்கும் அதிசீக்கிரம் விமோசனம் கிடைக்க வேண்டும் என்ற ஆசை அவர் மனதில் சிறு வித்தாக ஊன்றியது.

ஆனால் அவரது கவனமெல்லாம் படிப்பிலேயே இருந்தது. இவ்வித திடச்சித்தத்துடன் அய்யர் இங்கிலாந்து போய் சேர்ந்தார்.

அய்யர் இங்கிலாந்து போய்ச் சேர்ந்தவுடன் சுதந்திரக் காற்றை உட்கொண்டார். எங்கும் உள்நாட்டுக் கொடியே பறந்து கொண்டிருப்பதைக் கண்டார். மக்கள் கவலையில்லாமல் மகிழ்ச்சியுடன் அவரவர்களுக்குரிய அலுவல்களுக்குச் செல்வதைப் பார்த்தார். இவரும் தாம் தங்குவதற்கு வேண்டிய வசதி செய்துவிட்டு பாரிஸ்டர் படிப்பில் சேர்ந்து விட்டார்.

## இங்கிலாந்தில்

ஐயர் ஒழிந்த நேரத்தைச் சிறிதும் வீணாக்க மாட்டார். ஓய்வு நேரத்தில் இந்தியா ஆபிஸ் புத்தகசாலைக்குப் போய் தமக்குப் பிரியமான புத்தகங்களை எடுத்து வந்தார். மாஜினி, கரிபால்டி, நெப்போலியன் போன்ற ஐரோப்பிய தேச பக்தர்களின் சரித்திரங்களையும், நெப்போலியன் எழுதியிருக்கிற யுத்த சாத்திரதனதயும் முதலில் படித்தார். இவ்வித நூல்களைப் படிக்கப் படிக்கப் ஐயருக்கு தேசபக்தி ஆவேசம் பொங்கி எழுந்தது. ஆனால் எதையும் வெளியே காட்டாமல் அடக்கிக் கொள்வதில் ஐயர் மிகுந்த சாமர்த்தியசாலி. அவர் மனதிலுள்ளதைப் பிறரால் சிறிதும் தெரிந்து கொள்ளவே முடியாது.

புத்தகசாலையில் ஐயருக்கு ஒரு தக்க நண்பர் கிடைத்தார். அவர்தான் விநாயக தாமோதர சாவர்க்கார். அந்நாளில் அவர் ஒரு பயங்கரமான தீவிரவாதி. பல வாறும் நாட்டுக்கு சேவை செய்து கொண்டு வீர சாவர்க்கார் '1857ம் ஆண்டின் இந்திய சுதந்திர யுத்தம்' என்ற நூலை ஆங்கில மொழியில் எழுதி வந்தார். இந்தியாவில் கொடுங்கோன்மை நடத்தி வந்த ஆங்கிலேயர்களைப் பழிவாங்குவதிலும் சாவர்க்கார் கண்ணும் கருத்துமாயிருந்தார். இருவரும் சேர்ந்து இந்திய விடுதலைக்காகப் பல திட்டங்கள் போட்டார்கள். ஐயர் புதுவையில் பாரதியாரை ஆசிரியராகக் கொண்டுமிகுந்த சிறப்புடன் நடந்து வந்த 'இந்தியா' பத்திரிகைக்கு வாரந்தோறும் 'லண்டன் கடிதம்' என்ற தலைப்பில் கட்டுரைகள் எழுதி வந்தார், கரிபால்டி போன்ற வீரர்களின் சரிதமும் எழுதி வந்தார்.

## வீரசாவர்க்கார் தொடர்பு

லண்டன் ரகசியப் போலீசார் சாவர்க்காரை மிகுந்த கவனத்துடன் கண்காணித்து வந்தார்கள். ஐயரும் அந்த கண்காணிப்பு வலையில் இருந்து தப்பவில்லை. சாவர்க்கார் தாம் எழுதி முடிந்த புத்தகத்தை பிரான்சில் அச்சடிக்க முயன்றார்; அங்கு சாத்தியமில்லாமல் போயிற்று. உடனே இங்கிலாந்திலேயே அச்சடிக்க சாவர்க்கார் ஏற்பாடு செய்து விட்டார். ஐயரும் இதற்கு நல்ல உதவி செய்து வந்தார். இதையறிந்த பொலீசார் மேலும் இவர் மேல் கண்காணிப்பை அதிகரித்தனர். இந்திய அரசாங்கமும் சாவர்க்கார் புத்தகம் இந்தியாவுக்குள் எந்த மார்க்கமாயும் வரக்கூடாது என்று தடுத்துவிட்டது.

இந்தியாவில் ஓர் ஆங்கிலேயரை சுட்டுக் கொன்ற வழக்கில், சாவர்க்காரின் தூண்டுதலினால் இந்தக் கொலை நடந்தது என்று கருதி இந்திய அரசாங்கம் சாவர்க்காரை இந்தியாவுக்குக் கொண்டு செல்ல முயற்சித்தது. 'இனி இங்கிருப்பதில் பயனில்லை நமக்கும் இதே கதிதான் வரும்; இங்கே நிம்மதியாய் இருந்து நாட்டுக்குச் சேவை செய்ய முடியாது' என்று ஐயர் தெரிந்து கொண்டார். இந்திய விடுதலையையே பிரதானமாக எண்ணி அதற்காக காரியங்கள் செய்து வந்த அய்யர் பாரிஸ்டர் பட்டம் பெறுமலேயே பிரான்ஸ் சென்று விட்டார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் இந்தியாவில் ஐயரது [illegible] புதல்வி நோயவா[illegible] வேண்டிய சிகிச்சை செய்தும் குணமடையாமல் இறந்து விட்டாள். ஐயரது இருப்பிடம் சரிவரத் தெரியாததால் அவருக்கு இச்செய்தியை அவரது குடும்பத்தார் உடனே தெரியப் படுத்த முடியவில்லை.

## பிரான்சில்

பிரான்சில், பார்ஸி சீமாட்டி காமா என்ற அம்மையார் 'வந்தே மாதரம்' என்ற ஓர் மாதப் பத்திரிகையை இந்திய சுதந்திரத்தைக் குறிக்கோளாக வைத்துக் கொண்டு நடத்தி வந்தார். அதை இந்திய அரசாங்கம், தடுத்ததால் பல மார்க்கங்களினாலும் ரகசியமாய் இந்தியாவுக்குஅனுப்பி மக்கள் படித்து விழிக்கும்படி செய்து வநதார் அவர்.

ஐயர் அந்த அம்மாளிடம் போய்ச் சேர்ந்தார். இந்திய விடுதலைக்காக ஒரு ஸ்தாபனத்தை அந்த அம்மையார் உதவியுடன் பிரான்சில் ஸ்தாபிக்க எண்ணினார். ஐயரும் அம்மையாரும் சில இந்திய அபிமானிகளிடம் இவ்விடயத்தைக் கலந்தனர். பிரான்சுக்கும் இங்கிலாந்துக்கும் நேசபாவ உடன்படிக்கை (Entente Cordiale) இருந்ததால், இந்தியாவை ஆதரிப்பது இங்கிலாந்துடன் விரோதம் ஏற்படுத்தக் கூடுமென்று எண்ணிப் பல பிரமுகர்கள் இந்த எண்ணத்துக்கு ஆதரவு தரவில்லை.

இதை அறிந்த ஐயர் உடனே ஜெர்மனியில் தம் எண்ணத்தை நிறைவேற்றலாமென்று அங்கு சென்றார். அங்கிருந்து 'தல்வார்' ('வாள்') என்ற ஒரு மாதப் பத்திரிகை இந்திய சுதந்திரத்துக்காகவே பிரசுரமாகிக் கொண்டிருந்தது. அதை நடாத்தி வந்தவரிடம் ஐயர் தெளிவாகத் தம் அபிப்பிராயத்தை வெளியிட்டார். அவர் உடனே ஜெர்மனிக்கும் இங்கிலாந்துக்கும் நேச உறவு கிடையாது; பகைமை தான் குடிகொண்டிருக்கிறது. இருந்தாலும் இங்கே இந்திய சுதந்திரத்துக்கு அதிக உதவி கிடைக்காது என்று கண்டிப்பாகச் சொல்லி விட்டார்.

## சுவிட்சர்லாந்தில்

சுவிட்சர்லாந்தில் சியாமாஜி கிருஷ்ணவர்மா என்ற ஓர் இந்திய சீமான் 'இந்தியன் சோஷியாலஜிஸ்ட்' என்ற ஒரு மாதப் பத்திரிகையை இந்திய விடுதலைக்காகவே நடத்திவந்தார். அவரிடம் ஐயர் போய்ச் சேர்ந்தார். அவரிடம் யாவும் சொல்லி கலந்து பேசினார். சுவிட்சர்லாந்து ஒரு சிறிய குடியரசு நாடு, கைத்தொழில்கள் நிறைந்த காடு. மக்கள் தங்கள் தங்கள் கைத்தொழில்களில் சுறுசுறுப்பாய் ஈடுபட்டுக் கொண்டு இருப்பதால் வேறு காரியங்களில் ஈடுபட அவர்களுக்கு நேரமே கிடையாது. ஆனதால், ஐயர் எண்ணத்துக்கு அங்கு மக்கள் செவி சாய்க்கவில்லை.

பிறகு என்ன செய்யலாமென அய்யர் ஆழ்ந்து யோசித்தார். அவருக்கோ உருது பாஷை நன்றாய்த் தெரியும். தாடியும் வைத்திருந்தார். மகம்மதியப் பெயர் வைத்துக் கொண்டு ஒரு முஸ்லிம் போல துருக்கிக்குப் போய், அங்கே தம் [illegible] குத் தோன்றியது.

உடனே அய்யர் துருக்கிக்குச் சென்றார். போனவுடன் துருக்கியிலிருந்த சில முஸ்லிம்களைக் கண்டு தம் கொள்கைகளை சவிஸ்தாரமாய் மறைக்காமல் சொன்னார். 'இங்கிலாந்தின் உதவி எங்களுக்கு மிகவும் அவசியமாயிருக்கிறது; தாங்கள் சொன்னது போல் ஸ்தாபனம் இங்கே ஆரம்பித்தால் எங்களுக்கும் அவர்களுக்கும் விரோதம் ஏற்படலாம். ஆனதால் நாங்கள் அதில் சேரமாட்டோம்' என்று துருக்கிப் பிரமுகர்கள் சொல்லி விட்டார்கள். அங்கும் ஐயருக்கு ஆதரவு கிடைக்கவில்லை. கடைசியாக இந்தியாவில் பிரெஞ்சு ஆதிக்கத்திலிருந்த புதுச்சேரிக்கும் போய் இந்திய விடுதலைக்குச் சேவை செய்யலாமென்ற முடிவுக்கு வந்தார் ஐயர்.

ஐயர் துருக்கியிலிருந்து கப்பல் மூலம் எகிப்துக்கு வந்து சேர்ந்தார். எகிப்திலிருந்து பிரெஞ்சு மெயில் கப்பல் மூலம் புதுச்சேரி துறைமுகம் வந்து சேர்ந்தார்.

## புதுச்சேரியில்

ஐயர் கப்பலிலிருந்து இறங்கிப் படகு மூலம் கடற்கரைக்கு வந்ததும் ஒரு 'புஷ் வண்டி'க்காரனைக் கூப்பிட்டு 'இந்தியா' ஆபீசுக்கு அழைத்துப் போகச் சொன்னார். வண்டிக்காரன் மிகுந்த மகிழ்ச்சியுடன் நிறைய காசு இன்று கிடைக்கும் என்ற எண்ணத்துடன் 'ஏறுங்க சாமி, நான் உங்களை இந்தியா ஆபீசில் கொண்டு போய் விடறேன்' என்று சொன்னான்.

ஐயர் வண்டியில் ஏறிக் கொண்டார். வண்டிக்காரன் ஐயரை ஏற்றிக் கொண்டு அதிவேகமாய் வண்டியை இழுத்து வந்து 'இந்தியா' ஆபீசுக்கு எதிரில் நிறுத்தினான். 'இந்தியா' ஆபீஸ் மெத்தைமேல் ஸ்ரீநிவாசாச்சாரியார், பாரதியார், நான் (என். நாகசாமி) ஆகிய மூவரும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தோம். அப்பொழுது சாயங்காலம். வெளியே 'இந்தியா' ஆபீஸ் போர்டு தொங்கிக்கொண்டிருந்தது.

வண்டி வந்து நின்றதும் போர்டைப் பார்த்தார் ஐயர். உடனே உரத்த குரலில் 'ஸ்ரீநிவாசாச்சாரியார்' என்று கூவினார். மெத்தை மேலிருந்து எல்லோரும் எட்டிப் பார்த்துவிட்டு கீழிறங்கி தெருவுக்கு வந்தோம். நீண்ட காற் சட்டையும் கோட்டும் போட்டுக் கொண்டு, தலையில் முஸ்லிம் தொப்பி வைத்துக்கொண்டு கால்களில் சப்பாத்து அணிந்து நீண்ட தாடியுடன் இருந்த ஓர்மனிதனைக் கண்டோம். யாரென்று அவரைக் கேட்டோம். உடனே ஐயர் ஸ்ரீநிவாசாச்சாரியாரிடம் 'நீங்கள் தானே ஸ்ரீநிவாசாச்சாரியார்' என்று நெற்றியிலிருந்த நாம ஸ்ரீசூரண அடையாளத்தைப் பார்த்துக் கேட்டார். 'ஆம். நான்தான்' என்று ஸ்ரீநிவாசாச்சாரியார் சொன்னார்.

வண்டிக்காரனுக்கு வாடகையை திருப்தியாய்க்

(14-ம் பக்கம் பார்க்க)

பணம் வேண்டுமா?
அல்லது
மணம் வேண்டுமா?

எது வேண்டும்?

உங்கள் மனம் எது வேண்டுமென்று சொல்லுகின்றதோ அதனை இன்றே செய்து கொள்ள எனக்கு எழுதுங்கள் அல்லது என்னை நேரில் சந்தியுங்கள்!

அத்துடன்

சிதனத்துடனே அல்லது சிதனமில்லாமலோ கல்யாணம் கட்ட, கணவன்-மனைவி தகராறு தீர, காதல் நிறைவேற, கடன் கஷ்டம் நீங்க, தொழில், வியாபாரம் ஓங்க, நிலபுலன், வருமானம் பெருக, வழக்கு பரீட்சையில் வெற்றி பெற, கண்-வாய் திருஷ்டி மற்றும் தோஷங்கள் அகல...

தேவ அருளினாலும், மந்திர பலத்தினாலும், ஞான சக்தியினாலும் நிறைவேற்றித் தர முடியும்.

செவ்வாய் முதல் சனி வரை நேரில் சந்திக்க வேண்டிய விலாசம்:

மகா மாந்திரிக கலாநிதி

பி. எம். திசாநாயக்க,

103, ஸ்ரீசங்கராஜ மாவத்த,
மருதானை - கொழும்பு.

ஞாயிறும், திங்களும் இருக்கும் விலாசம்:

அருத எண்டனை் தொழிலகர்,
கம்பளை. போன்: 454

குறிப்பு:- கடிதங்கள் கம்பளை விலாசத்திற்கே எழுதப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
SUTANTIRAN

1965 யூன் மாதம் 20-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.
தொலைபேசி எண் - 3411 த. பெ. 1183

# தவருன நடவடிக்கை

ஓர் அதிர்ச்சி தரும் செய்தி. கள்ளக் குடியேற்றத்தைத் தடுக்க வடபகுதிக்கு மேலும் பட்டாளம் அனுப்பப்படுகிறதாம். மன்னருக்கு ஏற்கனவே இரு பட்டாளங்கள் அனுப்பியுள்ளனராம். கரையோர இராணுவம் இருமடங்கு பலப்படுத்தப்படுமாம்.

தமிழ்ப் பிரதேசத்துக்கு மென்மேலும் இராணுவம் அனுப்பப்படுவதை வரவேற்றுள்ளது சிங்களத் தினசரி 'லங்காதிப'. "இராணுவத்தினரை மென்மேலும் வட, கிழக்குக் கரையோரங்களில் நிறுத்திவைக்கும் அளவுக்கு நாட்டுக்கு நன்மை ஏற்படும்" என்று இப் பத்திரிகை தலையங்கம் தீட்டியுள்ளது.

தமிழ்ப் பகுதிகளிலிருந்து இராணுவம் அகற்றப்பட வேண்டுமென்பது தமிழ்ப் பேசும் மக்களின் நீண்டகாலக் கோரிக்கையாகும்.

கள்ளக் குடியேற்றத்தைத் தடுப்பதற்கென முன்னள் அரசாங்கம் இராணுவத்தை அனுப்பியது. ஆனால் இராணுவத்தினரோ மக்களைத் துன்புறுத்துவதில் இறங்கினர். அவர்கள் செய்த அட்டூழியம் சொல்லுந்தரமன்று. அவர்கள் கள்ளக்குடியேற்றக்கைக் கடுப்பதிலும் பார்க்க தமிழ்ப் பேசும் மக்களை இம்சிப்பதிலேயே அதிக அர்வம் காட்டினர். "அக்கிரமிப்பு இராணுவம்" போல அவர்கள் அட்டகாசம் செய்தனர். மக்கள் பீதியால் நடுங்கினர். இன்னும் அவர்களின் அட்டகாசம் அடங்கவில்லை என்பதை அண்மையில் நிகழ்ந்த சில சம்பவங்கள் எடுத்துக் காட்டின.

இராணுவத்தினரை தமிழ்ப்பகுதியிலிருந்து வாபஸ் வாங்குமாறு பாராளுமன்றத்தில் பன்முறை வற்புறுத்தப்பட்டது. முன்னள் ஆட்சியாளர் அதற்குச் செவிசாய்க்கவில்லை. அவர்கள் பட்டாளத்தைக் கொண்டு தமிழ்ப்பேசும் மக்களைத் தொடர்ந்து பயமுறுத்தி வந்தனர். கள்ளக்குடியேற்றத் தடுப்ப ஒருபுறமிருக்க, மக்களின் விடுதலை உணர்ச்சியை அடக்க இராணுவத்தை வடபகுதியில் நிறுத்தவேண்டியது அவசியம் என்று அவர்கள் கருதினர். இராணுவ அட்டூழியங்களைப் பற்றி அவர்கள் கவலைப்படவேயில்லை.

காலம் மாறியது. தேசிய ஆட்சியும் வந்தது. சூழ்நிலை மாறி, நல்லெண்ணம் தோன்றியது. உரிமைகளைப் பெறுவதற்கான வாய்ப்பும் கிட்டியது. மக்களுக்கு நம்பிக்கையும் பிறந்தது. எனவே தமிழ்ப் பகுதியிலிருந்து இராணுவம் வாபஸ்பெறப்படவேண்டுமென்று மக்கள் மீண்டும் வற்புறுத்தினர். தேசிய அரசாங்கம் அவர்களின் கோரிக்கைக்குச் செவிசாய்க்குமென்றே நம்பினர்.

இதற்கிடையே பத்திரிகைகள் காற்றாடிகளைப் பறக்கவிட்டன. கள்ளக் குடியேற்றம் திடீரென அதிகரித்துவிட்டதாக அவை கயிறுதிரித்தன. (தேசிய அரசாங்கத்தை ஆதரிப்பதாகக் கூறும் இப் பத்திரிகைகளே அரசாங்கத்துக்குக் குழிதோண்டுகின்றன). பத்திரிகைச் செய்தி எதிர்க் கட்சியைத் தட்டியெழுப்பியது.

அவர்கள் கிளர்ச்சி செய்யத் தொடங்கினர். அரசாங்கம் கள்ளக் குடியேற்றத் தடுப்பைக் கைவிட்டுவிட்டதென்று குற்றஞ்சாட்டினர். தமிழரசு வேண்டுகோளின்மீது அரசாங்கம் இராணுவத்தை வாபஸ் செய்யப் போவதாகவும் கூச்சலிட்டனர். கண்டனக் கூட்டங்கள் நடத்தினர்.

இக் கிளர்ச்சிக்கு அரசாங்கம் பணிந்தது. "ஐயோ அபாண்டம்! இராணுவத்தை வாபஸ்வாங்கும் உத்தேசமே கிடையாது" என்று வெளிவிவகார இலாகா அறிக்கை விட்டது. அத்துடன் மேலும் இராணுவத்தை அனுப்பியும் வருகிறது.

இதிலிருந்து இரு விஷயங்கள் தெளிவாகின்றன. ஒன்று தேசிய அரசாங்கமே எதிர்க் கட்சிகளின் கிளர்ச்சிக்கு இடம் கொடுக்காமலிருப்பது—மற்றொன்று சிங்கள மக்களின் ஆதரவைப் பெறுவதற்காகச் சுதந்திரக் கட்சியின் பாதையிற் செல்லவும் தயாராயிருப்பது.

எதிர்க்கட்சிகளின் கூற்றுக்கு மதிப்பளிக்கவேண்டியதே. எதிர்க் கட்சியினரின் ஆக்கபூர்வமான யோசனைகளை ஏற்றுக்கொள்ளலாம். அழிவைக் கொண்டுவரும் யோசனைகளுக்கும் அரசாங்கம் ஏன் செவிசாய்க்கவேண்டும்? தேசிய ஐக்கியத்தைச் சிதைத்து, தேசிய அரசாங்கத்தைப் பலவீனப்படுத்தும் தீய எண்ணத்துடன் செய்யும் தவருன கிளர்ச்சிக்கு விட்டுக் கொடுக்காத ஆற்றலும் துணிவும் அரசாங்கத்துக்கு இருத்தல் வேண்டும்.

மக்களைத் தவருன வழியில் இழுத்துச் செல்ல எதிர்க் கட்சியினர் முயன்ருல், உடனே அரசாங்கம் மக்களுக்கு உண்மையை விளக்கிக் கூறவேண்டும். அவர்களின் விஷமத் தனத்தை அம்பலப்படுத்தவேண்டும். பிரச்சினையைத் தீர்க்க ஆக்கபூர்வமான புதிய திட்டமொன்றினை மக்கள் முன் சமர்ப்பித்து எதிர்க் கட்சியினரின் வழி தவருனது என்பதை நிரூபித்துக் காட்டவேண்டும்.

கள்ளக் குடியேற்றம் ஒரு நீண்டகாலப் பிரச்னையாகும், இதைத் தீர்ப்பதற்கான ஒரே வழி தமிழ்ப் பேசும் மக்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்வதுதான். கள்ளக் குடியேற்றத்தைத் தடுக்கவேண்டுமென்பதில் தமிழ்ப் பேசும் மக்கள் அக்கறையுள்ளவர்களே. இவ்விடயத்தில் சிங்கள மக்களுக்குள்ள சிரத்தை தமிழ்ப் பேசும் மக்களுக்கும் உண்டு. எனவே அவர்கள் நிச்சயம் ஒத்துழைப்பு அளிப்பார்கள்.

மக்களின் ஒத்துழைப்புடன் பொலிசாரே கள்ளக்குடியேற்றத்தை வெற்றிகரமாகத் தடுத்துவிடலாம். இந்த உண்மையை அரசாங்கம் சிங்கள மக்களுக்கு ஏன் விளக்கிக் கூறவில்லை? அதற்குப் பதிலாக மென்மேலும் இராணுவத்தை அனுப்புவது சுதந்திரக் கட்சி செய்ததுபோல சிங்கள மக்களைத் தவருன வழியில் இழுத்துச் செல்வதாகும்.

கள்ளக் குடியேற்றத் தடுப்பில் இதுவரை இராணுவம் வெற்றி பெறவில்லையே! மக்களின் ஒத்துழைப்பின்றேல் எத்தனை பட்டாளங்களை அனுப்பினுலும் வெற்றி பெற முடியாது என்பதை உணர அரசாங்கம் தவறியதேன்? கள்ளக் குடியேற்றத்தைத் தடுக்க தமிழ்ப் பேசும் மக்களின் ஒத்துழைப்பைக் கோராமல் மென் மேலும் இராணுவத்தை அனுப்பிக் கொண்டிருப்பது அந்த மக்கள் மீது நம்பிக்கை கிடையாது என்று கூருமல் கூறுவது போலல்லவா இருக்கிறது;

கள்ளக் குடியேற்றம் ஓர் அரசியற் பிரச்சினை. அதிகாரிகளின் கருத்தின்படி செய்யாமல் அரசியல் ரீதியாகவே இப் பிரச்னையைத் தீர்க்கவேண்டும். ஆகவே தமிழ்ப் பேசும் மக்களின் ஒத்துழைப்புடன் பொலீசாரே தடுப்பு நடவடிக்கைகளை ஏற்பாடு செய்யவேண்டும். இதற்கு இராணுவம் தேவையில்லை. இதனைச் சிங்களப் பெருமக்களுக்கு விளக்கி அவர்களின் ஆதரவையும் திரட்ட வேண்டியது ஆட்சியாளரின் கடமையாகும்.

# உள்ளூராட்சி மன்றங்களும் தமிழ் மொழி நிர்வாகமும்

தமிழ் மொழி ஆட்சி நிர்வாகத்தில் சமத்துவம் பெற வேண்டுமென்பதில் தமிழ் பேசும் மக்கள் எவருக்கும் இரண்டு பட்ட கருத்து இருக்கமுடியாது. நாட்டின் சகலதுறைகளிலும் சிங்கள மொழியுடன் தமிழும் இடம்பெறவேண்டுமென்பதே எல்லோருடைய இலட்சியமுமாக இருக்கிறது.

நாட்டு நிர்வாகத்திலதமிழ் மொழி சமத்துவம் பெறுவதற்கு முன்னர் நமது பிரதேசத்தில் நமது மொழி ஆட்சி மொழியாக்கப்பட வேண்டும். அதற்கான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருவதாகத் தெரிகிறது.

## யாருடைய பொறுப்பு?

சட்டத்தின் மூலம் தமிழ் வட-கிழக்குப் பிரதேசத்தின் ஆட்சி மொழியென்று பிரகடனப்படுத்திவிட்டால் பிரச்சினை தீர்ந்துவிட மாட்டாது. வெறுமனே சட்டத்திலமட்டும் தமிழ் மொழி தமிழ்ப்பிரதேசத்தின் ஆட்சி மொழி என்பதில் அர்த்தமில்லை. அது நடைமுறையிலும் இருக்க வேண்டும்.

தமிழ் மொழி தமிழ்ப் பிரதேசத்தின் ஆட்சிமொழியாகத் திகழச்செய்வது யார் கையில் தங்கியுள்ளது? இப் பொறுப்பு ஒவ்வொரு தமிழ் பேசும்மக்களையும் சார்ந்தது. தமிழ்பேசும்மக்கள் ஒவ்வொருவரும் 'தமது கடமைகளை தமிழ் மொழியில் செய்யத் தலைப்பட்டால் தமிழ்மொழி யார் உதவியுமின்றி தமிழ் பிரதேசத்தின் ஆட்சிமொழியாகமட்டுமல்ல நாட்டு நிர்வாகத்திலும் நிச்சயம் சமத்துவம் பெறும். இந்த உண்மையை உணர்ந்தே அமரர் வன்னியசிங்கம், கிளிநொச்சிப் பிரதிநிதி கா. பொ. இரத்தினம் போன்றவர்கள் தமிழரசுக்கட்சியின் துணையுடன் எல்லாம் தமிழ் இயக்கத்தை நடத்தினர்கள்.

## உள்ளூராட்சி மன்றங்கள்

எல்லாந் தமிழ் இயக்கம் இன்று எந்தளவில் தனிமனிதன் மட்டிலோ அல்லது தமிழ் பேசும் மக்கள் சம்பந்தப்பட்ட பொது இயக்கங்களிலோ அமுல் நடாத்தப்படுகிறது என்றுகேட்கிருேம்.

தமிழ் மொழி தவிர்ந்த ஏனைய மொழிகள் எதையுமே தெரியாத தமிழர்கள் பலரும் இன்று தமிழ்மொழியிலா தங்கள் கருமங்கள் அனைத்தையும் நடாத்துகிருர்கள்? தமிழர் மத்தியில் உள்ள ஒரு சில பொறுப்பற்ற அரசியற் கட்சிகள் இன்றும் காலனித்துவ காலத்தைக் கற்பனை செய்துகொண்டு ஆங்கிலத்துக்குத் துதிபாடுகிருர்கள். இவர்கள் தமிழ் பேசும் மக்களை தவருன வழியில் இட்டுச்செல்கிருர்கள் என்பதை மறுக்கமுடியாது.

தமிழ் மொழி தமிழ்ப்பிரதேசத்தின் ஆட்சி மொழியாக வேண்டுமானுல், முதலில் உள்ளூராட்சி மன்றங்கள் தங்கள் கருமங்கள் அனைத்தையும் தமிழில் செய்யவேண்டும். தமிழ் பிரதேசங்களில் உள்ள உள்ளூராட்சி மன்றங்கள் எல்லா அலுவல்களையும் தமிழில் செய்யப் போவதாக தீர்மானங்கள் எடுத்ததை நாம் மறக்கவில்லை. ஆனுல் அத்தீர்மானம் இன்று எத்தனை உள்ளூராட்சி மன்றங்ககளில் சரிவர அமுல் நடாத்தப்படுகிறது என்று கேட்கிருேம்.

## தீர்மானம் அமுல் செய்யப்படுகின்றதா?

ஆடிட்டர்- ஜெனரல் திணைக்களத்துடனும், வேறு சில திணைக்களங்களுடனும் தமிழ் பிரதேசங்களில் உள்ள பெரும்பாலான உள்ளூராட்சிமன்றங்கள் இன்றும் ஆங்கிலத்திலேயே தொடர்பு கொள்கின்றன. இதுதான் எல்லாம் தமிழில் செய்வோம் என்ற முடிவு அமுல் நடாத்தப்படும் இலட்சணமா

சுதந்திரன்
அரசியல் விமர்சகர்

என்று இவ்வுள்ளூராட்சி மன்றங்களையும் அதன் தலைவர்களையும் கேட்க விரும்புகிருேம். ஏட்டளவில் தீர்மானங்கள் வேண்டாம். செயலில் காட்ட உள்ளூராட்சி மன்றங்கள் உடன் முன்வரவேண்டும். அப்பொழுதுதான் தமிழ் வட-கிழக்கின் ஆட்சி மொழியாகத் திகள முடியும்.

## அரசின் ஆதரவு

அரசாங்க திணைக்களங்கள் கூட்டரவுகள் வெளியிடும் சகல பத்திரங்களிலும் தமிழ் மொழி இடம்பெற வேண்டும் என்று கடந்த வாரம் நடைபெற்ற அரசாங்க பாராளுமன்றக் குழு முடிவு செய்துள்ளது. சகல அரசாங்க திணைக்களங்களுடனும் எத்தகைய அலுவல்களையும் தமிழில் நடாத்த போதிய வசதிகள் செய்யப்பட்டுள்ளன. தமிழில்கடிதம் எழுதினல் தமிழ் மொழியிலேயே பதில் கொடுப்பதென்றும் முடிவாகிவிட்டது.

ஆகவே தமிழ் பேசும் பொது மக்கள் தங்கள் கருமங்கள் அனைத்தையும் இனி தமிழிலேயே செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிருேம். இதைச் சிலதனி நபர் அரசியற் கட்சிகள் முறியடிக்க முயலலாம். அவர்கள் காலனித்துவ கால அரசியல் வாதிகள். அவர்களை ஒரு புறம் ஒதுக்கிவிட்டு சகல தமிழ் பேசும் மக்களும் தங்கள் கருமங்களை தமிழில் செய்யவேண்டும்.

தமிழர்கள் தமிழை ஒதுக்கிவிட்டு தமிழ் மொழிக்குச் சட்டமூலம் சமத்துவம் வேண்டுமென்ருல் அது நாம் நம்மையே ஏமாற்றுவது போலாகும். எனவே தமிழ் பேசும் மக்கள் அனைவரும் தங்கள் கருமங்கள் அனைத்தையும் தமிழில் செய்து தமிழ் மொழியை தமிழ் பிரதேசத்தின் ஆட்சி மொழியாக்க முயலவேண்டும்.

# திரு. ஜீ. ஜீ. வெளியேறுவாரா?

தேசிய அரசாங்கத்தின் கொள்கையையும், வேலைத் திட்டங்களையும் இரு மாதங்களுக்குமுன்னர் சமர்ப்பிக்கப்பட்ட அரியணை உரை தெளிவுபடுத்தியுள்ளது. நாட்டை எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளை எப்படி தேசிய அரசாங்கம் அணுகப் போகிறதென்பது, இவ்வுரையில் நன்கு தெளிவு படுத்தப்பட்டுள்ளது.

தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகள் எப்படித் தீர்த்துவைக்கப்படும் என்பதும் அரியணை உரையில் தெளிவு படுத்தப்பட்டிருக்கிறது. இந்த அரியணை உரையை ஆதரித்துப்பேசி வாக்கும் கொடுத்த திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் பொது மேடைகளில் அரியணை உரைக்கு எதிராகப் பிரசாரம் செய்து வருகிருர்.

## மாவட்ட சபைகள்

மாவட்டசபைகள் அமைக்கப்படும் என்று அரியணை உரையில் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. அதை ஆதரித்து வாக்களித்த திரு. பொன்னம்பலமும் அவர் குழுவினரும் இன்றுமாவட்ட சபைகளுக்கு எதிரான பிரச்சாரத்தை வேகமாக முடுக்கி வருகிருர்கள்.

மறுபுறத்தில் தேசிய அரசாங்கத்தின் மொழிக்கொள்கை என்ன என்று தெரியாது என்கிருர் திரு. ஜீ. ஜீ. தேசிய அரசாங்கத்தின் மொழிக் கொள்கை என்ன என்பதை நாடறியும். ஆனுல் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் அறியவில்லையாம்?

தான் அறியாத மொழிக் கொள்கையை எப்படிக் கண்டிக்க முடியும் என்றும், தான் தேசிய அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைக் கண்டிப்பதாக தமிழரசார் கூறுவது முழுப் பொய் என்றும் ஒரு பொய்யை திரு. பொன்னம்பலம் கூறியுள்ளார்.

## சரணுகதியா?

தேசிய அரசாங்கத்தின் மொழிக் கொள்கை தெரியாது என்று விவாதத்திற்காக வைத்துக்கொண்டால், திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் இந்தஅரசாங்கத்தில் சேரும் பொழுது அரசாங்கத்தின் கொள்கையைத் தெரிந்து கொள்ளாது சேர்ந்தாரா என்ற கேள்வி எழுகிறது.

ஒரு அரசாங்கத்தின் கொள்கை என்ன என்று தெரி

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழில் சமாதான சபை அலுவல்கள்

## உள்ளூராட்சி..

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

யாமல் அதனுடன் சேருவது என்றால் அதன் நோக்கம் என்ன? இதைச் சரணுகதி என்பதா? அல்லது ஆளும் கட்சியில் இருக்க வேண்டுமென்ற மோகமா? அல்லது தனி நபர் வணக்கமா? அல்லது அரசியல் அறியாமையா? எது என்று இன்று தமிழ் பேசும் பொது மக்கள் திரு. பொன்னம்பலத்தைக் கேட்கிறார்கள். இதற்கு திரு. பொன்னம்பலம் பதில் கூறுவாரா?

தேசிய அரசாங்கத்தின் மொழிக் கொள்கை திரு. பொன்னம்பலத்தின் மொழிக் கொள்கைக்கு (அவரிடம் அப்படியொன்று இருந்தால்) மாறானதாக இருந்தால் திரு. பொன்னம்பலம் தேசியஅரசாங்கத்தைவிட்டு வெளியேறுவாரா என்று கேட்கிறோம்?

### எல்லாம் பொய்

பொறுப்பற்ற முறையில் இலட்சியம் எதுவுமில்லாமல் பேசுபவர்களின் பேச்சு இப்படித்தான் இருக்கும். தமிழரசாரைத் தாக்கவேண்டுமென்பதற்காக தமிழரசார் பொய்யர்கள் என்கிறார் திரு. பொன்னம்பலம். தமிழரசாரை பொய்யர்கள் என்று கூறுவதற்கு, ஒரு பெரிய பொய்யைக் கூற வேண்டிய நிர்ப்பந்தம் திரு. பொன்னம்பலத்திற்கு ஏற்பட்டுவிட்டது.

### இலங்கை வானொலி நிகழ்ச்சி மாற்றங்கள்

இலங்கை வானொலி தமிழ் நிகழ்ச்சிகளில் பல புதிய மாற்றங்கள் செய்யப்பட விருப்பதாக அறியக் கிடக்கிறது. உள்ளூர் கலைஞர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் இது இனிப்பூட்டும் செய்தி தான். இருப்பினும் இவ்விருதிறத்தாருக்கும் எத்தகைய சந்தர்ப்பங்கள் கிடைக்கப்போகின்றன என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

ஒலிபரப்பாகும் நிகழ்ச்சிகளில் பெரும் பாலும்இசைத் தட்டுக்கள் கூடிய பகுதி காலத்தை இழுத்துக் கொள்ளுகின்றன. நமது இரசிகர்களும் இசைத்தட்டு (பெரும் பாலும் படப்பாட்டுக்கள்) சங்கீதத்தை விரும்பி இரசிப்பது போல் வேறு நிகழ்ச்சிகளை இரசிப்பதாயில்லை. இதனால் நிகழ்ச்சி தயாரிப்பாளர்களுக்கும் வேலை குறைவு தான்.. எனினும் இசைத் தட்டுகளுக்காக காலத்தையும் காசையும் வீணாக்குவது ஓரளவு கட்டுப்படுத்தப்பட வேண்டுவது அவசியமே!

இசை நிகழ்ச்சிகளைப் பொறுத்த வரையில் ஈழத்தின் தரத்துக்கு ஏற்ற இசைக் கலைஞர்கள் இங்கு கிடைப்பது அரிதெனினும், உள்ளவர்களுக்கு அளிக்கப்படும் சந்தர்ப்பமும் வெகு குறைவாகவே கருதப்படுகிறது. தரமுள்ளவர்களைத் தெரிவு செய்வதிலும் சற்று விரிந்த மனப்பண்பு தேவை என்றும் பொதுப்படையாகக் கூறப்பட்டு வருகிறது. பழைய சாகித்திய கர்த்தாக்களின் சாகித்தியங்களை மட்டும் கலைஞர்களைப்பாட வைப்பதை ஓரளவு குறைத்து, புதிய முறையில்—மெல்லிசை ரீதியில்—புதிய கலைஞர்களை ஊக்குவிப்பதனால், சினிமா இசைத் தட்டுக்களையே விரும்பும் இரசிகர்களையும் ஓரளவு திருப்திப்படுத்தலாம்.

### நாடகம், கிராமநிகழ்ச்சி

நாடகம் இரசிகர்களைப் பெரிதும் கவரும் அம்சமாகும். இதற்கும் இப்பொழுது அளிக்கப்படும் காலம் போதாது என்றே கூற வேண்டும். நாடகத்துக்கான காலத்தை கூட்டுவது விரும்பத்தக்கது. கிராம சஞ்சிகை நிகழ்ச்சிகளும் ஒலிபரப்பு நிலையத்துக்குள் மட்டுமே அடங்கிவிடாமல் அகில இலங்கையையும் இணைத்து அணைத்திழுக்கக் கூடிய வகையில் விரிவடைய வேண்டும்.

கவிஞர்களுக்கு இடம் அளிக்க முன் வந்துள்ளமையை பாராட்டாமலிருக்க முடியாது. இதனால் பல கவிஞர்களுக்கு புது உற்சாகம் ஏற்கனவே பிறந்துவிட்டதை அவதானிக்க முடிகிறது.

### கல்வி ஒலிபரப்பு

பொதுவாகப் பாடசாலை நேரங்களிலேயே கல்வி ஒலிபரப்பினை ஒலிபரப்புவதனால் இதற்குப் போதுமான வரவேற்புக் கிடைக்கிறதுஎன்று கூற முடியாது. கால அட்டவணைப்படி தினசரி பாடங்களைப் போதிக்கும் ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களை வானொலி கேட்க வைக்க ஒப்புக் கொள்ளுவார்களா? ஆகவே இவ்வொலிபரப்பு பாடசாலை நேரங்களில் ஒலிபரப்புவதை எவரும் விரும்புவதில்லை.

பாடசாலை நேரத்துக்குப் புறம்பான வேளைகளில் இவ்வொலி பரப்புக்கள் இடம் பெறுமானால் மாணவர்களுக்கு மட்டுமல்ல, ஆசிரியர்களுக்கும் இதனால்பெரும் பயனுண்டு.

தேசிய ஒலிபரப்பு நிகழ்ச்சிகள்பல வர்த்தக ஒலிபரப்பின் ஊடுருவலால் வீணடிக்கப்பட்டு விடுவதனையும் காண்கிறோம். ஆகவே வர்த்தக ஒலிபரப்பு நிகழும்காலங்களில் தேசிய ஒலிபரப்பில் முக்கியமான நிகழ்ச்சிகளை இடம்பெருமல் செய்யும் பொறுப்பை அதிகாரிகள்கவனித்துக் கொள்ளவேண்டும்.

## தீண்டாமை ஒழிப்பு

தீண்டாமை ஒழிப்புக்குழுவின் சார்பில் திரு. சுந்தரம் அவர்கள் உள்ளூராட்சி அமைச்சர் திரு. மு. திருச்செல்வத்தைப் பேட்டி கண்டு பாகுபாடு காட்டும் தேனீர்கடை, சிகை அலங்கார நிலையம் போன்றவற்றின் அனுமதிச் சீட்டுக்களை இரத்துச் செய்யும் வண்ணம் கேட்டிருந்தார்.

தீண்டாமை ஒழிப்புக் குழுவினரின் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட அமைச்சர் அதற்கான விசேட சட்ட விதிகளை உருவாக்கத்தேவையில்லையென்றும் 1957ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட சமூக சீர்திருத்தச் சட்டத்தை அமுல்நடத்துமாறு பிரதமரைக் கேட்டுக்கொள்வதாகக் கூறினராம்.

சமூகசீர்திருத்தச் சட்டத்தின் பிரகாரம். சாதி அடிப்படையில் பாகுபாடு காட்டி தீண்டாமை பாரட்டுபவர்களுக்கு 100 ரூபா அபராதமோ அல்லது ஆறுமாத சிறைத் தண்டனை விதிக்களாம் என்பது குறிப்பிடத்தக்கது.

திரு. திருச்செல்வம் பிரதமருக்கு எழுதும் கடிதத்தில் இச் சட்டத்தை அமுல்நடாத்துமாறு பொலீஸ் திணைக்களத்துக்குப் பணிக்குமாறு கேட்டுக் கொள்வார். இச் சட்டத்தின் பிரகாரம் சாதி அடிப்படையில் பாகுபாடு காட்டும் சம்பவம் ஒன்று நடைபெற்றால் பாதிக்கப்பட்டவர் அருகில் உள்ள பொலீஸ் நிலையத்தில் சென்று முறையிடலாம். பொலீஸார் அம்முறைப்பாட்டை வைத்து வழக்குத் தொடருவார்கள்.

## தேசிய அரசாங்கம் செய்துள்ள முடிவு

**வட, கிழக்கு மாகாணங்களில் நிறுவப்படவிருக்கும் சமாதான சபையின் அலுவல்கள் தமிழில் மட்டும் நடத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்திருப்பதாக அறியப்படுகிறது.**

ஏழுமாகாணங்களில் சமாதான சபைகள் நிறுவப்பட்டுள்ளன. எனினும் தமிழ்ப் பிரதேசங்களில் இதுவரை இச்சபைகள் நிறுவப்படவில்லை. தமிழ்ப்பகுதிகளில் சமாதான சபைகளின் அலுவல்கள் தமிழிலேயே நடைபெற வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டதால், முன்னைய அரசாங்கம் இப்பகுதிகளில் சமாதான சபைகளை நிறுவாமலேயே இருந்துவிட்டது.

தேசிய அரசாங்கம்தமிழ்ப் பிரதேசங்களில் சுமார் 200 சமாதான சபைகளை நிறுவ முன்வந்துள்ளதாக அறியப்படுகிறது. அத்துடன் இச் சபைகளின் அலுவல்கள் தமிழிலே நடைபெறவேண்டுமென்றும் அரசாங்கம் தீர்மானித்திருக்கிறதாம்.

### அமய விடுதலை

அரசாங்க ஊழியர் ஒருவரின் நெருங்கிய உறவினர் திடீரென மரணமாகி விட்டால் சம்பந்தப்பட்ட ஊழியர் எப்படி விடுமுறை பெறுவது? அல்லது ஒரு அரசாங்க ஊழியர் சிலதவிர்க்க முடியாத காரணமாக விடுமுறை பெறவேண்டியிருந்தால் எப்படிப் பெறுவது? இதற்கு விசேட சட்ட விதிகள் ஏதாவது உண்டா? இப்படியான கேள்விகள் கொழும்பு வடக்கில் உள்ள தமிழ் பாடசாலை ஒன்றில் கடமையாற்றும் ஆசிரியர்கள் மத்தியில் கேட்கப்படுகிறதாம்.

இதற்குக் காரணம் சமயப் பெரியார் ஒருவரின் பெயரில் உள்ள இப்பாடசாலையின் தற்காலிகத் தலைமையாசிரியர் அண்மையில்விடுத்துள்ள சுற்றுநிருபமாகும். தவிர்க்க முடியாத காரணங்களுக்காக எடுக்கப்படும் அமயவிடுதலை (Casual Leave)க்கு மூன்றுநாள் முன்னறிவித்தல் கொடுக்கவேண்டும் என்று அப்பாடசாலை ஆசிரியர்களுக்கு சுற்று நிருபம் மூலம் தலைமையாசிரியர்வற்புறுத்தியுள்ளாராம்.

பொதுசேவையின் நிதிப் பிரமாணம் Financial Regentations) பகுதி இரண்டின் பதினரும் அத்தியாயத்தில் அமய விடுதலை (F.R. 1369 பற்றி விபரிக்கப்பட்டிருக்கிறது. இனியாவது அப்பாடசாலையின் (தற்காலிக) தலைமையாசிரியர் விடுமுறை சம்பந்தப்பட்ட தமது சுற்றறிக்கையை வாபஸ் பெறுவாரா?

## பரீட்சைக்கு தோற்ற சேவை நிபந்தனை இல்லை

மாணவ ஆசிரியர்கள் ஆசிரிய பயிற்சிக்கலாசாலையில் சேருவதற்கான பரீட்சையில் விசேட பிரிவினராகக் கணிக்கப்படுவார்கள் என்றும் சேவைக்கால வேறுபாடு இருக்கமாட்டாதுஎன்றும் பரீட்சை ஆணையாளர் தமிழரசுத் தந்தைக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

ஆசிரிய கலாசாலைப் பிரவேசப் பரீட்சை எடுப்பதற்கு குறைந்த பட்சம் ஒரு வருட காலம்மாணவ ஆசிரியர்களாகக் கடமையாற்றிய மாணவ ஆசிரியர்களே தோற்றலாம் என்ற நிபந்தனை பற்றி தமிழரசுத் தந்தை திரு, சா. ஜே. வே. செல்வநாயகம் பரீட்சை ஆணையாளருக்கு எழுதிய கடிதத்திற்கே இவ்வாறு பதில் அனுப்பப்பட்டுள்ளது.

இப் பிரவேச பரீட்சைக்கான விண்ணப்பபத்திரத்தில் மாணவ ஆசிரியர்கள் என்று குறிப்பிடத் தவறியவர்கள் பரீட்சை மண்டபத்தில் தங்களை மாணவ ஆசிரியர்கள் என்று உறுதிப்படுத்திக் கொள்ளலாம் என்றும் அக் கடிதத்தில் பரீட்சை அதிகாரி குறிப்பிட்டுள்ளாராம்.

## சிங்கள...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திடம் தெரிவித்தபோது அவர் ஆச்சரியப்பட்டார்.


'புத்தக வெளியீட்டுப் பகுதி கல்வி அமைச்சின்கீழ் கொண்டுவரப்பட்டாலன்றி சிங்கள நூல்களோ, தமிழ் நூல்களோ சிறப்பாகவும், விரைவாகவும் வெளியிட நல்ல வாய்ப்பு ஏற்படாது' என்று திரு. இரத்தினம் நமது நிருபரிடம் கூறினர். 'மொழித் திணைக்களத்தின் தலைவர் தமிழின் தனித் தன்மையைச் சிதைக்க 1956—57ல் எடுத்த நடவடிக்கைகள் அமரர் வன்னியசிங்கத்தின்விடாமுயற்சியால் அன்று நிறுத்தப்பட்டது. மீண்டும் இத்தகைய அருவருக்கத்தக்க வேலைகள் தலைதூக்கியிருப்பது தேசிய அரசாங்கத்துக்கு இக் கட்டான நிலையை உண்டாக்கும், இதுபற்றி அரசாங்க பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் நடவடிக்கை எடுப்பேன்" என்று திரு. இரத்தினம் மேலும் கூறினர்.


# மங்கையர் விரும்பும் மகோன்னத 'மினேர்வா'

சிறப்பும் வனப்பும் மிக்க சிறந்த

**தையல் மெஷின்**

இப்பொழுது வெகு சுலபமான மாதாந்த கட்டுப் பணத்திற்கு உங்களுக்குக் கிடைக்கும்



126

நுண்ணிய தயாரிப்பு, நாசுக்காக எவ்வித தையலையும் சுலபமாகவும், அழகாகவும் தைத்துக் கொள்ளலாம்.

புதிய வரி விதிதத்தின் பின் எதுவித விலை உயர்வும் சுமத்தப்படவில்லை.

**செனற். அந்தனீஸ் ஹார்ட்வெயர் ஸ்டோர்ஸ் லிமிட்டெட்,**

516, ஸ்கின்னர்ஸ் ரோடு தெற்கு.

கொழும்பு-10.

டெலிபோன்: 4261-2, 3.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஆணிவேர்

இலட்சியமே உருவான இளைஞன். பார்வையில், பேச்சில், சிரிப்பில் அங்க அசைவில் எல்லாமே அவன் 'தான்' என்று நிமிர்ந்து நிற்கிற தனித்துவம் தெறித்து விழுகிறாற் போலஇருக்கும்.நேரியமிக நேரிய, உரிய பார்வையில் பார்வை பதிகிறவன்நெஞ்சில் இலட்சியக் கனலைக் கொழுந்து விட்டெரியச் செய்யும் சக்தி. அவன் ஒரு தீ. அவன் புலன்களிலும், நாடி நரம்புகளிலும்தீயின் ஒளி, வேகம். தீயின் உயிர், உடல்.

பல நூறு ஆண்டுகளுக்கு முன்னால் காலப் பேரேட்டில்நினைவொன்றைத் தன் அடிச்சுவட்டை டப்பதிப்பிக்க அவன் வேகமாய் நடந்து கொண்டிருந்தான். அது நடையா? வேகம். வேகம். ஒரே வேகம். எதனையோ நிர்மாணித்துவிடத் துடிக்கும் பரிதவிப்பு. வேகம் தான்.

சுற்றி அவனோடு நின்ற மனிதர்கள் நூதனப் பார்வையோடுஅவனைப் பார்த்துச் சிரித்தனர். இவன் என்ன மனிதனா? சாத்தானா? தான் பழகிக் கொண்டவற்றிற்குள்ளும்—புறமும் இடிபட்டோ, நசியுண்டோ, போராடிக் கொண்டே இழந்து போவதில், செத்துப் போவதில் அந்த மனிதர்களுக்கு ஒரு ருசி—சுவை. அதற்கு முரணாய் ஒரு சொல், ஒருசைகை பறந்து விட்டால் அவன் சாத்தான், பேய். உலகத்தை நாசவழிப் படுத்த வந்த பிரதிநிதி. அசுரர்களால், சாத்தான்களால் அனுப்பப்பட்ட அவன் தான்—அந்த இளைஞன். அந்தத்தீ. அப்படித்தான் அந்த மனிதர்கள் எண்ணி அவனைத் துரத்தி விட்டனர்.

அந்த வேகத்தோடு, சமூகம் அவன் வார்த்தைகளின் படி 'வெறும் பிசாசுகள்'—ஒதுக்கிவிட்ட குமுறலோடு, வெறியோடு, தீயின் வேகத்தோடுஅவன் இன்னும் தான் நடந்து கொண்டிருந்தான். வெகு தூரம் அவன் நடந்திருந்தான். எதற்காகவோ அவன் கால்கள் அந்த இடத்தில் நின்றன. அவன் நின்ற இடத்திற்கு நேரெதிரே—தூரம் தள்ளி அற்புதமான காட்சிகள் விரிந்து கொண்டிருந்தன. ஓங்கி நிமிர்ந்து நின்றமலை, அதிலிருந்தும் 'இழுமென்ற' நீரின் சலசலப்பு, எதை அவன் எண்ணினானோ? கம்பீரமான அந்த மலையின் தோற்றத்தைத் 'தான்' என்று நிமிர்ந்து நிற்கிற அதன் பொலிவைப் பார்த்துக் கொண்டேயிருக்கக் கூடியதாய்... 'இது நல்ல இடம்' என்று அவன் வாய் முணுமுணுத்தது.

தானே தனியனாய் அந்த இடத்தில் அவன் ஒரு வீடு ஒன்றைக் கட்டினான். அற்புதம் தான். அவன் ஆசைகள்—பரிணமித்தபடி, பொங்கியபடி ததும்பி வீசியபடி அவன் சித்திரங்கள் தீட்டினான். எங்கெங்கிருந்தோ விதம் விதமான கடற்சிப்பிகள்—முத்துக்கள்—சங்குகள் பதித்தான். பேரெழில் பூத்து நிற்கும் மண்டபம்.

ஒரு நாள் மாலை நேரம் தன் மண்டபத்தின் தூணருகே சாய்ந்தபடி வெளி உலகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

எங்கிருந்தோ வேகமாய், மிகவேகமாய்க் காற்று வீச ஆரம்பித்தது. காற்றா அது? மண்ணை வாரி வாரி இறைத்தது. மரம் செடிகளை அள்ளி எற்றி எற்றியடியே வந்து மோதிற்று. வெகு நேரம், வெகு நேரம் அந்த இயற்கையுத்தம் நடந்து கொண்டிருந்தது. பிறகு மழை பிடித்தது. சோனா வாரியாகப் பெய்தது. அது மழையா? என்னமாய் வீசுகிறது. மழைச்சரமே இரும்புக் கம்பிகள் போல. மண்டபத்திற்குள்ளே தான் அவன் இருந்தான். வெகு நேரம் கழித்து எல்லாம் ஓய்ந்த பிறகு அவன் வெளியே வந்து பார்த்தான்.அவன்மண்டபத்திற்குத்துளிகூடச் சேதமில்லை. அவனுக்கும்தான். சிரித்தபடியே நின்றான். மமதை தலைக்கேறியது. சற்று முன்பு கேட்ட பிரளய காலச் சத்தங்களைத் தோற்றுவிடுகிறாற் போலப் பலமாகச் சிரித்தான். சத்தமிட்டான்.

தன்னை ஒதுக்கிவிட்ட மனிதர்களின் நினைப்பு எழுந்தது. வேகமாய் ஓடினான். அவர்கள் அங்கேயில்லை. மிகச் சிலர்தான் இருந்தனர். நெருங்கியவரைப் பறிகொடுத்த அழிவில் துடிக்கின்றனர்.

## 'முனியப்பதாசன்'

காற்றுச் சாடியதால் சின்னபின்னமாக்கப்பட்ட மரக்கம்புக் குடில்கள்—பறண்கள்—புற்கொட்டில்கள்—மனிதப் பிணங்கள்—மண்மூடுண்டும் மூடுண்ணாமலும்... அவனுக்குக் களிப்பு மிகுந்தது. இருக்கிற சிலருக்கு தன் இலட்சியங்களைக் காட்டவும் உணர்த்தவும் இதுதான் சமயம் என்று அவன் மனம் எண்ணியது.

அவர்களை இழுத்துக் கொண்டு தான் கட்டிய வீட்டை, அழகான மண்டபத்தை நோக்கி நடக்கிறான். அந்த மண்டபத்தை-கிஞ்சிற்றும் சேதமில்லாத அந்த மண்டபத்தைப் பார்க்கிற போது அவர்களுக்கு அந்த இளைஞன் ஒரு தேவனாய்ப்பட்டான். வெகு நேரமாய் அவன் அவர்களுக்குளது எதுவோ கூறுகிறான்.

பிறகு அவர்கள் ஒன்றாய்க் கூடினர். ஊர் ஊராய் நடந்தனர். வெறியோடும் வேகத்தோடும் நடந்தனர். காணுகிற மனிதர்களிடம் அவர்கள் கூறினர். 'மனிதசக்திக்கு அப்பாற்பட்டதெதுவுமில்லை. மனிதனே தன் சிருஷ்டி கர்த்தா. புறச்சக்தி இல்லை அகச்சக்தியில்லை. எதுவும் இல்லை. மனிதனே தனது சக்தி—இயற்கையில்லை. மழை—காற்று—வெய்யில் அவை வளமையற்றன.'

காலம் ஓடுகிறது. மிக வேகமாக ஓடுகிறது. அந்த ஓட்டத்தின் இடையில் மனிதன் மிகத்தூரம் முன்னேறிவிட்டான்.

இப்பொழுது பார்த்தால் வீடுகள்—வீடுகள்—வீடுகள். நல்ல வளமையதாய் அழகியதான வீடுகள்.

மீண்டும் அதே புயல். அதே மழை. கோர தாண்டவம். உயிர்ச்சேதம்

எதுவுமில்லை. மனிதன் ஆர்ப்பரிக்கிறான். வெற்றி வெற்றி என்று முழங்குகிறான். 'மனிதனே தன் சிருஷ்டி கர்த்தா.'

இளைஞன் தோற்றுவித்த இயக்கம் படருகிறது. வேகமாய்ப் படருகிறது. நாலாபுறமும் மனித சக்தியின் தனித்துவக் கூப்பாடு. இளைஞனும் அவன் சகாக்களும் இப்போது புதிது புதிதான ஆராய்சிகள் செய்கிறார்கள். நாட்கணக்காய் அவர்கள் பேசுகின்றனர். ஆராய்கின்றனர். காடு காடாய் அலைகின்றனர். பச்சிலைகளைப் பிடுங்குகின்றனர். அரைக்கின்றனர். சாறு பிழிகின்றனர். அவர்களது வாழ்க்கை களிப்பும் அலுப் நிரம்பியதாய் ஓடுகிறது.

அதோ ஒரு மனிதன் அலறித் துடித்துக் கொண்டிருக்கிறான். 'ஆ—சாத்தான், பேய்—பேய்—என்னமாய்க் கொல்லுகிறது? என்னமாய் வலி எடுக்கிறது? எதைப் பலியிட? ஆடா, கோழியா—மாடா? இரத்தமா? பசிப் பிண்டமே—இரத்த வெறி பிடித்த பைசாசமே?—நோகுது—நோகுது — ஊ-ஊ.''

இளைஞர் கூட்டம் பரபரப்பாய் ஓடி வருகிறது.

சாறுகள் பூசப்படுகின்றன. சாறுகள் கொடுக்கப்படுகின்றன.

சற்றுப் போதுக்கிடையில் தான் அந்த மனிதனின் முகத்தில் என்ன மலர்ச்சி, நோய் தீர்ந்து போய் விட்டது. பிசாசும் இல்லை. சாத்தானுமில்லை. ஒன்றும் இல்லை. மனிதனைத் தவிர ஒன்றுமில்லை. மனிதனுக்கு மேற்பட்டது

**இவ்வாரச் சிறுகதை**

ஒன்றுமில்லை, என்கிற உணர்வு பிறக்கிறது.

சில ஆண்டுகளுக்கிடையில் மருத்துவமனைகள் நிர்மாணிக்கப்படுகின்றன. மனிதன், என்கிற தனித்துவ உணர்ச்சி. அவனை விட மேலானதில்லை என்கிற தனித்துவ உணர்ச்சி-வேகம்—வேகம்— தீயின் வேகம்.

பாதுகாப்பான இடம். நோயற்றல் இவற்றின் மத்தியில் புலன்களின் ஆர்ப்பாட்டங்கள்—தேவைகள்—தேவைகள் இளைஞனும் அவன் சகாக்களும் பம்பரமாய் நடக்கின்றனர்.

சில ஆண்டுகளுக்கிடையில் பூமித்தாய் சொரிந்து சொரிந்து தள்ளுகிறாள். பார்க்கிற இடமெல்லாம் உணவின் செழிப்பு. உற்பத்தி—உற்பத்தி என்று மண் கதறுகிறது. மனிதன் அதன் அசுரப் பசிக்குக் கூட்டுறவாய்ச்'சமாளிப்பு' நடத்துகிறான். பசி என்கிற பதமே இல்லை.

புதியமதம். 'மனிதனின் தனித்துவம்' என்கிற மதம் வளர்ந்து செழித்து

விட்டது. அது செழிப்பா? என்னமாய் ஊன்றிப் பதிந்து போய் நிற்கிறது?

சில ஆண்டுகளுக்குப் பிறகு அந்த இளைஞன்—இப்போது நரை தட்டிப்போன கிழவன் தான் நிருமாணித்த 'மனிதனே முக்கியம்' என்கிற சமுதாயத்தை—உலகத்தைப் பார்ப்பதற்காய் நடக்கிறான். அவன் கண்களில்தான் என்ன சாந்தி? என்ன ஒளி? என்ன மலர்ச்சி? துள்ளி நடக்கிறான்?

அவன் கண்கள் வீதி வீதியாய்ச் சின்னத் தனங்களைக் கண்டபடியே துடிக்கின்றன? எவற்றைக் காணவந்தானோ அவை இல்லை. இல்லவேயில்லை. நம்பிக்கையற்றுக் கேவலத்திலும் கேவலமாய் வாழ்ந்த மனிதனை உயர்த்தினன்— அவர்களுக்கு 'மனிதனே முக்கியம்' என்கிற தனித்துவமான மதத்தையும் கொடுத்தான். மிக வேகமாய் அவர்கள் முன்னேறினர். அது முன்னேற்றமாபின்னேற்றமா?

நெற்றிக்கு நேரே மனிதனை மனிதன் வெட்டினான். பகிரங்கமாய் இரத்தம் சொட்ட நின்ற கத்தியைப் பார்த்தபடியே பலமாகச் சிரிக்கிறான்.

கிழவன் கேட்கிறான். 'இது என்ன கோரம்? என்ன தேவையை நோக்கி நீ அவனைக் கொல்கிறாய்—மனித'தேவை'கள் சகலத்தையும் நான் தீர்த்துவிடவில்லையா? இது என்ன சின்னத்தனம்'

'கிழவா நீ 'மனிதனின் தனித்துவம்' என்ற மதத்தை யல்லவா? கற்பித்தாய்? கிரந்த கர்த்தாவாகிய உனக்கு நீ எழுதிய முதல் வேதம் மறந்தா விட்டது? ஞாபகமூட்டவா?

'நீ ஒரே ஒரு தடவை தான் பிறக்கிறாய். உன் உணர்ச்சிகள் கோபமோ-காமமோ? நல்லதா? கேட்டதோ? எதுவோ? நீயிருக்கிற போதுதான் அவற்றின் வாழ் நாளும் இருக்கும். அதனை இழப்பது, எதன் பேரிலாவது—அதீதசக்தியின் பேரில், தெய்வத்தின்பேரில் அதன் வழிகளான சமயத்தின் பேரில்—மூடத்தனம். அவற்றை அடைவதே உனது இலட்சியம். போராடு. வெற்றி பெறுவாய்.'

கிழவன் திகைக்கிறான். மறு வீதியில்

பெண் நெற்றிரே நேரே—நெற்றிக்கு நேக-துடித்துக் கொண்டேயவர்களால் சித்திரவதைப் படுகிறாள். கிழவன் வெறி பிடித்து ஓடுகிறான்.

தன் மண்டபத்தின் தூணருகே சாய்ந்தபடியே சிந்திக்கிறான்.

'தனி மனிதன் வாழ்க்கைத் தேவைகள் முற்றற உயர்ந்து தான் நிற்கின்றன. உணவு-உடை உறையுள் ஏதாவது-இவற்றில் எதுவாவது குறையிருக்கிறதா? பிறகு எதற்காக ஒருவனை ஒருவன் வெட்டுகிறான். ஒருத்தியைக் கற்பழிக்கிறான்? தனி மனிதன் வாழ்க்கைத் தேவைகள் முற்றற உயர்த்தப்படுகிற போது—அவனுக்கு இயல்பாய் அடங்கிய வெறித்தனங்கள் தேய்ந்து போய் விடுமா? யதார்த்தத்தில் இன்னும் அவை கூடுமேயல்லவா? தனி மனிதனின் இத்தத்தேவைகளைப் பூர்த்தியாக்க எதனுல் முடியும்? முடிந்தாலும் பூர்த்தியாக்கலாமா? பிறகு நாடும் சமூகமும் உலகமும் என்ன மாதிரி இருக்க முடியும்?'

ஏதோ ஒரு அடிப்படை இல்லாத தனது சமூக அமைப்பை இப்போது உணர்ந்தான். பளிச் சென்று அவனுக்கு அது தெரியவாரம்பித்தது.

'தனிமனிதனின் அந்தத் தேவைகளைப் பூர்த்தியாக்கவே முடியாது. கட்டுப்பாடுகளும் கொடிய சட்டங்களும் அவற்றிற்கு மறை முகமாகவே வளமையைக் கொடுக்கும். 'பகிரங்கமாக' நடக்காமல் இருப்பதற்கு உதவி செய்யும்.காலம் காலமாய் மெய்ஞானிகள் ஆரம்பித்த 'மதமே' அவற்றிற்குத் தடைகள். 'ஆத்மிக' அத்திவாரத்தில் எழும்பும் மனித—சமூக—உலக முன்னேற்றமே உண்மையான முன்னேற்றம். அது அற்றது சின்னபின்னமாய்ச் சிதறுண்டுமாயும்.'

கிழவன் முணுமுணுத்தான்.

உலகமுன்னேற்றத்தின்-சமூக பொருளாதார அரசியலமைப்பின் ஆணிவேர் 'ஆத்மிகம்தான்.'

அந்த முணுமுணுப்பு வெளியே ஓங்காரமாய் முழங்கி ஒலிக்கிறானது போலவும் இருந்தது!

## கிராமிய இலக்கியம்

ஊரெல்லாம் உறங்கி விட்டது. தூரத்திலே எங்கோ ஒரு நாய் மாத்திரம் ஊளையிட்டுக் கொண்டிருந்தது. தென்றல் மெதுவாக குளிரைச் சேர்த்து வீசிக்கொண்டிருந்தது. உலகத்தையே மறந்து அவனும் அவளும் இரு குழந்தைகளைப் போல அமர்ந்திருந்தனர். அவர்கள் இருந்த இடத்திலே பகலில் கூட

### செ. குணரத்தினம்

மனித நடமாட்டம் கிடையாது. அவ்வளவு மறைவான இடம்.

அவன் அவளைப் பார்த்து 'மச்சி, இந்த இரவு விடியாமலேயே ஊழிக்காலம் வரைக்கும் இப்படியே இருக்காதா! எவ்வளவு இனிமையான இரவு இது. இந்த நேரத்தில் உன்னைப் பார்த்துக்கொண்டு இப்படியே இருந்தால் எனக்குப் பசியே வராது போலிருக்கிறதே!' என்று ஒருவித மயக்கத்தோடு பேசிக் கொண்டே போக, அவள் மெதுவாகச் சிரித்துக் கொண்டே பாடுகிறாள்.

'குழந்தைத் தனம்
இன்னும்—என்ர
குமரருக்குப் போகவில்லை

(14-ம் பக்கம் பார்க்க)

**உலகாயுதத்திற்கு, ஆன்மீகத் திற்குமிடையே நெடுகிலும் போராட்டம். இந்த நீண்ட போராட்டத்தில் உலகாயுதமா, ஆன்மீகமா வெல்லும்? ஆன்மீகம் சமூகத்தின் ஆணிவேர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூங்கரத்தின் ஸ்பரிசத்தால் சமாதி நிலையிலிருந்து விழிப்புற்ற கணேசன் தன்னைத் தொட்டு அசைத்த அந்தக் கரத்தையும், அந்தக் கரத்துக்குரிய உருவத்தையும் நோக்கினான். போதை, தாபம், அவசரம் ஆகிய மூன்றினையும், தன் நீலோத்பல விழிகளில் தேக்கி வைத்துக்கொண்டு வைத்தகண் வாங்காமல் கணேசனையே பார்த்துக்கொண்டு நின்றாள் இலட்சுமி!

சுற்றுப்புறச் சூழலால் நிதானமுற்ற கணேசன் வெகு சாமர்த்தியமாக நிலைமையைச் சமாளித்தான்.

'டீச்சர்! இதற்குள் முருக தரிசனத்தை முடித்துக் கொண்டுவந்துவிட்டீர்களா? தாமரைகுமாரி எங்கே?'

'நான் அவசரக்காரி! கெதியில் முருகதரிசனத்தை முடித்துக்கொண்டேன். அவளுக்கு எத்தனை கவலைகளோ? இன்னமும் முருகப் பெருமான் முன்னிலையில் அமர்ந்துகொண்டு கசியக் கசியப் பிரார்த்தனை புரிந்துகொண்டிருக்கின்றாள்! தவிரவும் முருகப் பெருமானிடமோ? புத்த பெருமானிடமோ? நான் தனிமையாகக் கேட்டுப் பெறுவதற்கு ஒன்றுமே இல்லை!'

'அப்படி அவர்களிடம் கேட்டுப் பெறுவதற்கு ஒன்றுமே இல்லையென்றால் நீங்கள் இங்கு வந்திருக்கவேண்டிய அவசியமே இல்லையல்லவா?'

'ஏன் இல்லை? எனக்குத் தேவையானவற்றைக் கேட்டுப் பெறவல்ல ஒருவர் இங்கு வந்திருக்கும்போது நான் வீட்டில் எப்படிச் சும்மா உட்கார்ந்துகொண்டிருக்க முடியும்?'

இலட்சுமி எதை மனதில் வைத்துக்கொண்டு அப்படிக் கூறுகின்றாள் என்பது கணேசனுக்கு நன்கு புரிந்துவிட்டது. அன்றுதான், தலைமையாசிரியருடன் மனஸ்தாபப்பட்டுக்கொண்டு, புதிய வீடு தேடிப் புறப்பட்ட சமயம், தன் பின்னால் இலட்சுமி வந்ததும், வழியில் சிறிதுநேரம் இருவரும் பேசிக்கொண்ட பேச்சுக்களும் இப்பொழுது கணேசனுக்கு நினைவுக்கு வந்தன. 'இனிமேல் எதையும் உங்களிடமிருந்து பெற வேண்டுமானால் நேரிலேயே கேட்டுப் பெற்றுக்கொள்ளுகின்றேன். அதற்கான தைரியம் எனக்கு வந்திருக்கின்றது!' என்று பொருளுடன் அவன் கூறிய வார்த்தைக் கோர்வையும், பதிலுக்கு அவனும் விடாது, 'எனக்குக் கூட இப்பொழுது நல்ல தைரியம் வந்திருக்கின்றது. நானும் உங்களிடமிருந்து எதையாவது பெறவேண்டியிருந்தால், நேரிலேயே கேட்டுப் பெற்றுக்கொள்ளுகின்றேன்!...' என்று அர்த்தபுஷ்டியுடன் கூறிக்கொண்டதும் இப்பொழுது கணேசனுக்கு ஞாபகத்துக்கு வந்தன! எனினும் அதை வெளிக்குக் காட்டிக்கொள்ளாமல், 'உங்களுக்குத் தேவையானவற்றைத் தரவல்ல அந்த 'ஒருவரை' நானும் தெரிந்துகொள்ளலாமா டீச்சர்?' என்று கேட்டுவைத்தான் கணேசன்.

'தாராளமாக அந்த 'ஒருவர்' யாரென்பதைத் தாங்கள் தெரிந்துகொள்ளலாம். அதற்கு முன்னர் நான் ஒன்றைத் தெரிந்துகொள்ள வேண்டும்!'

'எதை?'

'எங்கள் பின்னாலேயே தங்குதடையின்றி வந்துகொண்டிருந்த தாங்கள், திடீரென்று இந்த முருகன் சன்னதிக்கு வந்ததும் உள்ளே வராமல் வெளியிலேயே நின்றுகொண்டு எதுவோ பறிகொடுத்தவர்போல் இலையாக நின்றுவிட்ட காரணத்தை நான் தெரிந்து கொள்ளலாமோ?'




**"தொட்டேன் நெளிந்தாள்; துவண்டாள் துடியிடையைக் கிட்ட நெருங்கிக் கிளையானேன்—கட்டழகி பூங்கொடியாய் மார்பில் புரண்டாள், படர்ந்தாள்! பின் தேங்கியதும் இன்பத் திளை!"**

—"எருவில் மூர்த்தி"

## 22. கணேசனைச் சுட்ட மூச்சுக் காற்று!

இலட்சுமியின் இந்தக் கேள்வியால் திக்குமுக்காடிவிட்டான் கணேசன். 'பிறர் அவதானிக்குமளவுக்குத் தன்னுடைய உணர்ச்சியையும், பலவீனத்தையும் காட்டிக்கொண்டோமே!' என்பதை எண்ணியபோது அவனுக்கு ஒரே வெட்கமாகப் போய்விட்டது. தானும் ஒரு குறை மனிதன்தான் என்ற இரகசியத்தை இரண்டாவது பேர்வழியொருவர் தெரிந்துகொள்ளுமளவுக்குத் தான் அந்த இடத்தில் நடந்துகொண்ட தோரணையை மனதுக்குள் வேகமாகக் கண்டித்தான் கணேசன். என்ன கண்டித்தும் என்ன? குட்டு வெளிப்பட்டு விட்டது. இனி எப்படியும் சமாளிக்கவேண்டியது தான் என்று கருதிக்கொண்டு ஏதோ சொல்லலுற்றான்: 'அதெல்லாம் ஒன்றுமில்லை டீச்சர்! என் மனதில் இருந்த ஒன்றை முருகப் பெருமானிடம் சொல்லவோமா? அல்லது அது சம்பந்தப்பட்ட நபரிடமே அதைக் கேட்டுவிடுவோமா? என்ற குழப்பத்தில் சற்றுநேரம் அப்படியே என்னை மறந்து நின்றுவிட்டேன்!' பிரச்சினையைத் தற்காலிகமாகச் சமாளித்துவிட்ட ஒரு திருப்தியில் இலட்சுமியின் அழகிய முகத்தை நோக்கினான் கணேசன்.

தன் அழகிய கண்கள் இரண்டையும் வெட்டிவெட்டித் திறந்துகொண்டு இலட்சுமி கேட்டாள்: 'உங்கள் குழப்பம் இப்பொழுது தெளிந்துவிட்டதா மாஸ்டர்?'

'ஆசைக்கு மட்டும்தான் வெட்கத்தை மாய்க்கவல்ல சக்தி உண்டு என்பதல்ல; அழகுக்கும்கூட அந்தச் சக்தி நன்கு கைவந்திருக்கின்றது என்பதை இப்பொழுது நன்கு உணருகின்றேன் டீச்சர்.'

'நான் கேட்டது உங்கள் குழப்பம் இப்பொழுது தெளிந்துவிட்டதா? என்று!'

'தெளிவுடன்தான் பேசுகின்றேன் டீச்சர்!'

'அப்படியானால் உங்கள் மனதில் இருப்பதை இப்பொழுது யாரிடம் கேட்டுவிடுவதாக இருக்கின்றீர்கள்? முருகப் பெருமானிடமா? அன்றி அது சம்பந்தப்பட்ட அந்த நபரிடமா?'

'முருகப் பெருமானுக்குப் பல பிரச்சினைகள்! என் கூக்குரலை அந்தப் பிரச்சினைகள் அமுக்கிவிடுமோ என்னவோ? என [illegible]றேன். அதனால் [illegible]பட்ட நபரிடமே அதை நேரடியாகக் கேட்டுவிடலாம் என்றிருக்கின்றேன்.'

கணேசனுடைய இந்த வாசகத் தொடர் இலட்சுமியின் உடலில் மின்சாரத்தை ஏற்றியிருக்கவேண்டும்; இல்லாதுபோனால் அவளுடைய உடலில் இத்தனை பதைபதைப்பும் அவளுடைய கண்களில் இத்தனை படபடப்பும் ஏற்படக் காரணம் இல்லை. கணேசன் சொல்லப்போகும் பதிலை மிகவும் ஆவேசத்தோடு அவள் எதிர்பார்த்தாள்.

'இலட்சுமி!'

விழிகளாலேயே 'ஊம்' கொட்டினாள் இலட்சுமி. 'டீச்சர்' என்ற முறை மாறி 'இலட்சுமி' என்று அவன் அழைத்ததில் மிகுந்த இன்பங்கொண்டாள் அவள்.

'பாடசாலையில் நம் தலைமையாசிரியர் முன்னறிவிப்பின்றி எவ்வளவோ 'சூடு' இறங்கிவந்த பின்னரும், நீங்கள் ஏன் திரும்பவும் திரும்பவும் அந்தத் தவறைச் செய்யவேண்டும்?'

'தவறு செய்கின்றேனா?'

'நிச்சயமாகத் தவறுதான் செய்கின்றீர்கள்! வகுப்பில் நீங்கள் பாடங்களைச் சொல்லிக்கொடுக்கும்போது, எனக்கு என்னவோ அது போலிக் கற்பித்தல் போன்றே படுகின்றது!....' சுற்றிவளைத்து நீட்டி முழக்கினான் கணேசன்.

'அதாவது 'வகுப்பில் இருந்து கற்பித்தல் தொழிலைச் செய்யும்போது வேறு கவனம் இருக்கக்கூடாது; பாடத்தோடு அப்படியே ஒன்றிப் போகவேண்டும்' என்கிறீர்கள்'—இலட்சுமியும் பிடரியைச் சுற்றியே மூக்கைப் பிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டாள்.

'அதேதான்! வகுப்பில் நாம் இருக்கும்போது யானையே எதிரில் வந்து நின்றாலும் அது நம் கண்களுக்குத் தெரியக்கூடாது!'

'யானை என்னவோ தெரியக்கூடாதுதான். ஆனால் பெண்ணொருத்தி வந்து நின்றால் அது உடனே தெரிந்துவிடவேண்டும் இல்லையா?'

'[illegible] என்ன சொல்கிறீர்கள்?'

'என்னைப்போல் வகுப்பில் மாணாக்கரோடு 'ஒன்றிப் போகும்' தங்களுக்கு, என் கற்பித்தல், 'போலிக் கற்பித்தல்' என்ற உண்மை எப்படிப் புலப்பட்டது என்பது தான் புரியவில்லை!'

இலட்சுமியின் இந்தச் சாமர்த்தியமான பதிலுக்காகவேனும் அவளை அப்படியே தூக்கி உருட்டி எடுக்கவேண்டும் என்று எண்ணினான் கணேசன். எந்தவிதக் கூச்சமுமின்றி ஒருவரை ஒருவர் மிகவும் 'பச்சை'யாகவே பார்த்துக்கொண்டனர்!

அந்தப் போதையூட்டும் சூழலுக்கு ஒரு திருப்பத்தை ஏற்படுத்துமுகமாக இலட்சுமி கேட்டாள்: 'மாஸ்டர்! நீங்கள் யாரிடமோ? எதையோ? கேட்கப்போவதாகக் கவலைப்பட்டுக் கொண்டிருந்தீர்களே!! இப்போ தீர்மானத்தை மாற்றிக் கொண்டு விட்டீர்களோ?'

'சே! யார் அப்படிச்சொன்னது? இதோ இப்பொழுது கூடக் கேட்டுக்கொண்டு தானே இருக்கின்றேன்!'—இலட்சுமியின் அழகிய கண்களில் தன் பார்வையைக் கூர்மையாகப் பாய்ச்சிக் கொண்டே சொன்னான் கணேசன்.

'அப்படியானால் உங்கள் கேள்விக்குச் சரியான பதில் கிடைத்துவிட்டதா?'

'ஓ! கிடைத்துவிட்டதே!'—இலட்சுமியை இறுகத் தழுவாத குறையாகச் சொன்னான் கணேசன்.

'என்ன பதிலோ?'

ஓர் ஆண், தான் விரும்பும் ஒரு பெண்ணிடம் 'எதைக் கேட்கப் போகின்றான்?' என்பதை மிகத் தெளிவாக அந்தப்பெண் தெரிந்துகொண்டபின், அவன் வாயிலிருந்தே அவன் கேட்கப் போவதைத் தெரிந்துகொள்வதற்குப் பிரியப்பட்டு அவனுடைய வாயைக்கிண்டும்போது, அந்த ஆணுடைய வாய், 'வரம்பு', 'பண்பாடு' என்பதையெல்லாம் பார்த்துக் கொண்டிருக்காது. கருத்தைச் சூசகமாகவும், நாசூக்காகவும் சொல்லவேண்டுமென்ற இங்கிதங்களெல்லாம் அந்த வேளையில் முற்றாக அடிபட்டுத்தான் சொல்லவேண்டியதைப் 'பச்சை'யாகவே சொல்லிவிடுவான்! 'என்ன பதிலோ?' என்று கணேசனைப்பார்த்து இலட்சுமி மிகுந்த அர்த்த புஷ்டியோடு கேட்டதும் கணேசனுடைய உணர்ச்சி பூராவும் ஆபாசத்தில் நனைந்தது!

'அந்த 'ஒருவரி'டமிருந்து எனக்குக் கிடைத்திருக்கும் பதில் 'என்ன?' என்று கேட்டீர்கள் டீச்சர்?'

'ஆமாம்'

'சொல்லிவிடட்டுமா?'

'நீங்கள் அத்தனை வெக்கடையா?'

'நான் வெக்கடையா? அல்லவா? என்பது நிச்சயம் உங்களுக்குத் தெரியத்தான் வேண்டுமானால், நீங்கள் தனிமையில் என்னுடன் சிறிது நேரம் இருந்து பார்க்க வேண்டும்!'

'என்ன செய்வீர்களோ?'

'காற்று இருக்கின்றதல்லவா காற்று! உங்கள் உடலுக்கும், என்னுடைய உடலுக்கும் இடையில் புகுந்துகொண்டு செல்வதற்கு அது மிகவும் திக்குமுக்காடியிருக்கும்!'

இந்தப் பதிலையடுத்து இலட்சுமிவிட்ட மூச்சுக் காற்றி அனலாய்ச் சுட்டது!

பின்னர் தொடர்ந்து பல காலங்களுக்கு இந்த மூச்சுக் காற்று கணேசனைச் சுட்டுக்கொண்டேயிருந்தது...!





## ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

**நி. 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தைப் பார்த்து வாங்குங்கள்.**

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலசலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75 சிறியது ரூபா 3-00

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்குக் குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-75 சிறியது ரூபா 3-00

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:

**ஆனந்தா வைத்தியசாலை,**

நி. 174, செட்டியார் தெரு, கொழும்பு-11.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியட்நாம் தகராறில் புதிய திருப்பம்

லண்டனில் சாம்ராஜ்யப் பிரதமர்கள் மாநாடு இவ்வாரம் ஆரம்பமாகியுள்ளது. இம்மாநாடு முடிவடைந்ததும் மாதக் கடைசியில் அல்ஜியர்ஸில் ஆசிய-ஆபிரிக்க மாநாடு நடைபெற விருக்கிறது.

### இருவித கருத்துக்கள்

சாம்ராஜ்யப் பிரதமர்கள் வியட்நாம் பிரச்சினை பற்றியும்விவாதித்ததாகச் செய்திகள் கூறுகின்றன. வியட்நாம் பற்றி இந்தியப் பிரதமரின் கொள்கை தெரிந்ததே.

இதுபற்றி பிரிட்டிஷ் தொழிற்கட்சி அரசாங்கத்தில் இருவித கருத்துக்கள் நிலவுகின்றன. ஒருசாரார் அமெரிக்கத் தலையீட்டை ஆதரிக்கின்றனர். மற்றொரு சாரார் எதிர்க்கின்றனர்.

வியட்நாம் பிரச்சினையில் சமரசம் காண்பதற்காக அங்கு நடைபெறும் யுத்தத்தை நிறுத்தி வைக்க வேண்டுமென்பது பெரும்பாலோரின் கருத்தாகும். இதனுல் அமெரிக்காவின் வியட்நாம் கொள்கையில் மாற்றம் ஏற்படலாமென சிலர் நம்பிக்கை தெரிவிக்கின்றனர்.

தென்வியட்நாம் யுத்தத்தில் பிறநாடுகளின் உதவியையும் அமெரிக்கா கோரியுள்ளது. அதற்கிணங்க தென்கொரியாவும் ஆஸ்திரேலியாவும் தென்வியட்நாமுக்குத் துருப்புகளை அனுப்பி வைத்துள்ளன.

அமெரிக்காபிறரிடம்இராணுவ உதவிகோரக்காரணம் தென் வியட்நாமில் தனியாக நின்று சமாளிக்க முடியாமலிருப்பதே என்று பார்வையாளர் கருத்து தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையே வியட்நாம் யுத்தத்தில் நேரிடையாகத் தலையிட போவதாக செஞ்சினு பயமுறுத்தியுள்ளது. சீனு பகிரங்கமாகத் தலையிட்டால் மூன்றுவது உலகயுத்தம் வியட்நாமிலிருந்துதான் ஆரம்பமாகும்என்று துணிந்து கூறலாம்.

### ரசிய-சின மோதல்

வியட்நாம் விவகாரத்திலும் இதர விஷயங்களிலும் ரஷிய-சீன மோதுதல் இவ்வாரம் சூடுபிடித்துள்ளது.

சீனப்பத்திரிகையான 'மக்கள் தினசரி' ரஷியத்தலைவர்களைக் கண்டிபின்னு என்று தாக்கத் தொடங்கியுள்ளது. இருநாடுகளிடையே மீண்டும் கெடுபிடியுத்தம் ஆரம்பமாகியிருக்கிறது. இதற்குப் பல காரணங்களுண்டு. அவற்றிலொன்றுயூகோ. ஜனுதிபதி மார்ஷல் டிட்டோவுடன் சோவியத் தலைவர்கள் மிக நெருக்கமாகக் கூடிக்குலாவுவதுதான். மார்ஷல்டிட்டோ சீனத்தலைவர்களின் அரசியல் விரோதியாவார்.

### டிட்டோ விஜயம்

அவர் கிழக்குஜெர்மனிக்கு விஜயம் செய்துவிட்டு, ரஷியாவுக்கும்விஜயம் செய்தார் அங்கு அவருக்கு மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டதாம்.

சினுவிடமிருந்து விலகிச் செல்லும் சோவியத் நாடு

## உலகவலம்

டிட்டோவுடன் கைகோத்துக் கொள்வது இயற்கையே

### இலங்கையின் ஆதரவு

ஆசிய-ஆபிரிக்க மாநாட்டில் ரஷிய சீன நேரிடை மோதுதல்எதிர்பார்க்கப்படுகிறது. இலங்கை, இந்தியா போன்றநாடுகள்ரஷியாவை ஆதரித்து நிற்குமென எதிர்பார்க்கலாம்.

இம்மாநாட்டில் மலேசியாவை பங்குபற்ற அனுமதிக்க வேண்டுமெனஇந்தியா கூறியுள்ளது. இதைக்கேட்டதும்இந்தோனேஷியா ஜனுதிபதி கொதித்தெழுந்து இந்தியாமீது பாய்ந்துள்ளார். இந்தியா காலனி ஆட்சிமுறையை ஆதரிக்கிறதென அவர் குற்றஞ்சாட்டி இருக்கிருர்.

## சீன-ரஷிய மோதல் சூடுபிடிக்கிறது

## பிரதமர் சாஸ்திரி வஞ்சம் தீர்த்தாரா?

### நாஸர்-அயூப்-சாஸ்திரி

சென்ற வாரத்தில் ஐக்கிய அரபுக் குடியரசு ஜனுதிபதி நாஸர் இந்தியப் பிரதமர் சாஸ்திரியுடனும், பாகிஸ்தான் ஜனுதிபதி அயூப்கானுடனும் தனித் தனியாகப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இதனுல்இருவரிடையேயும் சமரசம் ஏற்படுத்த நாஸர் முயற்சி செய்கிருர் என்ற வதந்தி பரவியது. ஆயினும் "கட்ச் யுத்தத்தை" நிறுத்தினுலன்றி பாகிஸ்தானுடன் சமரசமில்லையென்றும், கட்ச் பிரதேசம் இந்தியாவைச் சேர்ந்ததென்றும் சாஸ்திரி கனடாவில் இவ்வாரம் பேசியுள்ளார்.

இந்தப்பேச்சு நாஸரின் முயற்சிக்கு வெடிவைத்துவிட்டலாமெனகருத்துநிலவுகிறது.

### தனக்கென தனி ஒருபாதை

பிரான்ஸில் ஜனுதிபதி டிகால் மீண்டும் ஜனுதிபதி தேர்தலுக்கு நிற்கிருர். அவரை பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுகள்ஆதரிக்கின்றனர். வியட்நாம்தகராறில் அவர் அமெரிக்காவைப்பல மாகக்கண்டித்துள்ளார். டிகாலின் கொள்கை காரணமாக பிரான்ஸ் அமெரிக்காவைப்பின்பற்றிச் செல்லாமல் தனக்கெனத் தனியொருபாதை வகுத்துக் கொண்டுள்ளது.

### வஞ்சம் தீர்த்தாரோ?

இவ்வாரத்தில் மற்ருெரு முக்கிய செய்தி அமெரிக்காவுக்கு விஜயம் செய்யுமாறு அமெரிக்க ஜனுதிபதி ஜோன்சன் விடுத்த வேண்டுகோளை பாரதப்பிரதமர் சாஸ்திரி நிராகரித்ததுதான்.

இதற்கு முன்பு ஜனுதிபதி ஜோன்சன் பாரதப் பிரதமருக்கு விடுத்த ஒரு அழைப்பை அவரே வாபஸ் வாங்கிக்கொண்டார். அழைப்பை வாபஸ் வாங்கியது மரியாதைக் குறைவான செயலென்று அப்பொழுது ஜனுதிபதி ஜோன்சன்மீது கண்டனம் தெரிவிக்கப்பட்டது. இப்பொழுது அதற்கு சாஸ்திரி வஞ்சம்தீர்த்துக் கொண்டாரோ என்று சில வட்டாரங்களில் கேட்கப்படுகிறது.

# துறவறமே பேரின்பத்துக்கு வழி

## படிப்பகத் திறப்புவிழாவில் சுவாமி சிதானந்தஜி பேச்சு

'அழுக்கு நிறைந்த சேற்றுள்ளே அமிழ்ந்துகிடக்கும் கிழங்குகளிலேயிருந்து வெளியாகி, இடையிலே இருக்கும் நீரையும் தாண்டி, நீர் மட்டத்துக்கு வந்ததும் ஆதவனின் ஒளிபட்டு மலருகிறது தாமரை மலர். இதேபோன்றுதான் அழுக்கிலே உதயமாகி சம்சாரத்தில் மூழ்கித் தவிக்கும் மனிதன் அச்சாகரத்தையும் தாண்டினுல் உண்மையான பேரின்ப ஒளியைக் காணலாம்." சுவாமி சிதானந்தாஜி அவர்கள் சிவானந்தா படிப்பகத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினுர்.

அவர் தொடர்ந்து பேசியதாவது:-

அழுக்கிலே மலர்ந்த தாமரை தெய்வத்துக்கு அர்ப்பணிக்கப்படும் உயர்ந்த மலராகக் கருதப்படுகிறது. சூரிய ஒளி பட்டு அது மலருகிறது. ஒளி இல்லாவிட்டால் தன்னைத்தானே கூப்பிக்கொள்ளுகிறது. மனிதனும் எவ்வளவுக் கெவ்வளவு கீழான நிலையில் இருப்பினும், தெய்வீக ஒளியைப் பெற முயற்சிப்பானேயானுல் நிச்சயமாக பரம்பொருளை அடைவான்.

கல்வியில் இருவகையான கல்விகள் உள. இந்த உலக ஆசாபாசங்களில் உழல வைப்பதற்காகவே கணிதம், பெளதிகம், விஞ்ஞானம், சரித்திரம், பூமிசாஸ்திரம் முதலிய சகலமும் பயன்படுகின்றன. அவை நிரந்தரமானவையல்ல. உலக இச்சைகளுடன் வாழ்பவன்தான் தனது பட்டத்தையும் படிப்பையும் இட்டுப் பெருமைப்படலாம். இத்தகைய பட்டமும் படிப்பும் எவ்வளவு காலம் நீடிக்கப்போகிறது!


உன்னையே உனக்கு உணர்த்தி, உயர்ந்த தெய்வத்தின் தன்மையைப் புகட்டக்கூடியதுதான் உண்மையான மெய்க்கல்வி. இந்தக்கல்வி கற்றுப் பயனடையாதவன் வேறு எதையும் சாதிக்கத்தகுதியற்றவன்.

உலகத்தின் எட்டுக் கோணங்களிலும் அவ்வப்போது நடக்கும் சகல செய்திகளையும் ஒருவன் உடனுக்குடன் அறிந்து சொல்லும் ஆற்றலைப் பெற்றிருக்கலாம், ஆனுல் தன் சொல்லைப்பற்றி தன் ஆத்மாவைப் பற்றி அறியாதுவிட்டால் அத்தனையும் தெரிந்திருந்து என்ன பயன்? விளக்கின் அடியிலே உள்ள இருளை அவ் விளக்காலேயே போக்கமுடியாததையே இக் கூற்று ஒத்திருக்கிறது.

ஒவ்வொருவரும் இந்தப் பொய்யான உலக வாழ்வுடன் தொடர்பு கொள்ளும் கல்வியுடன் மட்டும் திருப்தி அடைந்துவிடாமல், தெய்வீக சக்தியையும் தம்மைத் தாமே உணர்ந்துகொள்ளக் கூடிய தன்மையினையும் ஊட்டவல்ல கல்வியைப் பெறவேண்டும்.

தெய்வீகநெறியில் தம்மை இட்டுச் செல்லும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தச் சிவானந்தா படிப்பகம் கொழும்பு வாழ் மக்கள் அனைவருக்கும் ஒரு ஒளிவிளக்காகவிருந்து பிரகாசிக்கும். பாடசாலை மாணவர்களிடத்திலும், கல்லூரி மாணவர்களிடத்திலும் இத்தகைய தெய்வீக கருத்துக்களை விதைக்கும் நூல்களைப் பரப்பி அங்கங்கே படிப்பகங்களையும் ஏற்படுத்துங்கள்.

கொழும்பு கொச்சிக்கடையிலுள்ள தம்பையா சத்திரத்தில் அமைந்துள்ள திவ்விய ஜீவன சங்கத்தின் சிவானந்தா படிப்பகத்தை 14ம் திகதி திங்கட்கிழமை காலை சுவாமி சிவானந்தாஜி திறந்துவைத்து ஆற்றிய சொற்பொழிவின் சாரம் இதுவாகும்.



சுவாமி சிதானந்தாஜி.

### அந்தோனியார் கோவிலில் சுவாமிஜி

திங்கட்கிழமை காலை சுவாமி சிவானந்தாஜி அவர்கள் கொச்சிக்கடை அந்தோனியார் கோவிலுக்கும் சென்று வணக்கம் செலுத்தினுர். 13ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அந்தோனியார் திருநாள் கொண்டாடப்பட்டது. இதனுல் கோவிலில் திங்கட்கிழமையும் மக்கள் கூட்டம் திரண்டிருந்தது.

காவி உடை தரித்த சுவாமிஜீ அவர்களும் யோகிராஜ் சச்சிதானந்தாஜி அவர்களும் ஏனைய பக்தர்களும் அந்தோனியார் கோவிலுள் சென்று வணங்குவதைக் கண்ட மக்கள் பேராச்சரியமுற்றுத் திகைத்து நின்றுர்கள்.

சுவாமிஜியும் குழுவினரும் அடுத்து களனி மாவிகாரைக்குச் சென்றுர்கள். மாலையில் சுவாமிஜி அவர்களுக்கு கொழும்பு நகர மக்களின் சார்பில் மாநகரசபைத் தலைவர் தலைமையில் ஒரு பொது வரவேற்பு நடைபெற்றது.

### தமிழரசுக் கட்சிக் கிளைகள்

கிழக்கு மாகாணத்திலுள்ள பல முஸ்லிம் கிராமங்களில்தமிழரசுக் கட்சிக் கிளைகள் ஆரம்பிக்கப் பட்டுவருகின்றன. பொத்துவில் தொகுதிதமிழரசு வேட்பாளராகக் கடந்த தேர்தலில் போட்டியிட்ட ஜனுப் எம். எஸ். காதர் கிளைகளை அமைக்கும் பணியில் பெரிதும் ஈடுபட்டுழைத்துவருகிருர்.

நிந்தவூரில் ஆரம்பிக்கப் பட்டுள்ள தமிழரசுக் கிளையின் உத்தியோகத்தர்கள் வருமாறு:-

தலைவர் ஜனுப் எச். எச். உஸ்மான், துணைத் தலைவர் திரு. கா. சினித்தம்பி, இணைச் செயலாளர்கள் திரு. பெ. தவராசன், ஜனுப் எம். எம். இபாயத்துல்லா, பொருளாளர் ஜனுப் எம். ஐ. எம். மன்சூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது விமர்சனம்

# புறப்பாடு
## (EXODUS)

ஆதியிலே முதிர்ச்சியும் உடலிலும் உள்ளத்திலும் ஆற்றலும் பெற்ற யூத இனம் ஐரோப்பாக்கண்டத்தின் நாலாதிசையிலும் பரவிச்சென்று வாழ்ந்தது. கிறிஸ்து சகாப்தத்துக்கு முன்பிருந்தே இந்த இனம் ஒரு நாடோடிச் சமுதாயமாகவே வாழவேண்டியிருந்தது.

அறிவுப் பெருக்கமும் ஆட்பெருக்கமும் கூடக்கூட அவர்கள் சென்று குடியேறிய இடங்களிலெல்லாம் நெருக்கடி ஏற்படத் தொடங்கியது. ஆற்றலிருந்தும் அண்ட இடமின்றித் தவித்த யூத இனத்தை கொன்று குவித்துவிடத் தீர்மானித்தான் ஹிட்லர். இலட்சோப இலட்சம் யூதர்கள் ஹிட்லரின் குரூர இனக்கொலைக்குப் பலியாகினர். யுத்தம் முடிந்ததும் குற்றுயிராயிருந்த யூத சமுதாயத்தைப் பேணிக் காக்கும் பொறுப்பை கையேற்ற பிரிட்டிஷார் அவர்களை சைப்பிரஸ்தீவில் காவல் மூகாம்களில் அடைத்து வைத்து விடுகின்றனர்.



தங்கள் தந்தையர் நாடு என்று ஒவ்வொரு யூதனும் கனவுகாணும் பாலஸ்தீனத்து மண்ணை முத்தமிடத்துடிக்கிருன். ஆனல் பிரிட்டிஷாரின் காவல் தடுக்கிறது.

யூதஇனப் புனருத்தாரணத்துக்குப்போராடும்இயக்கத்தின் துணையுடன் ஆரி பென்கன் என்பவன் சைப்பிரஸ் தீவிலிருந்து யூதரை வெளியேற்ற அதியயங்கர முயற்சிகளைக்கையாளுகிறன் இன விடுதலைக்காக அவர்கள் அனுஷ்டிக்கும்சத்தியாக்கிரகம் உலகநாடுகளையே உலுப்புகிறது. சாத்வீகப் போர்மட்டுமல்லாமல் ஆயுதந்தாங்கி நடைபெறும் போராட்டங்களுக்கும் சேர்ந்து இஸ்ரேல் நாட்டினைத் தோற்றுவிக்கிறது.

யூதஇனத்தின் அரசியல் போராட்டங்களை மையமாக வைத்து எழுதப்பட்ட 'புறப்பாடு' (EXODUS) என்ற கதை உலகப்பிரசித்தமானது. சுமார் மூன்றே முக்கால் மணிநேரம்ஓடும் படத்தின் கதையை விபரிப்பதால் முடியாது. கொழும்பு ரியோபடமாளிகையில்திரையிடப்பட்டுள்ள இப்படம், ஒரு இனத்தின்விடுதலைக்காக நடைபெறும் போராட்டங்களையும், அவ்வினமக்கள் புரியும்தியாகங்களையும்சித்திரிப்பதனல், இந்நாட்டுத் தமிழ் பேசும் மக்களுக்கு பெரும் உபயோகமாக அமையும் என்ற நோக்குடனேயே இப்படத்தை விமர்சிக்கத்துணிந்தோம்.

சாதாரண படங்களைப் போன்று சிறியதல்லாமல் 70 மி.மி. படமாக விருப்பதனல் கொழும்பில் உள்ள ரியோவில் மட்டும்தான் இப்படம் காட்டப்படும். வசதி உள்ளவர்கள் இந்த அரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துவது நல்லது.

-நாதன்

## ஞான ஒளிபரப்பும் ஞாயிறு

இந்தியாவும் இலங்கையும் வரலாறுகளின் வரம்புக்கு முன்பிருந்தே ஒன்றுடன் ஒன்றுதொடர்புபட்ட நாடுகள். இந்தியாவில் இடி இடித்தால் இலங்கையில் மழைபொழியும் என்று கூறினல்மிகையாகாது.அரசியலாலும், ஆழ் கடலாலும் இருநாடுகளையும் பிரிக்கமுடியலாமே தவிர கலை கலாச்சாரம் பண்பாடு மதக்கோட்பாடு முதலியவற்றால் இவ்விரு நாடுகளையும் எந்தச் சக்தியும் பிரித்துவிட முடியாது.

புத்தனை ஈன்று வளர்த்த இந்திய மாதா அவனுடைய தர்மத்தை தன்னகத்தே வைத்திருக்க முடியவில்லை. இலங்கைக்கு புத்த தர்மத்தை பாரதி தந்துவிட்டாள். அந்நெறியை இங்குகொணர்ந்த ஞானத்தூதுவர்கள் அசோகனின் மைந்தன்-மகிந்தன்,மகள் சங்கமித்தை இருவரும் வந்த அதேநாளில் இரண்டாயிரம் வருடங்களின் பின்பு இமயத்திலிருந்து மற்றுமொரு ஞானத்தூதன் வந்துள்ளான். அந்த ஞானதூதன் தான் ஸ்ரீமத் சுவாமி சிதானந்தாஜி.

புத்தனின் போதனைகளை இங்கு கொண்டு வந்தவனும் ஆசாபாசங்களைக் கடந்துவிட்ட ஒரு துறவி. தெய்வீக ஒளியை தேசமெல்லாம் பரப்பும் தெய்வ நெறிக்கழகத்தின் செய்தியை இன்று இங்கு கொண்டு வந்துள்ளவரும் உலகப்பற்றை உதறித்தள்ளிய ஒரு சன்யாசிதான். பௌத்தத்தை ஏற்ற இந்நாடு சுவாமி சிவானந்த சரஸ்வதியின் தெய்வீகநெறியினையும் ஏற்கும் என்பதில் அணுவளவும் ஐயமில்லை. அதற்கான அறிகுறிகளையும் சுவாமிஜிக்கு அளிக்கப்பட்டு வரும் வரவேற்புகளிலிருந்து நன்கு அறியக்கிடக்கிறது.

தென்னிந்தியாவில் செல்வச் செழிப்பான குடும்பத்தில் 1916ம் ஆண்டு ஜூன் 24ம் திகதி பிறந்து ஸ்ரீதர் என்ற நாமத்துடன் வளர்ந்துவந்தார். தகப்பனர் ஒரு சமீந்தார் என்றால் குடும்பத்தின் செழிப்புக்குக் குறையுமுண்டோ? சென்னை லயோலாக்கல்லூரியில் பயிலும் போதே ஸ்ரீதரனிடத்தில் ஞான ஒளி பரவத்தொடங்கியது. போகத்தில் புரளவேண்டிய பாலகன் தன் தேகத்தை ஒடுக்கி வாழத்தலைப்படக் கண்ட பெற்றாரும் உற்றாரும் வேதனை அடைந்தனர் ஆனலும் ஸ்ரீதரனின் ஞானப்பாதையின் தத்துவத்தை விரைவிலேயே அனைவரும் கண்டுகொண்டனர்.

கலைப்பட்டதாரியான ஸ்ரீதர் இமயமலையடிவாரத்திலுள்ள ரிஷிகேசத்தில் தபோவனம் அமைத்திருந்த ஸ்ரீமத் சுவாமி சிவானந்த சரஸ்வதிஅவர்களுடன்தொடர்புகொண்டு தமது 27 வது வயதில் துறவறத்தை மேற்கொண்டு 1943 முதல் சுவாமி சிதானந்தரானர்.

தெய்வீக நெறியைப் பரப்பபல்லாண்டுகள்மேற்கு நாடுகளில்பிரயாணம்செய்த சுவாமிஜி, சிவானந்தாஜியின் மகா சமாதிக்குப்பின்னர் உலக திவ்ய ஜீவன சங்கங்களுக்கெல்லாம் தலைவராகி, ஞான ஒளி பரப்புகின்றார். இலங்கையில் அவர் பாதம் பட்ட இடங்கள் எல்லாம் புனிதமடைகின்றன.

வாழ்க சிவானந்தர் நாமம் வாழ்க சிதானந்தாஜி. வாழ்க தெய்வீக நெறி



தென்னகத்தில் 15 நகரங்களில் தொடர்ந்து 25 வாரங்கள் ஓடி வெற்றிக்கொடி நாட்டிய பலவர்ணச் சித்திரமான 'லவகுசா'வில்,இப்படம் சினிமாஸ் திரைகளுக்கு விரைவில் வருகிறது,

## 'அப்பாவின் ஆசை'

சிறுவர்களுக்கென தனியாக மூன்றுமணி நேர நாடகம் எதுவும் இதுவரை தமிழில் நடைபெற்றதில்லை. இப்புதிய முயற்சியில் பிரபல நாடகக் கலைஞர்களான டி. கே. எஸ். சகோதரர்கள் துணிந்து இறங்கியிருக்கிறார்கள். இவர்களின் புதிய முயற்சியான 'அப்பாவின் ஆசை' என்னும் சிறுவர் நாடகம் சென்னை திருவல்லிக்கேணி கலா மண்டப அரங்கில் தமிழ்நாடு சங்கீத நாடக சங்கத்தின் சார்பில் நடைபெற்றது.

இந்நாடகத்தை பிரபல குழந்தை எழுத்தாளரான திருச்சி பாரதன் எழுதியுள்ளார். நாடகத்திற்கான பாடல்களையும் அவரே எழுதியிருக்கிறார்.

சிறுவர்களே முக்கிய வேடங்களைத்தாங்கும் இந்த நாடகத்தில் கலைத்தூர் கண்ணம்மா புகழ் கமலகாசன், கலைஞர் டி.கே. பகவதியின் மகன் கண்ணப்பா மற்றும் அண்ணாதுரை, காதர் முதலிய சிறுவர்களும் நடிக்கிறார்கள்.

பிருந்தாஎன்னும்ஒருபுதிய குட்டி நட்சத்திரம் இந்த நாடகத்தில் அருமையாக நடித்திருப்பதாக தென்னிந்திய பத்திரிகைகள் கருத்து வெளியிட்டுள்ளன.



மனோரமாவின் காதல் நாடியின் வேகத்தைக் கணக்கிடுகிறார்போலும் நாகேஷ். எதற்கும், சிலோன் எண்டர்டெயின் மெண்ட்ஸ் திரைகளுக்கு வரவிருக்கும் ஏ. எல். எஸ்.சாரின் 'சாந்தி' விடைகூறும்.

திருடக் கூடாது, பிச்சை எடுக்கக் கூடாது, சோம்பேறியாய் வாழக்கூடாது, உழைத்துப் பிழைத்து உயர வேண்டும் என்ற உயர்ந்த இலட்சியங்களைப் போதிக்கும் இந்த 'அப்பாவின் ஆசை' நாடகம் தமிழ் சங்கீத நாடகச் சங்கத்தாரின் நாடகப் போட்டியில் தேர்ந்தெடுக்கப்பட்டு மூவாயிரம் ரூபாய் பரிசைப் பெற்ற குழந்தைகள் நாடகம் என்பது குறிப்பிடத்தக்கது.



கொழும்பு பாமன்கடை இரோஸ் சினிமாவில் விரைவில் திரையிடப்படவிருக்கும்'ஸ்டேஷன் சிக்ஸ் சகாரா' என்ற ஆங்கிலப்படத்தில் கரோல்பேக்கரும் பீட்டர் வான்விக்கும் தோன்றும் உணர்ச்சிகரமான கட்டம்.

## இருபதாம்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

களைப் பல்லாயிரக்கணக்கில் மக்களிடை பரப்புவதோடு அவர் அவ்வவ் காலத்தில் வெளியிட்ட தனிக் கவிதைகளையும் அவரின் வளம் படைத்த மூளையில் பட்டுத்தெறித்த நன் முத்துக்களையும் தொகுத்து நூல்களாக வெளியிட வேண்டும். அத்தோடு அவர் வாழ்ந்த குடிசையும் எமது வழித்தோன்றல்கள் வாழ்த்தும் முறையில் பாதுகாக்கவேண்டும். இதுவே மறைந்தும் மறையாத அப்பெருமகனுக்கு யாம் செய்யும் தலையாய கைம்மாறு.

### வண்ணார்பண்ணை

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையில் அண்மையில் அமைக்கப்பட்ட தமிழரசுக் கட்சிக் கிளை உத்தியோகத்தர்கள் வருமாறு:-

தலைவர்: திரு. மு. மகாலிங்கம், உப தலைவர்கள் திரு. க. விஷ்ணு காந்தி, திரு. சி. இராசதுரை, பொதுக்காரியதரிசி: திரு. மு. க. சுப்பிரமணியம், உப காரியதரிசி: திரு. த. அனந்தவிநாயகம், பொருளாளர்: திரு. செ. குமாரவேலு.

பத்துப்பேர்கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக மக்களுக்கு உதவி செய்வதே தமிழரசு எம். பிகளின் கடன்

## அக்கரப்பத்தனையில் நவரத்தினம் பேச்சு

'இலங்கைத் தமிழரசுக் கட்சியில் இருக்கும் 14 பாராளுமன்ற உறுப்பினர்களும் எப்பொழுதும் மலையகத் தமிழ்மக்களுக்கு உதவிசெய்ய தயாராகவே இருக்கின்றனர். தமிழ் மக்களில் அக்கறையுள்ள வேறு எந்த அரசியல் கட்சிக்கோ இயக்கத்துக்கோ இவ்வளவு பாராளுமன்ற உறுப்பினர்கள் இல்லை. அதுவும் தவிர கட்சியில் இருக்கும் எத்தனையோ சட்ட நிபுணர்களும் நியாயவாதிகளும் என்றும் கழகத்தின் உறுப்பினர்களுக்கு வேண்டிய இலவச சட்ட ஆலோசனைகள் கூற தயாராக இருக்கின்றனர்.'

சாவகச்சேரிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வி. என். நவரத்தினம் இம் மாதம் 6ந் திகதி அக்கரப்பத்தனைக் கடை வீதியில் இலங்கைத்தொழிலாளர் கழகத்தின் ஆதரவில் நடைபெற்ற ஓர் மாபெரும் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

இம் மாதம் 6ந் திகதி முற்பகல் 11 மணியளவில் இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் புதிய அலுவலகம் ஒன்றை திரு. ஈழவேந்தன் அக்கரப்பத்தனையைச்சேர்ந்த பசுமலை புதிய கடை வீதியில் திறந்து வைத்தார்.

அங்கு கூடியிருந்த தோட்டத் தொழிலாளர்கள், பிரமுக்கியஸ்தர்களின் மத்தியில் அவர் பேசுகையில்தமிழ் தொழிலாளர்களின் ஒற்றுமை பற்றியும், தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தில் மலையகத் தமிழ் மக்களின் பங்கு பற்றியும் விரிவாக விளக்கினுர்

### பொதுக்கூட்டம்

இத்திறப்பு விழாவைத் தொடர்ந்து பகல் 1 மணியளவில் அக்கரப்பத்தனைக் கடை வீதியில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இக் கூட்டத்துக்கு இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் தலவாக்கொல்லைமாவட்டத் தலைவர் திரு பி. ராமன் தலைமை வகித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் திரு. வி. என். நவரத்தினம் தொடர்ந்து பேசுகையில் தமிழ் பேசும் தோட்டத் தொழிலாளர்கள் இலங்கை தொழிலாளர் கழகத்தில் மாத்திரமே சேரவேண்டும் எனக்கேட்டுக்கொண்ட அவர் அதற்கான காரணங்களையும் விளக்கினுர்.

அவர் மேலும் கூறியதாவது:.

"மற்றைய அரசியற் கட்சிகளினுல் நடத்தப்படும் தொழிற் சங்கங்கள் இப்பொழுது வகுப்புவாதக் கொள்கையை பின்பற்றுவதனுல் தமிழ் மக்களுக்கு அவைகளின் உதவி என்றும் நிரந்தரமாகக் கிடைக்காது. எனவே அவைகளைப் பின்பற்றுவதில் ஒரு

# மலை நாடு

வித பயனும் ஏற்படப்போவதில்லை'' அரசியற் சார்பற்ற தொழிற்சங்கங்கள் இதுவரை தமிழ் பேசும் தொழிலாளர்களின் நிலைமையைச் சீர்திருத்தவோ அல்லது அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவோ போதிய நடவடிக்கை எடுக்காததனுல் தான் தமிழ் பேசும் தொழிலாளர்கள் இன்றும் தொழிலாளர்களாகவும் அடக்கி ஒடுக்கப்பட்ட ஒரு இனமாக வறுமையில் வதங்கிவாழ்கின்றனர். இவர்களைத் தமிழ் அரசுக்கட்சியின் இலங்கைத் தொழிலாளர் கழகமே தகுந்தவழியில் நடத்திச் செல்ல முடியும்.

திரு. வன்னியசிங்கம் ஆரம்பித்துவைத்த இலவசக்கல்வி உதவியினுல் மலை நாட்டுத் தமிழ் மக்களின் பிள்ளைகள் எத்தனையோபேர் நல்நிலைக்கு வந்திருக்கின்றனர். இவ்வுதவியை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியும், இலங்கைத் தொழிலாளர் கழகமும் தொடர்ந்து செய்ய எண்ணியிருக்கின்றன.''

திரு. ஈழவேந்தன் உரை நிகழ்த்துகையில் சிறிமவோ சாத்திரி ஒப்பந்தத்தின்படி ஒருவரையும் கட்டாய அடிப்படையில் இந்தியாவிற்கு அனுப்பமுடியாதென்பதைக் குறிப்பிட்டு மலைநாட்டுத் தமிழ் மக்களை மனத்துணிவோடு ஈழம் எங்கள் தாய் நாடு என்ற உரிமை உணர்ச்சியோடு வாழும்படி வேண்டினுர்.

மலைநாட்டுமக்கள் தேயிலை செடிகளோடு மட்டும் நில்லாது வேறு சிறு சிறு கைத்தொழில்களில் கவனம்செலுத்தி தங்கள் பொருளாதாரத்தை வளம் படுத்தும்படி கூறினுர். அத்துடன் படிப்படியாக வட-கிழக்கில்உள்ள காணிகளில் குடியேறி கமத்தொழிலில் ஈடுபட்டு வடகிழக்கு தமிழ் மக்கள் வாழ்வோடு ஒன்றுபடும்படி வேண்டினுர்.

சிங்களம் மட்டும் சட்டத்தை மருந்தளவும் இரத்தம் சிந்தாது. எதிர்க்கின்ற ஆற்றல் எல்லாம் தமிழ் இயக்கத்திற்கு உண்டு என்று கூறி மலைநாட்டுத் தமிழ் மக்கள் அனைவரையும் தமிழில் அரசாங்கத்தோடும் தனிப்பட்ட நிறுவகங்களோடும் தொடர்புகொள்ளும்படி பணித்தார்.

இக்கூட்டத்தில் அரசாங்க எழுது வினைஞர் சங்கத்தின் சார்பாக கலந்துக்கொண்ட திரு. ச. தனபாலசிங்கம் மொழிவழி பிரிந்து தொழிற் சங்கங்கள் அமைக்க வேண்டி ஏற்பட்ட நிலைமையை விளக்கியதுடன் இச்செய்கைகளால் ஏற்பட்ட நன்மைகளையும் கூறினுர்.

அக்கரப்பத்தனைப் பகுதியில் இருக்கும் திருவாளர்கள் ஆர். எம். பெருமாள், ஐ. சிதம்பரம் அவர்களும் இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் நிர்வாகச் செயலாளர் திரு. இ. நாகேந்திரம் அவர்களும் சொற்பொழிவாற்றினுர்கள்.

## விடுதலை வேட்கை

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

கொடுத்துவிட்டு ஐயர் ஆபீசுக்குள்ளே வந்து, தாம் இன்னுரென்றும், சந்தேகப் படவேண்டாமென்றும் வேண்டிய ருசுவுடன் சொன்னுர். உடனே அவரை மெத்தைமேல் அழைத்துப் போய் எல்லா விசயங்களையும் விவரமாகப் பேசிக் கொண்டிருந்தோம்.

சில தினங்கள் ஐயர் ஸ்ரீநிவாசாச்சாரியார் வீட்டிலேயே தங்கியிருந்தார். பிறகுதான் ஐயர் தம் மனைவிக்கு உடனே புறப்பட்டு வரக் கடிதம் எழுதினுர். புதுவையிலேயே பெருமாள் கோயில் தெருவில் ஒரு வீடு வாடகைக்கு எடுத்துக் கொண்டார். ஐயரைச் சீமைக்கு அனுப்பிய உறவினர் பசுபதி ஐயர் அச் சமயம் இந்தியாவில் இருந்தார். ஐயரது கடிதத்தைத் தந்தியாகப் பாவித்து மனைவி பாக்கியலட்சுமி அம்மாளைப் புதுவைக்கு அழைத்து வந்தார். அவரது உதவியுடன் அய்யர் புதுவையில் புதுக் குடித்தனம் தொடங்கினுர். பசுபதி அய்யர் சுமார் ஒரு வாரம் ஐயருடன் தங்கியிருந்தார்; பிறகு தம் ஊருக்குத் திரும்பிப் போய்விட்டார்.

### இலக்கியப் பணி

பிரான்சிலுள்ள காமா அம்மையாருக்கும் தாம் புதுவைக்கு பத்திரமாய் வந்து சேர்ந்து விட்டதைத் தெரிவித்தார் ஐயர். அந்த அம்மாளும் ஐயர் குடும்பச் செலவுக்கு மாதந்தோறும் பணம் அனுப்பி வைக்கிறேன் என்று வாக்குக் கொடுத்தார். பசுபதி அய்யரும் அவசியமான பொழுது தெரிவித்தால் பண உதவி செய்கின்றேனென்று சொல்லிப்போனுர். சிறிது காலம் ஐயர் ஓய்வு எடுத்துக் கொண்டார். புதுவையிலிருந்தே பாரத மக்களுக்கு எவ்வாறு சேவை செய்யலாம் என்ற சிந்தனையில் ஐயர் ஆழ்ந்திருந்தார். முடிவில் இலக்கியத் தொண்டே சிறந்ததெனத் தீர்மானித்து அதில் ஈடுபடலானுர் அவர்.

முதல் மகாயுத்தம் முடிந்து, பாரதியார் சென்னை திரும்பிக் கொஞ்சகாலம் ஆன பிறகு தான் ஐயர் பயமின்றி சென்னை திரும்ப முடிந்தது.

—தினமணி சுடர்

## கிராமிய இலக்கியம்

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

பச்சைக் குழந்தையைப்
போல்—மச்சான்
'பச,பச'ன்று பேசுகிருர்'

அவள் இந்தப் பாட்டைப் பாடும்போது அவனையே பார்த்தான். அவள் அவனையே பார்த்துப் பாடிக் கொண்டிருந்தாள். அந்த நேரத்தில், 'அவளை அப்படியே கட்டிப் பிடித்து, ஒரு முத்தம் கொடுத்தாலென்ன' என்று அவனுடைய மனம் எண்ணியது. ஆனுல் அவன் செய்து விடவில்லை. மதலைமொழி பேசும் குழந்தையைப் போலவே காட்சி தந்து கொண்டிருந்த அவளைப் பார்த்துப் பாடுகிறுன்.

'பச்சைக் குழந்தை
' யென்று
பகடியேன் பண்ணுகிருய்?
—என்ர
மச்சி, எனக்கு நீதான்
பச்சைக் குழந்தையடி!'

இதைக் கேட்டதும் அவள் 'இப்படியே இருவரும் மாறி மாறி பேசிக் காலத்தைக் கழிப்பது என்பதுதான் உங்கள் முடிவா?' என்று கேட்டு விட்டாள்.

அவன் எதுவுமே பேசவில்லை. அவள் திரும்பவும் இதையே கேட்டாள். அவன் பாடினுன்.

'உன்னை மணந்து
உயர்ந்த கட்டில் மேல்
வைத்து—நான்
கன்னம் திருப்பிக்,
கதைக்க
வெகு நாட்களில்லை'

இதைக் கேட்ட அவளுக்கு ஆனந்தம் துள்ளிக் குதித்தது. அவன் அவளை அணைத்தான். அவள், இருவரும் திருமணக் கோலத்தில் இருப்பதைக் கற்பனைசெய்து கொண்டு அவன் மடியிலே விழுந்து புரண்டாள்.

## அங்கமெல்லாம்....

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

நாளைக்கே இந்தத் தோட்டத்த விட்டுப்புட்டுப் போகப் போறேன்னுசொன்னுரு. ஆனு. நான் அதுக்கு மறுப்புச் சொன்னன். ஆமாம். நீ குத்தஞ் செய்யயில்ல, நான்தான் இதுக்கெல்லாங் காரணமுன்னு சொன்னன். அதனுல நான் நாளைக்கே இந்தத் தோட்டத்தவிட்டு கொழும்புக்குப் போறன்னு வெட்டு ஒன்னு துண்டு ரெண்டெங்கிருப் போல சொல்லிட்டன். அதாலதான் நீ இன்னக்கி வீட்டுக்குப் போகுமுன்னுல ஒன்னய் இங்கின சந்திச்சி, விசயத்த சொல்லிட்டுப் போலாம்னு வந்தன்', என்ருன்.

ஐயோ! அதை அவன் ஏன் தான் சொன்னுனே. ஆம். லச்சுமியின் கண்களிலிருந்து கண்ணீர், அந்தப் பீலியிலிருந்து தண்ணீர் விழுகிற மாதிரி விழத் தொடங்கியது. பொல பொல என்று கொட்டியது. மனமுடைந்து போனுள் மங்கை நல்லாள். உடனே அவள் நெஞ்சம் குமுறுவாள்...


'ஆசை மச்சான்
அருமை மச்சான்
அங்கமெல்லாம்
நெறஞ்ச மச்சான்
உன் அழகான
உடலினையும்
அழிக்க வந்த
பாவியாரோ...'

கறுப்பண்ணனுக்கு ஒன்றும் நடந்துவிடவில்லை தான். என்றுலும் அவள் மனம் அவ்வளவு தூரம் வருந்தியது. ஆதலால்தான் ஏதோ கனவுலகில் சஞ்சரிப்பது போல், 'அங்கமெல்லாம் நெறஞ்ச மச்சான்...உன் அழகான உடலினையும் அழிக்க வந்த பாவியாரோ' என்று கேட்டு விட்டாள். 'ஆம். நீ கொழும்புச் சீமைக்குப் போனு ஒன் உடம்பு துரும்பா போயிடும். ஏன் என் ஒடம்பு எளைச்சி போயிடும். ஒன் ஒடம்பு என்னத்துக்காகும்' என்று கூட கேட்டுவிட்டாள். ஏன் கேட்க மாட்டாள்? அவளேசொல்கிருளே அவளின் அங்கமெல்லாம் நிறைந்த மச்சானும். அதற்குமேல் அவள் வேறு எப்படிச் சொல்ல முடியும். தன் உடலின் ஒவ்வொருஅங்கத்திலும் உறைந்திட்டானும் அவன்.

பின், பிரிய முடியாமல் பிரிந்தனர். ஏனெனில், கறுப்பண்ணன் தான் எப்படியும் நாளைக்குப் போகத்தான் போகிறேன் என்று விட்டான். போகுமுன், நாளையும் அவளைவிடிய ற்காலையிலேயே சந்திப்பதாகச் சொன்னுன். உடைந்த இரு உள்ளங்கள் உற்ற தம் வீடுகளை நோக்கிச் சென்றன. திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே சென்றுர்கள். பிணைப்பு அத்தனைத்தூரம் இருந்தது.







# ரிஷி லேகியம்

ரிஷி கருணைக் கிழங்கு லேகியம்

ரிஷிபடம் உள்ளதாவெனப் பார்த்து வாங்கவும்

மலச் சிக்கலுக்கும், மூல வியாதிக்கும், மூல முளைகள், இரத்த மூலம், சீழ் மூலம், வெளி மூலம், உள் மூலம், பௌந்திர கை கால் அசதி. சோம்பல், அஜீரணம், பசியின்மை, பத்தவாயு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், இடுப்பு வலி, நெஞ்சு வலி, புற்றுகள், கண் கை கால் திரேக எரிச்சல், தேக மெலிவு, மூலச் சூட்டினுல் உண்டாகும் எல்லா வியாதிகளையும் உடனே கண்டிக்கும்.

குறிப்பு

அசல் R. S. பதிமருந்துகளும், திருச்சிறுப்பள்ளி குரு மருந்துகளும் கேசவர்த்தனி எண்ணையும் மற்றும் ரிஷி மருந்துகள் முதலியவைகளும் கிடைக்கும்.

விபரமடங்கிய கேட்லாக் இனும்

15 நாள் டின் ரூபா 3-50
30 நாள் டின் ரூபா 6-50
தபால் செலவு -/95

63 வருட பரம்பரை வைத்திய நிபுணர்

ஞானசுந்தர வைத்தியசாலை,
187, செட்டியார் தெரு, கொழும்பு-11.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறுகால் மடம்

## 7. தந்தத்திற் செய்த யானை

### செங்கை ஆழியான்

உடையார் சுப்பிரமணியம் ஒரு பெரிய மனிதர். வண்ணார்பண்ணை மக்களுக்கு அவரிடம் தனியான அன்பு. எந்த விசயமாக இருந்தாலும் அவரிடம் யோசனை கேட்டுவிட்டே செய்வார்கள். அவருடைய நல்ல குணத்தினால் ஏராளமான செல்வம் அவரிடமிருந்தது.

அவருடைய வீடு பெரிய ஒரு மாளிகை. அக்கால வீடுகள்போலத் தாழ்ந்த தாழ்வாரத்தையும், வெளிச்சாலையையும், தலைவாயிலையும் உடைய எட்டுச்சாரம்வீடு. அந்த வீட்டிலேவிலையுயர்ந்த பல பொருட்கள் நிறைந்திருந்தன. மேசை கதிரைகள் உயர்ந்த கருங்காலிகளில் செய்யப்பட்டிருந்தன.

அவருடைய மாளிகையின் வெளிக்கதவைத் திறந்து கொண்டு மாணிக்கச் சித்தப்பாவும், தில்லையும் உள்ளே சென்றனர்.

தில்லை பலமுறை அவ்வீட்டிற்கு வந்திருக்கின்றான். பெரியவரோடு பேசியுமுள்ளான். அவருடைய சிவப்புக் குதிரையைப் பார்ப்பதென்றால் இவனுக்கு மிகுந்த ஆசை.

தலைவாசலில் 'ஈசிச்சியரி'ல் படுத்திருந்த உடையார் இவர்களை எழுந்து மகிழ்வோடு வரவேற்றார். வயது ஐம்பதிற்குமேல் இருக்கும். என்றாலும் அவருடல் வலுவின்னும் குறையவில்லை. குதிரைச் சவாரி செய்து செய்து அவருடல் கட்டுக்குலையாமல் இருந்தது.

சித்தப்பாவும், தில்லையும் கதிரைகளில் அமர்ந்து கொண்டனர்.

'இவனை உங்களுக்குத்தெரியுந்தானே? உங்கள் வீட்டில் கள்ளர் கண்போட்டிருப்பதை அறிவித்தவன் இவன்தான்! இவனைப் பார்க்க வேண்டும்என்றீர்கள்! கூட்டி வந்திருக்கிறேன்!' என்று மாணிக்கச் சித்தப்பா தில்லையைச் சுட்டிக்காட்டிக் கூறினார்.

உடையார்மகிழ்ச்சியோடு ஏதேதோ கூறினார். சித்தப்பாவும், அவரும் ஏதேதோ பேசிக் கொண்டார்கள். அவையெல்லாம் தில்லையின் காதுகளில் ஏறவில்லை. சற்று முன் வீட்டில் மாணிக்கச்சித்தப்பா தனக்குச் சமாதானம் கூறியதை எண்ணிப் பார்த்தான்.

'தில்லை! நீயேன் கலங்குகிறாய், என்று எனக்குத் தெரியும்! அப்படியொன்றும் நீ நினைப்பதுபோல இருக்காது! பயப்படாதே, உன் அப்பாவை நான் நன்கறிவேன்! அவர் இப்படித் தவறான வழியில் போகக்கூடியவரல்லர்! எதற்கும் அன்றிரவு நடந்தவை அவருக்கு எப்படித்தெரியும் என்று பக்குவமாக விசாரித்துப் பார்க்கின்றேன்! பயப்படாதே...!'

சித்தப்பாவின் ஆறுதல் மொழி அவனுக்குப் புதுத் தெம்பையளித்தது.

'சித்தப்பா! அவரிடம் விசாரிக்கும்போது கவனமாக விசாரியுங்கள்! அவர் குடித்துவிட்டு இருக்கேக்கை போய்க் கேட்டுவிடாதீர்கள்!' என்றான்.

'தம்பி! நீ எத்தனையாம் வகுப்புப் படிக்கிறாய்?' என்று உடையார் கேட்ட குரல் கேட்டுத் திரும்பி அவரைப் பார்த்தான், தில்லை.

'எட்டாம் வகுப்பு!' என்று கூறினான்.

'கெட்டிக்காரன்! என்னவிருந்தாலும் எனக்கு நீ பெரிய உதவி செய்திருக்கிறாய். நீ மட்டும் கூறாதிருந்தால் இன்று நான் ஒட்டாண்டியாக றோட்டில் நின்றிருப்பேன்!' என்று அவர் அவனைப் புகழவே அவனுக்கு வெட்கமாகிவிட்டது; தலையைக் குனிந்துகொண்டான்.

'ஐயா, நீங்க இனியும் கொஞ்சம்கவனமாகத்தான் இருக்கவேண்டும்! ஒருக்காத் திட்டம்போட்ட கள்ளர் மறுபடியும்முயலலாம், கவனம்!' என்றார், மாணிக்கச் சித்தப்பா.

'ஏம், தம்பி! நீ கூறுவது சரி! நான் மூன்று காவல்காரரைப் போட்டிருக்கிறேன்! என்னிடம் துப்பாக்கியுமிருக்கு' என்றவர் தொடர்ந்தார்; 'தம்பி, மாணிக்கம்! நீயும் கொஞ்சம் இந்தப்பக்கம் இரவிலே வா...'

சித்தப்பா ஒப்புக்கொண்டார் தில்லையின் மனம் ஒரு நிலையில்லாது தவித்துக் கொண்டிருந்தது. சிவப்புக் குதிரை தூரத்தில் மேய்ந்து கொண்டிருப்பதைக் கண்டு எழுந்திருந்தான். எழுந்தவன் கண்கள் சுவர் மாடத்தில் அழகிற்காக வைக்கப்பட்டிருந்த ஒரு பொருளின் மீது பதிந்து அப்படியே நின்றன.

அது தந்தத்தாற் செய்யப்பட்ட ஒருயானைப்பொம்மை வளவளப்பான அதன் தந்தவுடல் மினுமினுத்தது. துதிக்கையைப் பிளிறுவதுபோல உயர்த்தியிருந்தது. அதன் சிறிய கண்களில் மணிகள் இரண்டு பதித்திருந்தார்கள். யானையை உற்றுப் பார்த்தான். அதன் ஒரு தந்தம் உடைந்து காணப்பட்டது.

தில்லையின் கண்கள் அந்தத் தந்த யானையின் மேற் பதிந்திருப்பதைக் கவனித்த உடையார், 'தம்பி! உனக்கு வேணுமா? நீசெய்த உதவிக்கு இதைத் தந்தால் என்ன?' என்று வினவினார்.

'பெரியவர்கள் விரும்பித் தருவதைத் தட்டாது வாங்க வேண்டும்' என்று அவன் அம்மா கூறியிருக்கிறாள். அதே அம்மா இன்னொன்றையும் அவனுக்குக் கூறியிருக்கிறாள். 'ஒருஉதவியைச்செய்து விட்டு அதற்கு விலையாக ஒன்றையும்வாங்கக்கூடாது' என்று.

'வேண்டாம், ஐயா!' என்றான் தில்லை.

அதன் பின் இருவரும் விடைபெற்றுத் திரும்பினர். வீடு திரும்பும்போது தில்லை, மாணிக்கச் சித்தப்பாவிடம் கேட்டான்:

'சித்தப்பா! எனக்கு ஒரு விடயம் தெரியவேண்டும்! என் ஐயாவிற்கு நான் கூறாமல், என்னைக் கள்ளர் துரத்தியது எப்படித் தெரிந்தது என்று?'

மாணிக்கச்சித்தப்பா விசாரித்துத் [illegible] கொண்டார். அவர் விசாரிக்கவேண்டிய [illegible] ஏற்படாமலே அந்த உண்மை வலியத் தெளிவாகிவிட வேண்டிய நிலைமை மறுநாள் ஏற்பட்டது.







# புதுமைகள் பாரீர் பாரினிலே-(44)

-அன்ரனி பெர்னாண்டோ, கிரிலப்பனை-

## எழுத்தாளர் விரும்பும் விந்தைப் பழக்கங்கள்

ஒரு சுவையான கதையோ கட்டுரையோ கிடைத்தால் ஒரே மூச்சாக முழுவதையும் படித்து முடிக்கும் வரை வாசகர்களுக்கு வேறெந்த வேலையையும் செய்யத் தோன்றாது. படித்துச் சுவைப்பது சுலபமான செயல் தானே. எவரும் நினைத்தவுடன் படித்து விடலாம். ஆனால், அதை எழுதுவது மட்டும் ஏனோ நினைத்தவுடன் செய்துவிட முடியாத ஒரு செயலாக இருக்கிறது. புகழ் வாய்ந்த எழுத்தாளர் பலருக்கு எழுதுவதற்கு வேண்டிய கற்பனை ஒரு குறிப்பிட்ட சூழலில் மட்டுமே ஊற்றெடுக்கிறது. உதாரணத்திற்குச் சிலரை எடுத்துக் கொண்டு தமக்குப் புகழ்தேடித்தந்த படைப்புகளை அவர்கள் எத்தகைய சூழலில் எழுதினார்கள் என்று பார்க்கும் போது புதுமையாக இருப்பதோடு சிரிப்புவேறு பொத்துக் கொண்டு வருகிறது.

பிரபல நாவலாசிரியர் அன்ரன் செக்கொப்பிற்குப் புகழ் தேடித் தந்த கதை 'கேம் கீப்பர்' என்பதாகும். இக்கதையை அவர் பகிரங்க நீச்சல் குளம் ஒன்றை அடுத்துள்ள உடுப்புகள் மாற்றும் அறையினுள் வைத்து எழுதியிருக்கிறார். ஒஸ்கார் வைல்ட் என்ற நூலாசிரியர் 'சலோமி' என்னும் தனது நாடகத்தை பாரிஸ் நகரப் போசனசாலை ஒன்றில் வைத்து அங்குள்ள வாத்தியக் கோஷ்டியினர் வாசித்த இனிய இசையைக் கேட்டு இரசித்தவாறு எழுதியிருக்கிறார்.

புகழ்வாய்ந்த கவிஞர் யோன் மில்ட்டனின் சிறந்த படைப்புக்கள் அவர் குருடராக இருக்கும் காலத்தில் தோன்றின. கண்கள் தெரியாத போதும் அவர் பகற் பொழுதில் வீட்டு முற்றத்தில் அமர்ந்து வானத்தைப் பார்த்துக் கொண்டிருப்பார். பறவைகளின் இனிய கானங்களைக் கேட்டு இன்புற்றார். மலர்களின் நறுமணத்தை மணந்து மகிழ்ந்தார். இந்த வேளையில் தான் கவிஞர் மில்ட்டனின் கற்பனை ஊற்றெடுத்தது. குருடரான மில்ட்டனின் கவிதைகளை அவரது மக்கள் எழுதிக் கொடுத்தனர் 'பரடைஸ் லொஸ்ட்' என்பது அவர் எழுதிய காவியமாகும்.

எழுத்தாளர் ரிச்சட் பர்காம் இரண்டு பூனைகளை வளர்த்தார். ஒன்றிற்குப் பெயர் 'சாண்ஸ்' மற்றது 'செரி' அவர் எழுதும் போது ஒரு பூனையைத் தனது தோளின் மேல் வைத்துக்கொள்வார். அவரது மகள் மேரி மற்றப் பூனைக்கு நல்ல உடைகள் தைக்கப் போட்டு அவரது மேசையின் மேல் கை தொட்டிலினுள் விட்டுவைப்பாள். இந்தச் சூழலில் தான் அவருக்குக் கற்பனை ஊற்றெடுத்தது.

குழந்தைகளைப் பெரிதும் கவர்ந்த எழுத்தாளர் லூவிஸ்கரல். அவர் தங்கியிருந்த அறையின் சாளரத்தின் வழியே பார்க்கும் போது திறந்த வெளியில் மூன்று குழந்தைகள் தம்மை மறந்து விளையாடுவதைக் கண்டார். தினந்தோறும் மாலையில் விளையாடும் இந்தக் குழந்தைகளோடு பழகியதால் உண்டான அன்புதான் 'புதுமை உலகிற்குப் போன அலிசு' என்ற கதையை எழுதிப் பிரபலமடைவதற்கு அவருக்குத் துணை செய்தது.

அன்றூலான்ங் என்ற எழுத்தாளர் தனது நண்பர்களோடு திரியும் வேளையில் எழுதும் வழக்கமுடையவராக இருந்தார். புகையிரதப் பிரயாணத்தின் போது நண்பர்களோடு கதைத்துக்கொண்டே எழுதும் விந்தைப் பழக்கமும் இவருக்கு இருந்தது. தனக்கென ஒரு தனி அறையோ மேசையோ தேவைப்படாத விந்தை எழுத்தாளர் இந்த அன்றூ.

பயங்கரக் கதைகளையும் மர்மக் கதைகளையும் எழுதிக் குவித்த கதாசிரியர் எலிஸ் இரவில் படுக்கை அறையிலுள்ள கட்டிலின் மேல் இருந்தே இவற்றை எழுதினார். நள்ளிரவில் ஒரு மெழுகுவர்த்தியின் வெளிச்சத்தில் இவர் சற்றுநேரம் கண் அயர்வார். அதிகாலை இரண்டு மணிக்கு எழுந்து ஒரு மணி நேரம் அல்லது இரு மணி நேரம் எழுதுவார். இவர் பகலில் எழுதுவதானால் மங்கலான வெளிச்சமுள்ள தனது சாப்பாட்டறையில் போயிருந்து எழுதுவார்.

பெண் எழுத்தாளர் ஜோர்ஜ் சான்ட் அம்மையாருக்கு நூல்களை எழுதும் வேளையில் மேசையின் கீழ் ஓர் ஆமை இருக்கக் கண்டால் தான் நல்ல கற்பனை உதயமாகும். எனவே அவர் வீட்டில் செல்லமாக ஆமைகளை வளர்த்தார்.

# வளர்மதி வளர மருமகள் எழுதுவது....

'வளர்மதி' சுவையாக வெளிவருவது குறித்து மகிழ்கின்றேன். 'ஆறுகால் மடம்' நன்றாக இருக்கின்றது. 'செங்கை ஆழியா'வின் கதையல்லவா? 'புதுமைகள் பாரீர் பாரினிலே' புதுப்புதுச் செய்திகளைச் சுவைப்படத் தருகின்றது.

முன்பு தமிழ்க் கன்னியின் சித்திரத்தைத் தந்து கவிதைகள் எழுதுமாறு கேட்டீர்களல்லவா? அதே போன்று கவிதை புனைய வேறொரு விடயம்கொடுத்து எம்மை ஊக்குவித்தல் நல்லது.

இன்று நம் நாடும் நம்இனமும் இருக்கும் நிலையில் வருங்காலச் சிற்பிகளான மாணவர்களை நன்கு உருவாக்கினால்தான் எதிர்காலமாவது ஏற்றமுள்ளதாக அமையும். இப்பணியை 'வளர்மதி' போன்ற பகுதிகளே செய்ய வேண்டும். எனவே எமக்குப் பக்திமதி கூறி எம் உள்ளங்களை நன்முறையில் உருவாக்கும் ஒரு பகுதியை ஆரம்பிக்கலாம். இதை ஒரு கடித உருவிலமைத்து வெளியிடலாம். இவ் அறிவுரைகளைப் பெரியவர்கள் எழுதுவதே நல்லது.

இன்று இளைஞர்கள் முன்நிற்பது வேலையில்லாப் பிரச்சினைதான். எனவே பொருளாதார நிலையிற் பின் தங்கியிருக்கும் நம் நாட்டில் மாணவர்களே செய்யக் கூடிய சிறிய தொழில்கள் சிலவற்றைப் பற்றி இவற்றில் அனுபவமுள்ள யாராவது எழுதலாம்.

வரலாற்றில் இடம்பெற்றிருக்கும் சுவையான நிகழ்ச்சிகளையும், பெரியோர்களது வாழ்வில் நடந்த சம்பவங்களையும் அழகாகச் சுவைபட எழுதலாம்.

மற்றும் வழக்கமாக இடம் பெறும் அறிவுரைகள், அறிவு வளர்ச்சிக்குரிய வினாவிடைகள், விடுகதைகள், நகைச் சுவைத் துணுக்குகளையும் வெளியிடலாம். இவற்றையும், கவிதைகளையும் மருமக்களது கடிதங்களையும் மாதத்தின் கடைசி வாரத்தில் வெளியிடலாம்.

முதல் வாரத்தில் புதுமைகள் பாரீர் பாரினிலே, மாமாவின் கடிதம், வளர்மதி உறுப்புரிமைப் பத்திரம் என்பவற்றை வெளியிடலாம். இரண்டாம் வாரம் மருமக்களது கட்டுரை கதைகளை மட்டும் வெளியிடலாம்.

மூன்றும் வாரம் மாமா புதிதாக ஆரம்பிக்கப்போகும் நிகழ்ச்சிகளைச் சேர்க்கலாம்.

நான்கு வாரமும் தொடர் கதை வெளிவரலாம். இடையிடையே புதுமைகள் பாரீர் பாரினிலே'யை நிறுத்திவிட்டு வரலாற்றுச் சம்பவங்களையும் பெரியோர்களது வாழ்க்கைச் சம்பவங்களையும் வெளியிடலாம்

சி. யோகேஸ்வரி,
மூளாய்,
சுழிபுரம்.

**மாமாவின் குறிப்பு:**

மருமகள் யோகேஸ்வரி தெரிவித்துள்ள மாற்றம் பற்றி ஏனைய மருமக்களும் தங்கள் அபிப்பிராயங்களை எழுதியனுப்பலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களைக் கொள்ளை கொள்ளும் 4வது மகத்தான வாரம்!

ஜெனட்டல் மருதானை

ராணி (யாழ்ப்பாணம்) ராஜேஸ்வரா (மட்டக்களப்பு) ஜோதி (திருமலை) லிபேர்டி (அட்டன்) லிபேர்டி (பதுளை)

ஏ.ரோஸ் (பாமன் கடை)

சிட்டாடலின் வெற்றித் தயாரிப்பு

ஜெய்சங்கர்
வசந்தா
அசோகன்
நாகேஸ்
ராமதாஸ்
பண்டரிபாய்
மற்றும் பலர் நடிக்கும்

வசனம்: நாஞ்சில்ராஜப்பா

இசை: டி.ஆர். பாப்பா

ஒளி: பி.பி.லூக்காஸ்

கதை: டி.என்.பாலு

இனிமையான இசையமைப்பு!



# இரவும் பகலும்

தமிழ்திரை இதுவரைகாணாத சண்டைக் காட்சிகள்

தயாரிப்பு: ஜோஸப்தாமஸ்

டைரக்ஷன்: ஜோஸப்தளியத்

பின்னணி: டி.எம். சௌந்தரராஜன் சுசீலா சீர்காழி கோவிந்தராஜன்

பாடல்கள்: கவிஞர் ஆலங்குடி சோமு

---

# சினிமாஸ் திரைகளில் 25-ம் திகதி முதல்



ஜெமினி கணேசன், ராமராவ், எம். ஆர். ராதா, அஞ்சலிதேவி, மனோரமா

நடித்த

# லவ குசா

(கண்கவர் பலவர்ணச் சித்திரம்)

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு) விஜிதா (அட்டன்)

கடைசி வாரம்



கிங்ஸ்லி (கொழும்பு)
கல்யாணி (நாவலப்பிட்டி)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
விஜிதா (மஸ்கெலியா)
சரசாவி (அக்கரப்பத்தனை)
வசந்தா (புசல்லாவ)
சந்தியா (கம்பொளை)

# பச்சை விளக்கு

---

4 -வது வாரம்!

எல்பின்ஸ்டன் - ரீகல் மற்றும் திரைகளில்!

ஜன சமுத்திரம் அலை மோதுகிறது!

எம். ஜி. ராமச்சந்திரன் - சரோஜாதேவி - அசோகன் - ராஜம்மா - எம். ஆர். ராதா - சின்னப்பாதேவர்

மற்றும் பலர் நடித்த



# குடும்பத் தலைவன்





---



2-வது வாரம்

கெயிட்டி (கொட்டாஞ்சேனை)

விஜயா சௌத்திரி, ஜெக்தீப், ஜீவன், ஷம்மி, ஹெலன் தோன்றும்

# ராஜா (ஹிந்தி)

2-வது வாரம்

செல்லமஹால் (கொட்டாஞ்சேனை)

விஜயலட்சுமி - எஸ். வி. சுப்பையா - சகஸ்ரநாமம் - முத்தையா முத்துராமன் - பாலச்சந்திரன் - பேபி கல்பனா நடித்த

# பாதை தெரியுது பார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் ... கொழும்பு பண்டாரநாயக்க வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1965-ம் வருடம் யூன் மாதம் 20-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.